16.11.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காய்கறி வரத்து குறைவு:விலை திடீர் அதிகரிப்பு**

பெங்களூரு: தொடர்ந்து பெய்து வரும் மழையால் காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்து குறைந்ததால், அவற்றின் விலை அதிகரித்துள்ளது.பெங்களூரு சந்தைக்கு பீன்ஸ்,உருளைக்கிழங்கு, தக்காளி போன்ற காய்கறிகள் வரத்து கடந்த சில நாட்களாக குறைந்துள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா, தமிழகத்தில் இருந்து தக்காளி வரத்து குறைந்த தால், தக்காளி கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனையானது. பலத்த மழையால், காய்கறி விளைச்சல் பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.ஹாப்காம்ஸ் தகவலின்படி தக்காளி

கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்பட்டாலும் வெளி சந்தையில் தீபாவளியின்போது, கிலோ, 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்த விலை உயர்வு மேலும் சில நாட்கள் நீடிக்குமென தெரிகிறது.

மொத்த விற்பனை வியாபாரி ஒருவர் கூறியதாவது:பண்டிகை நேரத்தில் காய்கறிகளின் விலை திடீரென உயர்ந்தது எதிர்பார்த்தது தான். தக்காளியை பொறுத்தவரை கோலார், தமிழகம், ஆந்திராவிலிருந்து வருவதால், அங்கு பெய்யும் மழையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. வட கர்நாடகாவிலிருந்து வரும் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவை வரத்து சீரடைந்துள்ளது. இன்னும் சில நாட்களில் விலை குறைய வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**கர்நாடகாவில் விரைவில் அமலாகிறது:விவசாயத்திற்கு சோலார் மின்சாரம்**



பெங்களூரு:நாட்டுக்கு முன் மாதிரியாக இருக்க கூடிய, 'விவசாயம் - சோலார்' மின் உற்பத்தி திட்டம், கர்நாடகாவில் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.புதுப்பிக்கத்தக்க மின்சார மேம்பாட்டு அறக்கட்டளையான, ரினோவபல் எனர்ஜி டெவலப்மென்ட் டிரஸ்ட் சார்பில், 40 ஆயிரம் ஏக்கர் நிலத்தில், 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக, விவசாயிகளிடம் இருந்து மாத வாடகை அடிப்படையில் நிலம் பெறப்படும்.

அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, விவசாயிகள் மூலமாகவே மின்சாரம் உற்பத்தி செய்யவும், வேலைவாய்ப்பை உருவாக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்திலும், சோலார் மின்சார உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. முதல்கட்டமாக சித்ரதுர்கா மாவட்டம், பாலேனஹள்ளியில் செயல்படுத்தப்படுகிறது. 80 ஏக்கர் நிலத்தில், 10 மெகாவாட் சோலார் மின்சார உற்பத்தி செய்யப்படும்.

அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் குல்கர்னி கூறியதாவது:மின் உற்பத்தி திட்டத்துக்காக, விவசாயிகளிடம் இருந்து பெறப்படும், ஒரு ஏக்கருக்கு மாதத்துக்கு, 1,800 ரூபாய் வாடகை கொடுக்கப்படும். நிலத்தின் உரிமை விவசாயிகளிடமே இருக்கும். அதே நிலத்தில் விவசாயிகள் குறுகிய கால விளைச்சல்களை விளைவித்து கொள்ளலாம். இதற்கு தேவையான தண்ணீர், விவசாயத்துக்கு அதிநவீன உபகரணங்கள் அனைத்தும் டிரஸ்ட் சார்பில் தரப்படும். துவக்கத்தில் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களுக்கு புரிய வைப்பதற்குள், இரண்டு ஆண்டுகளாகி விட்டது.

சித்ரதுர்கா மாவட்டத்தில், 14 கிராம விவசாயிகள் தாமாக முன் வந்து, 'விவசாயம் - சோலார்' மின் உற்பத்தி திட்டத்துக்கு நிலம் கொடுக்க முன் வந்துள்ளனர். இத்திட்டம் முழுமை பெறும் போது, இம்மாவட்டத்தில், 5,000 ஏக்கரில், 'விவசாயம் - சோலார்' மின்உற்பத்தி செய்யப்படும்.

அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சூரிய கதிர்கள் மூலம் மின்சாரம் தயாரிக்க, 40 டிகிரி சோலார் பலகைகள் பொருத்தப்படும். இப்பலகைகள், 6 அடி நீளமும், 6 முதல் 10 அடி உயரத்திலும் இருக்கும். இதனால், விவசாயிகள் குறுகிய கால பயிரை பயிரிட எந்த பிரச்னையும் வராது.

இத்திட்டத்துக்காக ஒரு ஏக்கருக்கு, 115 கோடி ரூபாய் செலவாகும். 40 ஆயிரம் ஏக்கரில், 5,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக, அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள டிரஸ்ட் முன்வந்துள்ளது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## இயற்கை பாதிப்பு அழிவுகள்...நிரந்தர அணுகுமுறை தேவை!

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கியதில் நல்ல அம்சம், டெல்டா பாசன விவசாயி கள், தண்ணீர் தட்டுப்பாடு இன்றி நெல்லை களம் சேர்க்கலாம்.ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு முன், 'தானே' புயலில் உருக்குலைந்த கடலுார் மாவட்டம், இத்தடவை சந்தித்த மழை பாதிப்பால், மீண்டும் இழப்பை சந்தித்திருக்கிறது.துறைமுக நகரம், வர்த்தகம் பெருகி வரும் பகுதி, அதே சமயம் தோட்டப்பயிர், நெல் வளமும் கொண்ட மாவட்டம். குறைந்த கால இடைவெளியில் இயற்கை சீற்றம் தொடர்ந்து தாக்கும்போது, அதை சமாளிப்பது சிரமம்.

சென்ற தடவை, 'தானே' புயலின் போது, மின் கம்பங்கள் சரிவு, குடிநீர் பாதிப்பு, விளைச்சல் நிலங்கள் அழிவு, சாலைகள் ஜல்லி ஜல்லியாக மாறி மணற்பரப்பானது போல, இத்தடவையும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவு உச்சகட்ட பாதிப்பு பரிமாணம் இல்லை என்றாலும், மக்கள் இயல்பு வாழ்வை

நொறுக்கி இருக்கிறது. இம்மாதிரி சம்பவங்களில் உயிர்ப்பலி என்பதும், அதற்கு அரசு உதவி செய்வதும் முறையான செயலாகும்.

ஆனால், கடலூர் பகுதியில் மின் வினியோக சீரமைப்பில், 2,000த்திற்கும் மேற்பட்ட மின் பணியாளர்கள் ஈடுபட்டு அவசர கதியில் சீரமைப்பு செய்திருக்கின்றனர். ஆயிரக்கணக்கான கிராமங்கள், நகராட்சிகள் என, இப்பாதிப்பில் ஒட்டுமொத்த சீரழிவு ஏற்பட்டிருக்கிறது.

நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில், ஐந்து அமைச்சர்கள் நிவாரண பணியில் ஈடுபட்டது, அந்தத்துறைகள் விரைவாக செயல்பட வழிகாட்டி இருக்கிறது.தமிழகத்தில், பேரிடர் மேலாண்மை குறித்து பல்நோக்கு பார்வை தேவை என, பல்வேறு சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

நீலகிரி மலைப்பகுதியில் மண் சரிவு, ஏற்காடு மலைப்பகுதியில் மண் அரிப்பு, தென்பெண்ணை யில் அதிக வெள்ளம் வந்தால், கிராமங்கள் சந்திக்கும் இழப்புகள், அதிக மழையால் சென்னை உட்பட பெரிய நகரங்கள் மிதக்கும் அவலம், ராமநாதபுரம், சிவகங்கை போன்ற பகுதிகள் சந்திக்கும் வறட்சி ஆகிய பன்முக பாதிப்பு தொடர்கிறது.

இது தகவல் தொடர்புக் காலம் என்பதால், எங்காவது பாதிப்பு ஏற்பட்டதும், அது சில மணித்துளிகளில் பரவலாக வெளிவருகிறது. அரசு இயந்திரம் அதற்கேற்ப செயல்படும்போது, அதற்கான செலவினம் குறித்து முதல் கட்ட சிந்தனை தேவையில்லை. மாவட்ட ஆட்சியர் தலைமையின் அணுகுமுறையைத் தாண்டி, மாநில அரசு நேரடியாக கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது.

ஆளும் அரசின் குறைகளை பட்டியலிடும் எதிர்க்கட்சிகள், தமிழக மக்கள் சந்திக்கும் துயரத்தை ஒரே பார்வையில் அணுகும் வழக்கம் வராததற்கு, ஓட்டு அரசியல் ஒரு காரணமாகும்.

அதே சமயம், ஆட்சியில் உள்ளவர்கள் இம்மாதிரி துயரங்கள் வரும் பகுதிகளுக்கு என, சிறப்பு திட்டங்களை நிரந்தரமாக அமலாக்கி, அழிவு

ஏற்படுவதை குறைக்க வழி காண வேண்டிய நேரம் வந்திருக்கிறது. அரசு நிர்வாகம் என்பது, கட்சி எல்லைக்கு அப்பாற்பட்டது.

சுற்றுச்சூழல் பாதிப்பு காரணமாக, அதிக மழை, அதிக வெயில் அல்லது மழையின்மை, சூறைக்காற்று, கடல் நீர் உட்புகுதல் போன்ற பாதிப்புகள், இனி அடிக்கடி வரலாம் என்று சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் எச்சரித்து வருகின்றனர்.

இம்மாதிரி பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் மக்களுக்கு நோய்த் தொற்று பாதிப்பு அல்லது விளைந்த பயிர்கள் முற்றிலும் அழிதல், கால்நடைகள் சேதம் ஆகியவைகளுக்கு நிரந்தர தீர்வு காண தனி அமைப்பும், அதற்கென நிர்வாக அணுகுமுறைகளும் ஏற்படுத்தியாக வேண்டும்.

மத்திய அரசு, 'கூட்டுறவு பெடரலிசம்' என்ற அணுகுமுறையை, தனது திட்ட அணுகுமுறையில் அமல்படுத்த முன்வந்திருக்கிறது. நிதிப்பற்றாக்குறை பிரச்னை இல்லை என்பதை, அதன் மறைமுக வரி வசூல் விவரங்கள் எடுத்துரைக்கின்றன.

ஆகவே, தமிழக அரசு, இம்மாதிரி பிரச்னைகளை, வெறும் மகஜர்களாக மத்திய அரசுக்கு தெரிவிப்பதை தவிர்த்து, மத்திய அரசை அணுகி நிதியைப் பெற முயற்சிக்கலாம். இம்மாதிரி அழிவு நேர்ந்த பகுதிகளை ஒரு திட்டமிட்ட காலக்கெடு, உரிய திட்டங்களுடன், நிரந்தரமாக புதுப்பிக்க முயற்சி செய்தால் நல்லது.

## அணைகள் நீர் இருப்பு விவரம்:வெளியிட உயர் அதிகாரி தடை

தமிழக அணைகளின் நீர் இருப்பு விவரங்களை வெளியிட, பொதுப்பணித்துறை உயர் அதிகாரி ஒருவர் தடை விதித்துள்ளார். தமிழகம் முழுவதும், 85 அணைகள், பொதுப்பணித்துறையின் அங்கமான நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ளன. இதற்கென, அணைகள் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவு இயங்கு கிறது. இப்பிரிவினர், அணைகளின் நீர் இருப்பு விவரங்களை, தினமும் சேகரித்து வருகின்றனர். இத்தகவல்கள், நீர்வளத் துறையின் இணையதளத்தில், தினமும் வெளியிடப்பட்டன.

இணையதளத்தில்...விவசாயிகள், அணைகளின் நீர் இருப்பு விவரங்களை அறிந்து, சாகுபடி முன்னேற்பாடுகளை செய்தனர். ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன், நீர் இருப்பு விவரங்களை இணையதளத்தில் வெளியிடுவது நிறுத்தப்பட்டது. அதற்கு பதில், சென்னை, சேப்பாக்கம் எழிலக வளாகத்தில் உள்ள அணைகள் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவு அலுவலகத்தில் வழங்கப்பட்டது. அங்கிருந்து பெறப்பட்டு, பத்திரிகைகளில் வெளியாகும் இந்த தகவல்கள், விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருந்தன.

தற்போது, வடகிழக்கு பருவமழையால், அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது; ஒரு சில அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. அவற்றிலிருந்து விரைவில், உபரிநீரை வெளியேற்ற வாய்ப்பு உருவாகியுள்ளது. இத்தகவல்கள் வெளியிடப்பட்டால், பொதுமக்களும், விவசாயிகளும் முன்னெச்சரிக்கையாக இருப்பர்.

திடீர் தடை:ஆனால், அணைகளின் நீர் இருப்பு விவரங்களை வெளியிட, நேற்று காலை முதல், திடீரென தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை, அணைகள் இயக்கம் மற்றும் பராமரிப்பு பிரிவின் தலைமை பொறியாளர் கலீல் அகமது பிறப்பித்து உள்ளார். அரசிடம் இருந்து உத்தரவு வந்துள்ளதாக, துறை ஊழியர்களிடமும் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, நீர்வளத்துறை முதன்மை தலைமை பொறியாளர் திருமாறன் கூறுகையில், "அணைகளின் நீர் இருப்பு நிலவரங்களை வெளியிட, அரசு எந்த தடையையும் விதிக்கவில்லை. நான், வெள்ளம் பாதித்த கடலூார் மாவட்டத்தில் ஆய்வு பணியில் இருக்கிறேன். சென்னை வந்ததும் இதுகுறித்து விசாரிக்கிறேன்," என்றார்.

130 அடியை எட்டியதுமுல்லை பெரியாறு அணை:தமிழகம் மற்றும் கேரள மாநில எல்லையில், தேனி மாவட்டத்தை ஒட்டி உள்ளது முல்லைப் பெரியாறு அணை. இதன் மொத்த நீர்மட்ட அளவு, 152 அடி; மொத்த கொள்ளளவு, 105

டி.எம்.சி.,யாகும். அணையின் நீர்மட்டத்தை, 136 அடியில் இருந்து, 142 அடியாக உயர்த்த, 2014 மே மாதம், சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பித்தது.

தற்போது, வடகிழக்கு பருவமழையால், முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் மெல்ல அதிகரித்து வருகிறது. நேற்று, அணையின் நீர்மட்டம், 130 அடியை எட்டியது. நீர் வரத்து வினாடிக்கு, 1,058 கனஅடி; நீர் வெளியேற்றம் வினாடிக்கு, 511 கனஅடி; நீர் இருப்பு, 4.8 டி.எம்.சி.,யாகும்.

நீர்மட்டம் அதிகரித்து வருவதால், அணை பராமரிப்பு பணிகளில், தமிழக பொதுப்பணித்துறையினர் கவனம் செலுத்தி வருகின்றனர். நீர்வரத்து தொடர்வதால், விரைவில் நீர்மட்டம், 142 அடியை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.- -நமது நிருபர் --

## காய்கறி உற்பத்தியை அதிகரிக்க 13 கோடி ரூபாய்க்கு விதைகள்



தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில், பருவமழை நன்றாக பெய்து வருவதால், இதை பயன்படுத்தி, காய்கறிகள் உற்பத்தியை அதிகரிக்க, தோட்டக்கலைத் துறை திட்டமிட்டுள்ளது.

அதாவது, காய்கறிகள் சாகுபடி பரப்பை, 7 லட்சம் ஏக்கராக அதிகரிக்கவும், உற்பத்தியை, 78 லட்சம் டன்னாக உயர்த்தவும் தீர்மானித்து உள்ளது. இதற்காக, விவசாயிகளுக்கு மானிய விலையில், தரமான விதைகள் வழங்கப்பட உள்ளன. தோட்டக்கலை மேம்பாட்டு முகமை மூலம், 13 கோடி

ரூபாய்க்கு, பல்வேறு காய்கறிகளின் விதைகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

தோட்டக்கலை மேம்பாட்டு முகமை அதிகாரி ஒருவர் கூறியதாவது:வெண்டைக்காய், 5,028; பீன்ஸ், 1,000; கேரட், 1,113; பச்சை மிளகாய் 1,160; கத்தரிக்காய், 364; சின்ன வெங்காயம், 1,413; பெல்லாரி வெங்காயம், 1,423; தக்காளி விதை, 1,804 கிலோ கொள்முதல் செய்யப்படும். அத்துடன், முள்ளங்கி, சுரைக்காய், பாகற்காய், பூசணிக்காய், கொத்தமல்லி விதைகளும் சேர்த்து மொத்தம், 20 ஆயிரம் கிலோ விதைகள் கொள்முதல் செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கொட்டுது!

- 20 மாவட்டங்களில் அடைமழை...
- பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் விடுமுறை
- இன்னும் மூன்று நாட்களுக்கு மழை நீடிக்கும்

தமிழகத்தில், 20 மாவட்டங்களில் கனமழை கொட்டுவதால், பள்ளி, கல்லூரிகளுக்கு தொடர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. 'தென் மேற்கு வங்கக்கடலில், இலங்கை அருகே நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, தாழ்வு மண்டலமாக மாறுவதால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்னும், மூன்று நாட்களுக்கு கனமழை கொட்டும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.தமிழகத்தில், வட கிழக்கு பருவ மழை, அக்., 28ல் துவங்கினாலும், கடந்த ஒரு வாரமாக மாநிலம் முழுவதும் வெளுத்து வாங்கி வருகிறது. பல மாவட்டங்களில், மக்கள் வெளியில் தலைகாட்ட முடியவில்லை. இந்நிலையில், சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று கூறியதாவது:தென் மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள தீவிர

காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு வட மேற்கு திசையில் நகர்ந்து, நேற்று காலை, தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் அதையொட்டிய இலங்கை பகுதியில், தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலை கொண்டுள்ளது. அதனால், கடந்த, 24 மணி நேரத்தில் வட கடலோர மாவட்டங்களில், அனேக இடங்கள்; பிற மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது.

**கடல் கொந்தளிக்கும்:**

அதிகபட்சமாக, நாகை மாவட்டம், ஆணைக்காரன் சத்திரம் பகுதியில், 18 செ.மீ., சீர்காழியில், 17 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.அடுத்த, 24 மணி நேரத்திற்கு, தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழையை எதிர்பார்க்கலாம். வட கடலோர மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் கனமழை; ஓரிரு இடங்களில் மிக கனமழை; பிற மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் கனமழை பெய்யலாம். கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்பதால், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என, எச்சரிக்கப்படுகின்றனர். சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். விட்டு விட்டு மழை பெய்யும்; சில நேரங்களில், கனமழை பெய்யும். இலங்கை பகுதியில் நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி, தமிழகம் நோக்கி நகர்ந்து,காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளதால், தமிழகம், புதுச்சேரியில், இன்னும், மூன்று நாட்களுக்கு கனமழை நீடிக்கும்; அதை தொடர்ந்து, இரண்டு நாட்களுக்கு லேசான மழை இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## 20 மாவட்டங்களில் விடுமுறை:

கனமழையால், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலுார்,திருவண்ணாமலை, விழுப்புரம், நாகை, திருச்சி, நாமக்கல், வேலுார், திருவாரூர், ராமநாதபுரம், சேலம், கன்னியாகுமரி என, 14 மாவட்டங்களில், பள்ளி, கல்லுாரிகளுக்கும்; தர்மபுரி, கரூர், பெரம்பலுார், அரியலுார், தஞ்சை, நீலகிரி என, ஆறு மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில், இரண்டு நாட்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை பல்கலையில், இன்று நடக்க

இருந்த தேர்வுகளும், அண்ணா பல்கலை, அம்பேத்கர் சட்டப் பல்கலைகளில், இன்று முதல் நடக்க இருந்த தேர்வுகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.வேலுார், திருவள்ளுவர் பல்கலை தேர்வுகளும் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளன. புதுச்சேரி, காரைக்காலிலும் பள்ளி, கல்லுாரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## 140 வீரர்கள்:

தமிழகத்தில் கனமழை பெய்வதால், நிலைமையை சமாளிக்க, ஆந்திராவில் இருந்து, தேசிய பேரிடர் மீட்பு மேலாண்மை குழுவின், 10 பட்டாலியனைச் சேர்ந்த, 140 வீரர்கள், நான்கு குழுக்களாக தமிழகம் வந்துள்ளனர். சென்னை, விழுப்புரத்திற்கு, தலா, ஒரு குழுவினரும்; மற்ற, இரண்டு குழுவினர் அரக்கோணம் பட்டாலியனுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். மழை பாதிப்புள்ள பகுதிகளில் இவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

## சென்னையில் 9 செ.மீ.,:

சென்னையில், நேற்று முன்தினம் காலை, 8:00 மணிமுதல், நேற்று காலை, 5:30 மணி வரை, 1 செ.மீ.,

மழை தான் பதிவாகி இருந்தது. 5:30 மணி முதல், 11:30 மணி வரை கன மழை பெய்ததால், மீனம்பாக்கத்தில், 8 செ.மீ., மழை பதிவானது.மாலை, 6:30 மணி நிலவரப்படி, சென்னையில் சராசரியாக, 9 செ.மீ., மழை பதிவாகி இருந்தது. பகல், 1:30 மணி முதல், மாலை வரை அதிக மழை பெய்துள்ளது.



## இயல்பு அளவை மிஞ்சும் பருவ மழை:

வட கிழக்கு பருவமழை, 2004 முதல், 2011 வரை இயல்பு அளவு, இயல்பு அளவை மிஞ்சிய மழை என, பதிவாகி உள்ளது. 2005ல் இயல்பை விட, 79 சதவீதம் அதிகமாக மழை பெய்தது. 2012ல், 16 சதவீதம் குறைவாகவும், 2013ல், 33 சதவீதம் குறைவாகவும் பெய்தது. 2014ல், 2 சதவீதம் குறைவு. இந்த ஆண்டில், நேற்று வரை சராசரியாக, 34 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. வட கிழக்கு பருவ மழை காலமான, மூன்று மாதங்களுக்கு பெய்ய வேண்டிய மழை அளவு, 44 செ.மீ., என்ற இயல்பு நிலையை அடைய இன்னும், 10 செ.மீ., மழை தேவை. கனமழை தொடர்வதால், ஓரிரு நாளில், இயல்பு அளவை மிஞ்சும் என, தெரிகிறது.

### மின் வாரியத்திற்கு ரூ.16 கோடி இழப்பு:

சென்னை புறநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், மின் கம்பி மூலம் மின் வினியோகம் நடக்கிறது. தொடர் கனமழையால், 1,480 மின் கம்பங்கள்; 75 மின்சுற்று கி.மீ., அளவில், மின்கம்பிகள் அறுந்து விழுந்துள்ளன. ஒரு கம்பத்தின் விலை, 7,200 ரூபாய் என்ற அடிப்படையில், ஒரு கோடி ரூபாய்; 1 கி.மீ., மின் கம்பிகளுக்கு, 20 லட்சம் ரூபாய் என, 75 மின்சுற்று கி.மீ., கம்பிகளுக்கு, 15 கோடி ரூபாய் என, மொத்தம், 16 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

### இதுவரை 65 பேர் பலி:

தமிழகத்தில் பெய்து வரும் கனமழைக்கு இதுவரை, 65 பேர் இறந்துள்ளனர். இவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் ஜெயலலிதா, தலா, நான்கு லட்சம் ரூபாய் நிவாரணம் அறிவித்துள்ளார்.

### சென்னையில் கனமழை எச்சரிக்கை: மின்சார ரயில்கள் சேவை நிறுத்தமா?

சென்னையில், நேற்று அதிகாலை முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. வேலை நாளான, இன்றும், மழை தொடரும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருப்பதால், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பணிக்கு செல்வோர், வியாபாரம் நிமித்தமாக பயணிப்போர் என, அனைவரும்

அவதிப்பட உள்ளனர். இவர்களுக்காக, போதிய ரயில்களையும், பஸ்களையும் இயக்க வேண்டியது அவசியம். உயர்த்தப்பட்ட வழித்தடமாக உள்ளதால், சென்னை கடற்கரை - வேளச்சேரி இடையிலான மேம்பால ரயில் சேவை, கோயம்பேடு - ஆலந்துார் இடையிலான மெட்ரோ ரயில் சேவை ஆகியவை, மழை பாதிப்பில் இருந்து தப்புகின்றன. ஆகையால், மேம்பால பாதையில் செல்லும் மின்சார ரயில்களும், மெட்ரோ ரயில்களும் வழக்கம் போல் இயங்கும்.தெற்கு ரயில்வே அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மழையின் தாக்கம் அதிகம் இருந்தால், மேம்பால வழித்தடத்தில் மின்சார ரயில்கள் இயக்கத்தில், 10 முதல், 15 நிமிடங்கள் வரை தாமதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால், இயக்கத்தில் எந்த சிக்கலும் இருக்காது' என்றார்.

**மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியதாவது:**மழை பாதிப்பால், கோயம்பேடு - ஆலந்துார் இடையே நுாறடி சாலையில் மழைநீர் அதிகம் தேங்கியுள்ளது. இதனால், இருசக்கர வாகனங்களில் செல்வதை பலர் தவிர்க்கின்றனர். பஸ்சில் பயணித்தாலும், போக்குவரத்து நெரிசலால் தாமதம் ஏற்படுகிறது. இதனால், பருவ மழை துவங்கிய நாளில் இருந்து, மெட்ரோ ரயிலில் பயணிப்போர் எண்ணிக்கை, 60 சதவீதம் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## தினமும் இயக்கம் எப்படி?

*எம்.ஆர்.டி.எஸ்., என அழைக்கப்படும் மேம்பால ரயில் சேவையில், தினமும், 160 சர்வீஸ் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன

*சென்னை கடற்கரை - வேளச்சேரி இடையே அதிகாலை, 4:10 மணிக்கு துவங்கி, இரவு, 10:20 மணி வரை ரயில்கள் இயக்கப்படுகின்றன

*வேளச்சேரி - சென்னை கடற்கரை இடையே அதிகாலை, 5:00 மணிக்கு துவங்கி, இரவு, 11:20 மணி வரை ரயில்கள் இயக்கப்படுகின்றன

*காலை, 7:15 மணி முதல், 8:15 மணி வரை, 15 நிமிட இடைவெளியிலும், 8:15 மணி முதல், 10:15 மணி வரை, 10 நிமிட இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படுகின்றன

*மதியம், 12:00 மணிக்கு மேல், 20 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கம் இருக்கும்

*கோயம்பேடு - ஆலந்துார் மார்க்கங்களில், காலை, 6:00 மணிக்கு, மெட்ரோ ரயில்கள் இயக்கம் துவங்கி, இரவு, 10:00 மணி வரை, இயக்கப்படுகின்றன

*காலை, 9:00 மணி முதல், 11:00 மணி வரை; மாலை, 5:00 மணி முதல் இரவு, 8:00 மணி வரை, 10 நிமிடங்களுக்கு, ஒரு மெட்ரோ ரயில் என இயக்கப்படுகிறது

*மற்ற நேரங்களில், 15 நிமிடங்கள் இடைவெளியில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன

*இச்சேவைகள் தொடர்ந்து செயல்படும் வகையில், நடவடிக்கை எடுத்தால், பயணிகள் தங்குதடையின்றி செல்ல முடியும். எக்காரணம் கொண்டும், மின்சார ரயில் சேவையை குறைக்க கூடாது என்பதுதான் அனைவரும் எதிர்பார்ப்பாகும்.

## தரிசு நிலங்கள் தண்ணீர் தேசமான அதிசயம்:மழைநீர் அறுவடை:குடிநீர் தேவையில்லை

மதுரை:தண்ணீரின்றி தரைபிளந்து தத்தளித்த தரிசு நிலங்கள்... ததும்பி வழியும் தண்ணீரால் பயிர்களை நனைத்துக் கொண்டிருக்கும் அதிசயத்தை, பெங்களூரு இந்துப்புரில் உள்ள விவசாய நிலத்தில் பார்க்கமுடிந்தது.பெங்களூரு அம்ருதஹள்ளியைச் சேர்ந்த அய்யப்ப மசாகி, தந்தையின் கஷ்ட ஜீவனத்தில் பத்தாம் வகுப்பு முடித்து, மெக்கானிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ முடித்தவர். பாரத் எர்த்மூவர்ஸ் நிறுவனம், எல் அண்ட் டி போன்ற பெரிய நிறுவனங்களில் பணியாற்றி, தற்போது மழைநீர் அறுவடையாளராக மாறியிருப்பவர். வாட்டர் லிட்டரசி பவுண்டேஷன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.25 ஆண்டுகால அனுபவத்தில் விவசாய நிலம், வீடு, தொழில்நிறுவனங்களுக்கு நுாற்றுக்கணக்கான மழைநீர் அறுவடை தொழில்நுட்பங்களை அறிமுகபடுத்தியுள்ளார். பெங்களூரு அனந்தபுர் மாவட்டம் இந்துப்புரில், 84

ஏக்கர் நிலத்தில் நான்கு செயற்கை ஏரிகளை உருவாக்கி, தன்னிகரில்லா தண்ணீர் நிலமாக மாற்றிய அனுபவத்தை இங்கு விளக்குகிறார்.



கர்நாடகா, இந்துப்புர் விவசாய நிலத்தில் உருவாக்கப்பட்ட செயற்கை ஏரிகள்.

வேலையில் இருக்கும் போதே, கர்நாடகாவில் வீராப்பூர் கிராமத்தில் ஆறுஏக்கர் நிலம் வாங்கி காபி பயிரிட்டேன். இரண்டாண்டுகள் நல்ல லாபம் கிடைத்தது. அடுத்தாண்டுகளில் மழையின்றி நிலம் காய்ந்தது. பின் வெள்ளம், நிலத்தை மூழ்கடித்து, தங்கியிருந்த குடிசையையும் பெயர்த்து கொண்டு சென்றது. அங்கிருந்த மரத்தில் ஏறி வெள்ளம் வடியும் வரை கும்மிருட்டில் தனியாக அமர்ந்திருந்தேன்.என் மனதுக்குள் ஆயிரம் கேள்விகள்... தண்ணீரில்லாமல் கஷ்டம்... தண்ணீர் வந்ததும் நஷ்டம்... இந்த நிலையை மாற்ற வேண்டும் என யோசித்தேன்.

### மேடு, பள்ளங்கள் தேவை:

ஆறு ஏக்கர் நிலத்தை ஆராய்ச்சி நிலமாக மாற்றினேன். என் தந்தை.... அடிக்கடி சொல்வார். விவசாயத்தை பொறுத்தவரை மூன்று மேடு... மூன்று பள்ளங்கள் தேவை என்று. என் நிலம் வெள்ளத்தில் மூழ்கிய போது தான், மேடு, பள்ளத்தின் அர்த்தம் புரிந்தது. மழைநீரை பள்ளம், மேடு பார்த்து பத்திரப்படுத்தினால் மண்ணை நனைத்து பள்ளங்களை நிரப்பி பத்திரமாய் பூமிக்குள் இறங்கி விடும். என் ஆராய்ச்சியின் முடிவுகள் நல்ல பலனை தந்ததால், பெங்களூரு

இந்துப்புரில் ஐந்து பேர் சேர்ந்து 84 ஏக்கர் நிலம் வாங்கினோம். எனது பங்கு 22 சதவீதம். 84 ஏக்கரில் 80 சதவீதம் மணலும், மீதி பாறையுமாக இருந்தது. மருந்துக்கு கூட தண்ணீர் இல்லை.

## பள்ளம் பார்த்து பிரிக்கணும் :

"ஏக்கருக்கு ஒருலட்சம் ரூபாய் தந்தால், மூன்றே மாதங்களில் தரிசுநிலத்தை தண்ணீர் தேசமாக மாற்றுகிறேன்," என பங்குதாரர்களிடம் தெரிவித்தேன். என் மேல் நம்பிக்கை வைத்தனர். எந்த பகுதியில் மழை விழுந்தாலும் நிலத்தை விட்டு வெளியே போகாமல் இருக்க, 84 ஏக்கரை 37பிரிவுகளாக பிரித்தேன். நான்கு ஏரிகளை உருவாக்கினேன்.
இப்பகுதியில் ஆண்டு சராசரியாக 600 மி.மீ., மழை பெய்கிறது. முதல் ஏரியை 100 மீட்டர் நீளம், 100 மீட்டர் அகலத்தில் 6 மீட்டர் ஆழத்தில், ஒன்றரை கோடி லிட்டர் கொள்ளளவில் அமைத்தேன். ஆண்டுக்கு கஅகோடி லிட்டர் மழைநீர் கிடைக்கும். அதில் பாதியளவு ஆவியாகவும், நிலத்தாலும் உறிஞ்சப்பட்டு, 50 சதவீத அளவு மழைநீர் ஏரியில் சேகரிக்கப்படும்.

## பாலிதீன் சீட் ஏரி :

இரண்டாவது ஏரி 60 மீட்டர் நீளம், 40 மீட்டர் அகலம், நான்கு மீட்டர் ஆழத்தில் 96 லட்சம் லிட்டர் கொள்ளளவு மழைநீர் பிடிக்கும். இது மணற்பாங்கான பகுதி என்பதால், மழை பெய்த மறுநாளே மொத்த தண்ணீரும் உறிஞ்சப்பட்டு விடும். அதனால் 13 அடி ஆழத்தில் பாலியுரித்தின் சீட் விரித்து, அதன் மேல் தண்ணீரை அறுவடை செய்கிறேன்.மூன்றாவது, நான்காவது ஏரிகள் முறையே 40 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் நான்கு மீட்டர் ஆழமும் கொண்டு, 48 லட்சம் மழைநீரை சேமித்துக் கொள்ளும்.
20 ஆயிரம் குழிகள் :
அடுத்ததாக 20 ஆயிரம் குழிகள் வெட்டினேன். ஒரு மீட்டர் நீள, அகலம், ஒரு மீட்டர் ஆழத்தில் குழியை வெட்டி அதில் மணலை நிரப்பினேன். மணல் நீரை நன்கு உறிஞ்சி வைத்துக் கொள்ளும். சராசரியாக ஆண்டுக்கு பெய்யும்

மழையில் ஒரு குழியில் ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கும்.இந்த குழிகளில் 60 சதவீதம் மரப் பயிர்களையும், 40சதவீத குழிகளில் 37 வகையான பழப்பயிர்களையும் நட்டுள்ளேன். இன்னும் இரண்டாண்டுகளில்அத்தனை மரங்களும் பயன்தர ஆரம்பிக்கும். அனைத்து குழிகளிலும் சொட்டுநீர் பாசனம் அமைத்துள்ளேன் அதிக வெயிலில் சொட்டுநீர் பாசனம் மூலம் தண்ணீர் மரங்களுக்கு தண்ணீர் கிடைக்கும்.

### நீளக்குழிகள் வெட்டணும் :

அடுத்ததாக நீளக்குழிகள் தயார் செய்வது இன்னொரு முறை. ஒரு மீட்டர் அகலத்தில்,10 மீட்டர் நீளத்தில், ஒரு மீட்டர் ஆழத்தில் பள்ளங்களை வெட்ட வேண்டும். அடுத்து ஒரு மீட்டர் இடைவெளி விட்டு, மீண்டும் இதேபோல தொடர் பள்ளங்களை வெட்ட வேண்டும். ஏரிகளில் நிரம்பி வழியும் போது தண்ணீர் ஆங்காங்கே நின்று செல்லும்.

### செயற்கை தொட்டி :

50 அடி நீள, அகலத்தில் 12 அடி ஆழத்தில் சதுர தொட்டியில் நான்கு லட்சம் லிட்டர் கொள்ளளவில் தண்ணீர்த் தொட்டியை அமைத்துள்ளேன். நிலத்தில் கிடைத்த பாறை கற்களை கொண்டு இவ்வளவு பெரிய தொட்டி கட்டுவதற்கு கூலி மட்டும் ரூ.54ஆயிரம் கொடுத்தேன். அவ்வளவு தான் செலவானது. 84 ஏக்கர் நிலத்திற்கும் ஒரே ஒரு 'போர்வெல்' தான் அமைத்துள்ளேன். 'போர்வெல்' தண்ணீர், தொட்டியில் விழுகிறது. இதிலிருந்து மின்மோட்டார் மூலம் 10 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச, மோட்டாருக்கு அரைலிட்டர் டீசல் தான் தேவைப்படுகிறது.

நிலத்தில் மேடான, பள்ளமான பகுதியை ஆய்வு செய்து, பிரிக்க வேண்டும். அதில் எந்தபகுதியில் ஏரி உருவாக்க வேண்டும்; பள்ளங்கள், சிறுகுழிகள் உருவாக்க வேண்டுமென திட்டமிட வேண்டும். நிலத்தில் விழும் மழைநீரை ஒருதுளி கூட வெளியேற்றாமல் திட்டமிட்டு அறுவடை செய்தால், கிணறுகளில் நீர்மட்டம் பெருகும். யாரிடமும் தண்ணீர் கேட்டு கையேந்த வேண்டிய அவசியம் விவசாயிகளுக்கு ஏற்படாது. நிலம் தான் மிகப்பெரிய தொட்டி. அதில்

முடிந்தவரை மழைநீரை நிரப்பி தக்க வைக்க வேண்டும். இங்கே சுற்றியுள்ள 300 ஏக்கரில் பெய்யும் மழைநீரும், இந்த ஏரிகளில் கலக்கிறது. என் நிலத்தில் மரம் சார்ந்த விவசாயத்தை தான் செய்கிறேன். மரங்கள் நிறைய இருப்பதால் இன்னும் சில ஆண்டுகளில் சூரிய வெளிச்சம் நிலத்தின் கீழ்ப்பகுதியில் படாது. இதனால் பூமியில் இருந்து தண்ணீர் ஆவியாகாது. மரங்களுக்கு உள்ளே நிலப்பகுதி குளிர்ந்திருப்பதால், மிளகு பயிரிட திட்டமிட்டுள்ளேன்.நிலத்தில் ஆடு, மாடுகளை வளர்க்கிறேன். அவற்றின் சாணங்கள் நிலத்திற்கு உரமாகிறது. இதற்கு மேல் உரம் தருவதில்லை. ஜீவாமிர்தம், பஞ்சகவ்யம் தயாரிப்பதற்கு ஆட்கள் தேவை.

## நடைமுறை :

விஷயங்களை சாத்தியமாக்குவது தான் விவசாயம். குறைந்தளவு மனிதவளத்தை கொண்டு விவசாயம் செய்ய வேண்டும்.தண்ணீரை நான்கு வழிகளில் சேமிக்க வேண்டும். குளியலறை, சமையலறை, துவைக்கும் தண்ணீரை20 அடி ஆழத்தில் நிலத்தில் கொண்டு விடும் போது, நீர் நிலத்தில் இறங்கி மண்ணை ஈரப்படுத்துகிறது. அதன்மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்கிறது. மழைநீரை பள்ளங்களில் நிரப்பி சேகரிக்கும் போது நிலத்தடி நீர்மட்டம் தானாக உயர்கிறது.சிறு, குறு விவசாயிகளுக்கு இத்தொழில்நுட்பத்தை குறைந்த செலவில் செய்து தருகிறேன்.

## தொழில் :

நிறுவனங்களுக்கு தொழில்நுட்பத்திற்கேற்ப கட்டணம் மாறுபடும், என்றார்.

மழை பெய்யவில்லை என இயற்கையை சபிக்க வேண்டாம். மழையில்லை... தண்ணீர் இல்லை என்பதல்ல பிரச்னை. சராசரி மழை, பஞ்சம், வெள்ளம்... இதுதான்இயற்கையின் பழக்கம். இயற்கையின் போக்கில் வாழ பழகிவிட்டால் தண்ணீரைத் தேடி தவிக்க வேண்டியதில்லை.

## தீர்வு தான் என்ன :

அவ்வப்போது தமிழகத்து விவசாயிகளுக்கு ஆலோசனை சொல்வதற்காக தமிழகம் வருகிறேன். பெரும்பாலான ஆறுகள் வறண்டு கிடக்கின்றன.

மிகப்பெரிய நிறுவனங்கள் தங்கள் சமுதாய பொறுப்பு நிதியை, இதற்காக செலவழிக்கலாம். இதன் மூலம் ஒருமழை பெய்தால் கூட தண்ணீரை அறுவடை செய்து பயன்பெறலாம்.இதுவரை 600 ஏரிகளை உருவாக்கியுள்ளேன். ராஜஸ்தான் உட்பட 11 மாநிலங்களில் ஒருலட்சம் போர்வெல்கள் அமைத்துள்ளேன். லிம்கா உலக சாதனை புத்தகத்தில் தனிமனிதனாக 600 ஏரிகள் உருவாக்கியதற்கான விருது கிடைத்தது.171 நிறுவனங்களுக்கு சமூக பொறுப்பு நிதியின் (சி.எஸ்.ஆர்.,) மூலம் மழைநீரைஅறுவடை செய்யும் தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளேன். இந்தியாவில் ஆண்டுக்கு 100 மணி நேரங்கள் மழை பெய்கின்றன.குறைந்தபட்சம் 30 மணி நேர மழையை அறுவடை செய்தால் கூட, தண்ணீர் பஞ்சமின்றி வாழலாம். ஆனால் இப்போது நாம் அறுவடை செய்வது வெறும் உ சதவீத மழையைத் தான்.தண்ணீருக்காக மூன்றாம் உலகப்போர் நடக்கும் என்பதெல்லாம் வெறும் வார்த்தைகள் தான். ஏனென்றால் ஒவ்வொரு வீடும், அலுவலகமும், தொழிற்சாலையும், விவசாய நிலமும் தண்ணீர் பாத்திரமாக மாறினால், அரசாங்கத்தின் தண்ணீர் குழாய்களை நிரந்தரமாக பூட்டிவிடலாம்.தமிழகத்தின் மழைநீர் வடிகால்களால் மழைநீரை எந்தவிதத்திலும் அறுவடை செய்யமுடியாது. சமதளத்தில் பெய்யும் மழையால் எந்த பிரயோஜனமும் இல்லை. மனமிருந்தால் குடிசைவீட்டில் கூட மழைநீரை அறுவடை செய்யலாம். ஒரு சதுர மீட்டர் அளவு இடத்தில்ஒரு மி.மீ., மழை பெய்தால் ஒரு லிட்டர் தண்ணீர் சேகரிக்கலாம். இவரிடம் பேச 094483 79497 இமெயில் : www.waterliteracy.tk

**நாகையில் 18 செ.மீ., மழை**

நாகபட்டிணம்: தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிகபட்சமாக நாகை ஆனைக்காரன் சத்திரத்தில் 18 செ.மீ., மழை பதிவானது.

**மழையால் அணைகளில் நீர் மட்டம் உயர்வு**

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பெய்து வரும் மழையால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரை மாவட்டத்தில் அதிகபட்சமாக நேற்று முன்தினம் சாத்தையாறு அணைப்பகுதியில் 20 மி.மீ.,

மழை பதிவானது.தொடர் மழையால், பெரியாறு, வைகை, மஞ்சளாறு உள்ளிட்ட அணைகளில் நீர் மட்டம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. 'இம்மாதம் மழை நீடீத்தால்தான் இருபோக சாகுபடிக்கான தண்ணீர் கிடைக்கும்' என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

### தமிழகத்தில் கனமழை நீடிக்கிறது

சென்னை : தமிழகத்தில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், நாகை, விருதுநகர், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, ராமநாதபுரம், திருவாரூர், தஞ்சாவூர், வேலுார் ஆகிய மாவட்டங்களில் கனமழை தொடர்ந்து நீடிக்கிறது. புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழை காரணமாக 25 மாவட்டங்களுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறவிருக்கும் பல்கலை., தேர்வுகளும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### அரியலூர், நாகையில் புயல் பாதுகாப்பு மையங்கள்

சென்னை: நாகை மாவட்டத்தில் பெய்து வரும் மழை காரணமாக, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில 12 புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரியலூர் மாவட்டம் முழுவதிலும் 21 இடங்களில் புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

### ஏரிகளில் நீர்மட்டம் அதிகரிப்பு

சென்னை: தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள 1200க்கும் மேற்பட்ட குளங்களில் சுமார் 350க்கும் மேற்பட்ட குளங்கள் நிரம்பியுள்ளன. விழுப்பரம் மாவட்டத்தில் 180 குளங்கள் வரை முழுமையாக நிரம்பியுள்ளன.

### நீலகிரியில் 1.85 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் 7,000 மண் மாதிரிகள்! நிலவளத்தை மேம்படுத்த நவீன பரிசோதனைகள்

ஊட்டி: நீலகிரியில், தேசிய மண் வள இயக்கம் சார்பில், ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், மண் மாதிரி சேகரிக்கும் பணி நடந்து வருகிறது.

நாடு முழுக்க, விவசாய நிலங்களில் மண்ணின் தன்மையை தெரிந்து கொள்ளும் நோக்கில், மத்திய அரசு 'தேசிய மண் வள இயக்கம்' என்ற பெயரில் திட்டத்தை அறிவித்துள்ளது. 2015 -- 2018 வரையிலான இத்திட்டத்தில், விவசாய நிலங்களில் உள்ள மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

**நீலகிரியில் 'ஜரூர்'**

'விவசாய மாவட்டமான' நீலகிரியில், காய்கறி மற்றும் தேயிலை சாகுபடி செய்யப்படும், ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு, இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட உள்ளது. 25 ஏக்கருக்கு ஒரு மாதிரி என்ற அடிப்படையில், 7,000 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட உள்ளன. 'இந்த ஆண்டு, 3,000 மண் மாதிரிகள் சேகரிக்கப்பட உள்ளன' என, தோட்டக்கலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாய நிலங்களில், இதற்கு முன் செய்யப்பட்ட மண் பரிசோதனையில், மண்ணில் உள்ள பேரூட்ட, நுண்ணுட்ட அளவுகள் நவீன முறையில் பரிசோதிக்கப்பட்டு, தற்போது, அவற்றுடன் கலந்துள்ள கால்சியம், மெக்னீசியம், போரான், சல்பர் சத்துக்கள் சோதித்து அறியப்பட உள்ளன. மண் மாதிரி எடுக்கப்படும் இடங்கள் அட்சரேகை, தீர்க்க ரேகை விபரங்களுடன் பதிவு செய்யப்படும்.

**நிர்வகிப்பு எளிதாகும்**

நீலகிரி தோட்டக்கலை இணை இயக்குனர் மணி கூறியதாவது: இத்திட்டம், மூன்றாண்டு நடைமுறையில் இருக்கும் என்பதால், அனைத்துப் பகுதிகளிலும் மண் மாதிரி சேகரிக்கப்படும். விவசாயிகள், தங்கள் மண்ணில் உள்ள சத்துக்களின் நிறை, குறைகளை தெரிந்து, நிலங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். இதுவரை, 2,500 மாதிரிகள் எடுக்கப்பட்டு, 1,040 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் மூலம், மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை தெரிந்து, சத்துப் பற்றாக்குறையை போக்க தேவையான உரங்களை விவசாயிகளுக்கு பரிந்துரை

செய்ய முடியும். மண் மாதிரி ஆய்வறிக்கை, சாட்டிலைட் வரைபடத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதன் மூலம், நாட்டின் எந்தவொரு இடத்தில் இருந்தும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களின் தன்மை, அங்கு எந்த பயிர் சாகுபடி செய்ய உகந்தது என்பதை தெரிந்து கொள்ள முடியும். இவ்வாறு, மணி கூறினார்.

**வனம் சார்ந்த வளமும் தெரியும்!**

நீலகிரியை பொறுத்தவரை, பல இடங்களில், விவசாய நிலங்கள், வனம் மற்றும் மலை சார்ந்த இடங்களில் அமைந்துள்ளன. அங்கு மண் மாதிரிகளை சேகரிப்பது சிரமமான பணி என்றாலும், அந்த இடங்களிலும், தோட்டக்கலை அலுவலர்கள் மண் மாதிரி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் மூலம், வனம் மற்றும் மலை சார்ந்த பகுதிகளில் உள்ள மண் வளத்தை அறிந்து கொள்ள முடியும்.

## பருவமழையை எதிர்கொள்ள தீவிரம் தாழ்வான பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



கோவை : சென்னை வானிலை மையம், வேளாண் காலநிலை மையம் ஆகியவை, கனமழை பெய்யும் என்று அறிவிப்புகளை வெளியிட்டதால், கோவை மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள், தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கோவை மாவட்டம், மேற்குத்தொடர்ச்சி மலையால் சூழப்பட்டுள்ளதால், பருவமழை காலங்களில், அதிக மழை பொழியும் பகுதியாக உள்ளது. நொய்யல் செல்லும் வழியில், 15 குளங்கள் உள்ளன. கோவை நகரில் மட்டும், 12 குளங்கள் உள்ளன. குளங்களை ஒட்டியும், குளங்களுக்கு வரும் நீர்வழிப்பாதையிலும் ஏராளமான குடியிருப்புகள் உள்ளன.

கனமழை எச்சரிக்கை அறிவிப்பை தொடர்ந்து, நொய்யலாறு செல்லும் நீர்வழிப்பாதையில் குடியிருப்போர், வேடபட்டிகுளம், நாகராஜபுரம் பகுதியிலுள்ள கோளராம்பதி, கிருஷ்ணாம்பதி, நரசம்பதி உள்ளிட்ட குளக்கரையோரம், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பகுதி மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு செல்ல அறிவிக்கப்பட்டுள்ளனர்.

மழை பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இருக்கும் பகுதிகளில் வருவாய்த்துறையினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அனைத்து துறைகளும், முடுக்கிவிடப்பட்டுள்ளன.

பேரிடர் மேலாண்மைக்குழு: தாசில்தார் தலைமையில், பேரிடர் மேலாண்மைக்குழு செயல்படுகிறது. இக்குழுவினர், முன்எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள, மாவட்டம் முழுக்க ரோந்து சென்று வருகின்றனர்.

பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு): மழைக்காலத்தில் குளங்களில் மழைநீரை நிரப்புதல், குளங்களில் உடைப்பு ஏற்படாமல், உள்ளாட்சி நிர்வாகத்தோடு இணைந்து பாதுகாத்தல் உள்ளிட்ட பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறை: சுகாதாரத்துறையினர் மாவட்டம் முழுக்க உள்ள, 12 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் அனைத்தும், 24, மணி நேரமும் கூடுதல் பணியாளர்களோடு, செயல்பட்டு வருகிறது. ஆம்புலன்ஸ்கள், மருந்துப்பொருட்களை தயார் நிலையில் வைத்துள்ளனர்.

நெடுஞ்சாலைத்துறை: மழைக்காலத்தில் சேதமாகும் சாலைகளை உடனடியாக, பராமரித்து சீராக்கவும், சாயும் மரங்களை உடனடி அப்புறப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை: பேரிடர் பணிக்கு, ஐந்து, தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் உள்ளது, இது தவிர அந்தந்த பகுதிகளில் உள்ள தீயணைப்பு நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

மின்பகிர்மானக்கழகம்: மழை மற்றும் சூறாவளிக்காற்றுக்கு சாயும் மின்கம்பங்களை உடனுக்குடன் சீரமைக்க, தயார் நிலையில் மழைசேத சீரமைப்பு மீட்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில், கோட்டடப்பொறியாளர் அந்தஸ்திலான அதிகாரி, அதற்குக்கீழ் நான்கு உதவிப்

பொறியாளர்கள் உள்ளனர்.

மாநகராட்சி: கோவை மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள் அந்த அந்த பகுதிகளில் ஏற்படும், மழை சேதங்களை சீராக்கி, மக்களுக்கு இடையூறு இல்லா மல் பணிகளை மேற்கொள்ள பணியாளர்களை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட் டுள்ளன.

கலெக்டர் அர்ச்சனாபட்நாயக் கூறுகையில், "கோவை மாவட்டத்தில் மழைக்கால, வெள்ளத்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நீர் வழிப்பாதை மற்றும் குளக்கரையில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மழை பாதிப்பு மற்றும் மீட்பு பணிகளுக்கு, '1077' என்ற எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்," என்றார்.

### மழையால் அணைகளில் நீர் மட்டம் உயர்வு

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் பெய்து வரும் மழையால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரை மாவட்டத்தில் அதிகபட்சமாக நேற்று முன்தினம் சாத்தையாறு அணைப்பகுதியில் 20 மி.மீ.,

மழை பதிவானது.தொடர் மழையால், பெரியாறு, வைகை, மஞ்சளாறு உள்ளிட்ட அணைகளில் நீர் மட்டம் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. 'இம்மாதம் மழை நீடித்தால்தான் இருபோக சாகுபடிக்கான தண்ணீர் கிடைக்கும்' என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர்.

**நடவுப் பணிகளை துவக்க விவசாயிகள் தயக்கம்**



செக்கானுாரணி:மதுரை மாவட்டம் செக்கானுாரணி பகுதியில் மழை பெய்தும்கூட வறண்டு கிடக்கும் கண்மாய்களால் நடவு பணிகளை துவக்க விவசாயிகள் தயங்குகின்றனர்.

செக்கானுாரணி மற்றும் அதை சுற்றிய ஆ.கொக்குளம், வடக்குளம், கருவேலிக்குளம், ஊர்க்குளம், கோரக்குளம், மேலக்குளம், கீழக்குளம், மாவிலிபட்டி, சொரிக்காம்பட்டி, பி.மீனாட்சிபட்டி, செட்டிகுளம், பூச்சம்பட்டி, கண்ணனுார் கண்மாய்கள் மூலம் ஆயிரம் எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

ஆண்டு தோறும் செப்டம்பரில் பெய்யும் மழையை பயன்படுத்தி விவசாயிகள் நாற்றங்கால் அமைப்பர். அக்., நவம்பரில் நாற்றுக்களை நடவு செய்வர். ஜன., பிப்., மாதங்களில்

அறுவடை நடக்கும்.இந்தாண்டு போதிய மழை பெய்யாததால் கண்மாய்கள் வறண்டு

உள்ளன. விவசாயிகள் நாற்றங்கால் அமைக்கவில்லை. கிணற்று நீரை பயன்படுத்தி நாற்றங்கால் அமைத்தவர்களும் நாற்றுகளை நட தயங்குகின்றனர்.

சில நாட்களாக தமிழகத்தின் பல மாவட்டங்களில் பரவலாக நல்ல மழை பெய்த போதும் இப்பகுதியில் மழை இல்லை. அவ்வப்போது சிறு சாரல் மழை மட்டுமே பெய்கிறது. இதனால் நெல் சாகுபடி பாதிக்கும் நிலையுள்ளது.கண்ணனூார் ஊராட்சி தலைவர் தமிழரசன் கூறியதாவது:

செப்., அக்., நவ., மாதங்களில் பலத்த மழை பெய்து கண்மாய்கள் நிரம்பினால் தான் நெல் பயிரிட முடியும். நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து போர்வெல்களில் குடிநீர் சப்ளை செய்ய முடியும்.

இந்தாண்டு விவசாயம் பாதிக்கப்பட்டு, குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. வைகையில் இருந்து கண்மாய்களுக்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், என்றார்.

**மழையால் பாதித்த மக்களுக்கு உணவு, தங்குமிடம் கலெக்டர் மணிகண்டன் தகவல்**

வில்லியனுார்: வில்லியனுார் பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை கலெக்டர் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

வில்லியனுார் பகுதியில் தொடர் மழையால் குடியிருப்பு பகுதியில் மழைநீர் சூழ்ந்துள்ள மூர்த்தி நகரை கலெக்டர் மணிகண்டன் பார்வையிட்டார். நீரில் மூழ்கிய குறவர் காலனி பகுதி மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து ஊசுடு ஏரியை பார்வையிட்டார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

வீடூர் அணை நிரம்பியதாக பொய்யான தகவலை பரப்பி விட்டனர். இதனால் ஆற்றங்கரையோரம் குடியிருக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளனர். வீடூர் அணை நிரம்புவதற்கு இன்னும் சில தினங்களாகும். வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம்.

மேலும் மழைநீர் சூழ்ந்துள்ள குடியிருப்பு பகுதி மக்கள் அனைவரும் வெளியேறி அந்தந்த பகுதியில் உள்ள அரசு பள்ளிகள், சமுதாய கூடங்கள் உள்ளிட்ட பாதுகாப்பான இடங்களில் தங்கிக் கொள்ளலாம். அவ்வாறு தங்கும் மக்களுக்கு உணவு உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படும். இவ்வாறு கலெக்டர் மணிகண்டன் கூறினார். சப் கலெக்டர் ராஜமாணிக்கம், வருவாய் அதிகாரி பார்த்திபன், தாசில்தார்கள் கார்த்திகேயன், சிவசங்கரன் மற்றும் வருவாய் துறையினர் உடனிருந்தனர்.

**வெள்ளத்தில் மூழ்கிய விளை நிலங்கள், குடியிருப்புகள்**

புதுச்சேரி: பாகூர் பகுதியில் பெய்து வரும் மழை காரணமாக இதுவரை 30 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

பாகூர்

தொடர் மழை காரணமாக, கடந்த 9ம் தேதி முதல் பாகூர், ஏம்பலம், நெட்டப்பாக்கம், பண்டசோழநல்லூர், கரிக்கலாம்பாக்கம், கிருமாம்பாக்கம், ஆராய்ச்சிக்குப்பம், சோரியாங்குப்பம், கடுவனூர் ஆகிய இடங்களில் 26 வீடுகள் சேதம் அடைந்தன. இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கன மழையால், குருவிநத்தம் கிராமத்தில் ஒரு வீடும், கோர்க்காடு, கரைமேடு கிராமத்தில் இரண்டு வீடு என மொத் தம், பாகூர் பகுதியில் இதுவரை 30 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

புதுச்சேரியின் நெற்களஞ்சியமான பாகூர் பகுதியில், 2000 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில் சம்பா பருவத்தில் நெல் நடவு செய்யப்பட்டது. தொடர் மழையால், பாகூர், குருவிநத்தம், இருளஞ்சந்தை, கரையாம்புத்துார், மணமேடு, சின்ன கரையாம்புத்துார் உள்ளிட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள நெல் பயிர்கள் மழை நீரில் முழ்கி உள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

வயல்களில் தேங்கி உள்ள மழை நீரை வெளியேற்ற வசதியாக, முக்கிய வடிகால் வாய்க்கால்களான சித்தேரி வாய்க்கால், கோன மதகு வாய்க்கால், ஆராய்ச்சிக்குப்பம் வாய்க்கால் துார் வாரும் பணி நடந்து வருகிறது.

வில்லியனுார்

வில்லியனுார், மாதாகோவில் பின்புறம், சேந்தநத்தம், மூர்த்திநகர், கோனேரிக்குப்பம், வள்ளு வன்பேட், மதகடிப்பட்டு உள்ளிட்ட பகுதியில் 25 ஏக்கர் பரப்பில் வெற்றிலை சாகுபடி செய்துள்ளனர்.

இந்த நிலங்களில், மழைநீர் தேங்கியதால் வெற்றிலை கொடிக்கால்கள் நீரில் மூழ்கியுள்ளன. இரு தினங்களுக்கு மேல் நீரில் மூழ்கி இருந்தால் வெற்றிலை கொடி அழுகிவிடும்.

வில்லியனுார் துணை வேளாண் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 200 ஏக்கரில் பயிரிடப்பட்ட வாழைகள், 50 ஏக்கர் மரவள்ளி, நெல், சவுக்கு உள்ளிட்ட பயிர்களும் மழை நீரில் மூழ்கி உள்ளன.

வடிகால் வாய்க்கால்களை துார் வாராததே வயல்களில் மழை நீர் தேக்கத்திற்கு காரணமாகும்.

மழை நீரில் மூழ்கிய விவசாய பயிர்களை வில்லியனுார் துணை வேளாண் இயக்குனர் முருகேசன், வேளாண் அலுவலர்கள் நடராஜன், மாசிலாமணி உள்ளிட்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்.

நெட்டப்பாக்கம்

நெட்டப்பாக்கம் மலைக்குறவன், பழங்குடியினர் பகுதிகளில் மழைநீர் குளம் போல் தேங்கியுள்ளது. வீடுகளை சுற்றிலும் தண்ணீர் தேங்கியிருப்பதால் சுவர்கள் இடிந்து விழும் நிலையில் உள்ளது.நெட்டப்பாக்கம் சப் இன்ஸ்பெக்டர் நந்தகுமார் பழங்குடியினர் குடியிருப்புக்கு சென்று, மக்களின் நிலை குறித்து அரசு அதிகாரிகளிடம் தெரிவித்து விரைவில் மாற்று இடத்திற்கு ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார்.

பழங்குடியினர் தலைவர் சங்கர் கூறுகையில்,'மழைநீர் வீடுகளில் புகுந்துள்ளதால் உணவு, படுக்க இடம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளோம். இதுவரை தொகுதி எம்.எல்.ஏ., வந்து பார்க்கவில்லை' என்றார். கரையாம்புத்துார், பனையடிக்குப்பம், பாகூர் உள்ளிட்ட பகுதியில் தேசமடைந்த நெல், வாழை, கரும்பு, மரவள்ளி, சவுக்கு உள்ளிட்ட பயிர்களை வேளாண் கூடுதல் இயக்குநர் ரவிபிரகாசம் பார்வையிட்டார். கரையாம்புத்துார்

வேளாண் அலுவலர் பரமநாதன், உதவி வேளாண் அலுவலர் கங்காதுரை, ஆத்மா மேலாளர் பக்தவச்சலம், விவசாய ஆலோசனைக்குழு தலைவர் கோகுலா ஆகியோர் உடனிருந்தனர்.

இது குறித்து ரவிபிரகாசம் கூறுகையில், 'புதுச்சேரியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களை அந்தந்த பகுதிகளில் உள்ள வேளாண் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் கணக்கெடுத்து வருகின்றனர். முழுமையாக கணக்கெடுப்பு முடிந்தவுடன், சேதமதிப்பு குறித்து அரசுக்கு அறிக்கையாக அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும்' என்றார்.

திருக்கனூர்

திருக்கனூர் பகுதியில் உள்ள சங்கராபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாக நேற்று முன்தினம் திருக்கனூர் போலீசார் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதனையடுத்து, நேற்று மாலை 5.00 மணியளவில் கலெக்டர் மணிகண்டன், சப்-கலெக்டர் ராஜமாணிக்கம் உள்பட வருவாய் அதிகாரிகள் வீடூர் அணைக்கு சென்று பார்வையிட்டு, அதிகாரிகளிடம் விபரம் கேட்டறிந்தனர். இதனைத் தொடர்ந்து, கலெக்டர் மணலிப்பட்டு கிராமத்தில் மழையால் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டார்.

அப்போது, காங்., மாநில பொதுச் செயலாளர் வீரராகவன் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண் டும் என கேட்டுக் கொண்டார்.

கலெக்டர் சங்கராபரணி ஆற்றை பார்வையிட்டு நிருபர்களிடம் கூறுகையில், 'சங்கராபரணி ஆற்றின் நீர்மட்டம் குறித்து வருவாய் துறை அதிகாரிகள் தினமும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். பாதிக்கப்பட்ட விவசாய பயிர் கள், வீடுகள் குறித்து கணக்கீடு செய்யப் படுகிறது' என்றார்.

**நிரம்புகின்றன படுகை அணைகள்**

திருக்கனூர்: கனமழை காரணமாக சங்கராபரணி, பம்பை ஆற்றில் உள்ள படுகை அணைகள் நிரம்பி வருகின்றன.

புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழையின் காரணமாக, சங்கராபரணி ஆற்றில் மணலிப்பட்டு, கைக்கிலப்பட்டு, செல்லிப்பட்டு, வில்லியனுார் உள்ளிட்ட இடங்களில் கட்டப்பட்டுள்ள படுகை அணைகளிலும், குச்சிப்பாளையம் பம்பை ஆற்றில் சன்னியாசிக்குப்பம், சோரப்பட்டு உள்ளிட்ட இடங்களில் கட்டப்பட்டுள்ள படுகை அணைகளும் நிரம்பி வருகின்றன.

இப்பகுதியில் உள்ள நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்

வீசிய சூறைக்காற்றில் தப்பிய வாழை தோட்டங்கள் கனமழையை தாக்குப் பிடிக்க முடியாமல் சாய்ந்துள்ளன.

**தொடர் மழையால் குடிசை வீடுகள் பலத்த சேதம், மோட்டார் மூலம் வெள்ளநீர் வெளியேற்றம்**

புதுச்சேரி: புதுச்சேரியில் இரண்டு நாட்களாக பெய்துவரும் தொடர் மழையால் பல குடிசைகள் இடிந்து விழுந்ததால், மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

புதுச்சேரியில் நேற்று முன்தினம் முதல் இடை விடாது மழை பெய்து வருகிறது. நக ரின் பல சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. உட்புற சாலைகளில் தண்ணீர் தேங்கி, சேறும் சகதியுமாக மாறியுள்ளது. கடந்த வாரம் பெய்த மழைக்கே, நகர சாலை கள் குண்டும் குழியமாக மாறின. தற்போது, மீண்டும் மழை பெய்து வருவதால் சாலைகளில் மெகா பள்ளங்கள் உருவாகி வருகின்றன.

முதலியார்பேட்டை ஏ.எப்.டி., மில் பஸ் நிறுத்தம் அருகே அ0 ஆண்டு பழமையான அரச மரம் நேற்று காலை 6:30 மணிக்கு விழுந்ததில், மூர்த்தி மற்றும் பிரகாஷ் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன. அதிர்ஷ்டவசமாக வீட்டில் இருந்தவர்கள் காயமின்றி உயிர்தப்பினர். தீயணைப்பு துறை உதவி கோட்ட அதிகாரி இளங்கோ, நிலைய அதிகாரி மனோகர் தலைமையில்

தீயணைப்பு வீரர்களும், பொதுப்பணி, வனத்துறை ஊழியர்கள் மரத்தை வெட்டி அகற்றினர்.

மழைநீர் சூழ்ந்தது

புறநகர் பகுதியில் புதிதாக உருவான நகர்களில் உள்ள ஏராளமான குடியிருப்புகளை மழைநீர் சூழந்துள்ளது. முருங்கப்பாக்கம் காமராஜர் வீதியில் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்ததால், புதுச்சேரி நகராட்சி சார்பில் மோட்டார் வைத்து தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

பொதுப்பணித்துறை நீர்பாசன உட்கோட்டம் சார்பில், 100 அடி சாலை, செஞ்சி சாலை காசநோய் மருத்துவமனை, சற்குரு ஓட்டல் பின்பகுதி, ஜீவா நகரில் தேங்கிய மழை நீர் மெகா சைஸ் மோட்டார் மூலம் சிறிய வாய்க்காலில் இருந்து பெரிய வாய்க்காலுக்கு வெளியேற்றப்பட்டு வருகிறது.

உழவர்கரை நகராட்சி

பூமியான்பேட்டை ஜவகர் நகர், நடேசன் நகர், பகுதிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. கிருஷ்ணா நகரில் 8, 9, 10வது குறுக்கு தெருக்கள் மற்றும் எழில் நகர் சந்திப்பு பகுதிகள், ரெயின்போ நகரில் பெரும்பாலான வீடுகளில் தண்ணீர் புகுந்துள்ளது.

சாலைகளில் மழைநீர் ஓடுவதால், வாகனங்களில் கூட செல்ல முடியாமல் மக்கள் தவித்தனர். தேவகி நகர், பொய்யாக்குளம் பகுதியிலும் தண்ணீர் புகுந்துள்ளது. கம்பன் நகர், தந்தை பெரியார் நகர் உள்ளிட்ட பகுதியிலும் தண்ணீர் வடிய வழியில்லாமல் குளமாக தேங்கியுள்ளது.

மழைநீர் வெளியேற்றம்

பூமியான்பேட்டை ஜகவர் நகர் உள்ளிட்ட உட்புற நகர் பகுதியில் தண்ணீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால், இரண்டு இன்ஜின்கள் மூலம், தண்ணீர் வெளியேற்றப்பட்டது. பொய்யாக்குளம் பகுதியில் தொகுதி எம்.எல்.ஏ., அசோக் ஆனந்து ஏற்பாட்டின் பேரில், அப்பகுதியில் தேங்கியுள்ள தண்ணீர் இன்ஜின் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது.

வீடுகள் இடிந்தன

மூலகுளம் பெரம்பை சாலை, வாய்க்கால் மேட்டுத் தெருவில் உள்ள வீடுகளில், தண்ணீர் புகுந்ததால், குடிசைகள் இடிந்து விழுந்தன. இதில் நான்கு வீடுகள் முழுவதுமாக பாதிக்கப்பட்டது. இடிந்த வீடுகளை, தாசில்தார் சுரேஷ்ராஜ், துணை தாசில்தார் உலகநாதன் ஆகியோர் பார்வையிட்டனர்.

வீடுகளில் குடியிருக்க முடியாத அளவில் தண்ணீர் புகுந்ததால், அப்பகுதியை சேர்ந்த 25 பேர், பிச்சைவீரன்பேட் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், வயல்வெளி பகுதியில் மழை நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட உடு குடும்பங்கள் வின்சென்ட் நகர் அரசு பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ஆறுதல்

பூமியான்பேட்டை, மூல குளம், குண்டு சாலை உள்ளிட்ட தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை, உள்ளாட்சித்துறை அமைச்சர் பன்னீர்செல்வம் பார்வையிட்டு, தண்ணீரை வெளியேற்ற அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

### மீன்பிடி தொழில் பாதிப்பு

காரைக்கால்: காரைக்காலில், கடல் சீற்றத்துடன் காணப்படுவ தால், மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. காரைக்காலில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. மேலும், நேற்று கடல் சீற்றத்துடன் காணப்படுவதால், மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்லவில்லை. சில தினங்களுக்கு முன் கடலுக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் கரை திரும்பினர். விசை படகுகளை மீன்பிடி துறைமுகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைத்துள்ளனர்.

### காஞ்சியில் 17 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் மூழ்கின

காஞ்சிபுரம் மாவட்டத்தில், இரு நாட்களாக குறைந்திருந்த மழை, நேற்று அதிகாலை முதல் அதிகரித்துள்ளது. நிரம்பாமல் இருந்த ஏரிகள் நிரம்ப துவங்கி உள்ளன. குடியிருப்பு, ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. வெளியேற முடியாதபடி நீரால் சூழப்பட்டவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வருகின்றனர்.

* பாலாற்றில் வினாடிக்கு, 30 ஆயிரம் கன அடி நீர், கடலில் கலந்து வருகிறது

* உடைந்த ஊத்துகாடு ஏரியின் கரை, 5,000 மணல் மூட்டைகள் மூலம், அடைக்கப்படும் என, மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது

* திருமுக்கூடல் பாலாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கில், குடிநீர் 'பம்ப்'கள் அடித்து செல்லப்பட்டன. இதனால், சுற்றுப்புற கிராமங்களில் குடிநீர் வினியோகம் தடைப்பட்டு உள்ளது

* செங்கல்பட்டு, திம்மாவரம் மகாலட்சுமி நகரில், வீடுகள் வெள்ளத்தால் சூழ்ந்த பகுதி மற்றும் மேலமையூர் ஏரி ஆகிய பகுதிகளை, அமைச்சர் சின்னையா மற்றும் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி ஆகியோர் நேற்று பார்வையிட்டபோது, ஏரியை வெட்டி, தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டும் என, பகுதிவாசிகள் கோரிக்கை வைத்தனர். ஆனால், ஏரியை உடைக்க வாய்ப்பு இல்லை என, ஆட்சியர் தெரிவித்தார்

* பாலாறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில், வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது

* காஞ்சிபுரம் அடுத்த, கீழம்பி - முசர வாக்கம் சாலை உடைந்து, நேற்று போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### தொடர் மழையால் மிதக்குது திருவள்ளூர்

தொடர் மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் பல பகுதிகள் நீரால் சூழப்பட்டன. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பாதுகாப்பான இடங்களில் மக்கள் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

* திருவள்ளூர் நகரில் தேங்கிய மழைநீரை, நகராட்சி ஊழியர்கள் ஜே.சி.பி., மூலம் அகற்றி வருகின்றனர்

* கொற்றலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் கலியனூரார் - விடையூர் சாலை துண்டிக்கப்பட்டது. இதனால், 10க்கும் மேற்பட்ட கிராம வாசிகள், ஆபத்தான முறையில் ஆற்றை கடந்து, பாதுகாப்பான இடத்திற்கு சென்று வருகின்றனர்

* அம்சா நகர், புங்கத்துார் பகுதிகளில், மழைநீர் வடியாமல், வீடுகள் சுற்றியும் தேங்கியுள்ளது. அந்த பகுதிவாசிகளுக்கு, திருவள்ளூர் வீரராகவர் கோவில் நிர்வாகம் சார்பில், உணவு வழங்கப்பட்டது

* கடம்பத்துார் ஒன்றியத்தில், கரைகள் சேதமடைந்த திரு
மணிக்குப்பம், பிஞ்சிவாக்கம், போளிவாக்கம், ஏலம்பாக்கம் ஆகிய ஏரிகளில், மணல் மூட்டைகளால் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன

* மப்பேடு அடுத்த, கொண்டஞ்சேரி அருகே, தரைப்பாலத்திற்கு மேல் மழைநீர்
செல்கிறது

* ஊத்துக்கோட்டை, பெரியபாளையம் பகுதிகளில் மழைநீர் தேங்கி குளம் போல் காட்சி
அளிக்கிறது

* கச்சூர் ஊராட்சியில், கால்வாய்களில் செடி, கொடிகள் வளர்ந்துள்ளதால், தண்ணீர் வடிய வழியின்றி, அங்கன்வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலகம் அமைந்துள்ள பகுதிகளில், மழைநீர் சூழ்ந்து உள்ளது

* ஊத்துக்கோட்டை கால்வாய் ஓரங்களில், வியாபாரிகள் கிராவல் போட்டு மேடாக்கி உள்ளதால் மழைநீர் குளம்போல் தேங்கி உள்ளது

* பொன்னேரி, ஜெகநாதபுரம், அகரம், பங்களாமேடு இருளர் காலனி, சோழவரம் ஏரி ஆகிய பகுதிகளில் வீடுகளுக்குள், மழைநீர் புகுந்ததால், அங்கு வசித்தவர், அரசு நடுநிலைப் பள்ளியிலும், சமுதாய கூடத்திலும் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்

* ஜாகீர்மங்கலம், பழையனுார் ஆகிய பகுதிகளில், 150 ஏக்கர் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கிஉள்ளன

* நகரி, புத்துார் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், 10 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை பெய்துள்ளது. இதனால், கொற்றலை ஆற்றில், 4 அடி உயரத்திற்கு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது

* பழவேற்காடு கடல் பகுதியை ஒட்டி உள்ள கோரைகுப்பம் கிராமத்தினரை, மாற்று இடத்திற்கு செல்ல அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்

* பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை பகுதிகளில் பகுதிவாசிகள் வீடுகளில் முடங்கி உள்ளனர்

* கும்மிடிப்பூண்டி பஜார் வீதியில், கழிவுநீருடன் மழைநீர் கலந்ததால், துர்நாற்றம் வீசுகிறது. ம.பொ.சி., நகர், பாலகிருஷ்ணாபுரம், வீட்டு வசதி வாரிய குடியிருப்பு ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது

* ஏ.என்.குப்பம் அணைக்கட்டு நிரம்பியதால், உபரி நீர் வெளியேற்றப்பட்டது.

1,332 வீடுகள் சேதம்:திருவள்ளூர் மாவட்டத்தில், இதுவரை, 1,332 வீடுகள் சேதம்அடைந்துள்ளன.

அதில், பகுதியளவு சேதமடைந்த வீட்டுக்கு, 4,100 ரூபாயும், முழுவதும் சேதமடைந்த வீட்டுக்கு, 5,000 ரூபாயும், அரிசி, வேட்டி -சேலைகளும் வழங்கப்பட்டன.

பலப்படுத்த உத்தரவு:திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ், நேற்று காக்களூர், புல்லரம்பாக்கம் ஏரிகளை பார்வையிட்ட போது, மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளின் கரைகளையும் பலப்படுத்த வேண்டும் என, பொதுப்பணி துறைக்கு உத்தரவிட்டார். திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு, அரக்கோணத்தில் இருந்து, தேசிய பேரிடர் மீட்புக் குழுவை சேர்ந்த, 30 பேர் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

**சாத்தனூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

திருவண்ணாமலை: சாத்தனூர் அணை நீர் மட்டம், 105.1 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்வதால், அணையின் நீர் மட்டம் மேலும் உயரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளில், பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணையில் இருந்து, கடந்த சில நாட்களாக தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைக்கு தண்ணீர்

வரத்து அதிகரித்துள்ளது. நேற்று மாலை, 6 மணி நிலவரப்படி, 119 அடி உயரம் உள்ள இந்த அணையின் நீர் மட்டம், 105.1 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 4,742 கன அடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மழை தொடர்வதால், அணையின் நீர் மட்டம், விரைவில், 110 அடியை எட்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது, பாதுகாப்பு கருதி, அணையில் இருந்து, தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறினர். மழை வலுத்து வருவதால், தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மழை பாதிப்பை தடுப்பது குறித்த ஆலோசனை கூட்டம்**

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில், வரும், 17ம் தேதி வரை பருவமழை இருக்கும் என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், மழை பாதிப்பு குறித்து எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனை கூட்டம், கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடந்தது.

கூட்டத்தில் அவர் பேசியதாவது: மாவட்டத்தில் மழையால், 365 மின்கம்பங்கள் சேதமடைந்தது. இவை சரிசெய்யப்பட்டு, மின் வினியோகம் சீரமைக்கப்பட்டுள்ளது. மழைக்கு, 22 மாடு, 17 ஆடுகள் இறந்துள்ளன. மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள, 610 ஏரி, ஊராட்சி கட்டுப்பாட்டின் கீழ் உள்ள, 1,250 ஏரிகள், சராசரியாக, 50 முதல், 60 சதவீதம் வரை தற்போது நீர் நிரம்பியுள்ளது. 10 சதவீதம் ஏரிகள் முழுமையாக நீர் நிரம்பியுள்ளது. நீர் முழுவதும் நிரம்பிய ஏரிகளில், மதகு கரை பலப்படுத்தப்படவும், தேவையான அளவு நீர் நிரம்பியவுடன் அதிகமான நீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை, இரவு நேரங்களில் எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது, அவசர தேவைக்காக, 18 மருத்துவ குழுக்கள், 10 ஆம்புலன்ஸ்கள் தயார் நிலையில் உள்ளன. பள்ளிகளில், பழைய

கட்டடங்களில் பள்ளி மாணவர்களை அமரவைக்க கூடாது. தேவையானால் அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்கள் உள்ளூர் விடுமுறை அளிக்க அனுமதி அளிக்கவும், திங்கட்கிழமை தொடங்க உள்ள அரையாண்டு தேர்வை தள்ளி வைக்க கல்வித்துறை அனுமதி அளித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் கூறுகையில், "ஏரிக்கரைகளை பலப்படுத்த மணல் மூட்டைகளை பயன்படுத்த வேண்டும். பொதுப்பணித்துறை அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்தந்த பகுதி ஏரிகளை கண்காணிக்க வேண்டும்," என்றார்.

### பருவமழை முன்னெச்சரிக்கை நகராட்சியில் ஆய்வு கூட்டம்

விழுப்புரம்: விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வு கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு, நகர் மன்ற சேர்மன் பாஸ்கரன் தலைமை தாங்கினார். ஆணையர் (பொறுப்பு) செல்வம், உதவி பொறியாளர் மெய்பொருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுப்பணி ஆய்வாளர் பாணுரேகா, கட்டடம் ஆய்வாளர் கோகுலகிருஷ்ணன், உதவியாளர் மீனாட்சி சுந்தரம் உட்பட துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில், தற்போது பெய்து வரும் பருவமழை தீவிரத்தை யொட்டி, விழுப்புரம் நகர பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கும், தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடந்தது.

### வடகிழக்கு பருவ மழை தீவிரம்: மாவட்டத்தில் 159 ஏரிகளில் நீர் நிரம்பியது

விழுப்புரம்: பருவமழைக்கு மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள 159 ஏரிகளில் தண்ணீர் நிரம்பி உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் 832 ஏரிகள் மற்றும் 3 அணைகள் உள்ளது. இதில், விழுப்புரம் மண்டலத்தில் 620 ஏரி

மற்றும் வீடுர் அணையும், விருத்தாச்சலம் மண்டலத்தில் உள்ள கள்ளக்குறிச்சி பகுதியில் 212 ஏரி மற்றும் கோமுகி, மணிமுக்தா அணையும் உள்ளன.

159 ஏரிகள் நிரம்பியது:

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் வடக்கிழக்கு பருவமழையால், ஏரிகள் மற்றும் அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 832 ஏரிகளில், 159 ஏரிகள் நூறு சதவீதமும், 165 ஏரிகள் 75 சதவீதமும், 193 ஏரிகள் 50 சதவீதமும், 315 ஏரிகள் 50 சதவீதத்திற்கு கீழ் தண்ணீர் நிரம்பியுள்ளது. மேலும், மாவட்டத்தில் 50 ஏரிகள் தண்ணீர் நிரம்பி உடைந்துள்ளது.

அணைகள்:

மாவட்டத்தில் உள்ள வீடுர் அணையின் மொத்த கொள்ளளவான 32 அடியில் (605 மில்லி கன அடி) தற்போது, 23.200 கன அடி தண்ணீர் உள்ளது. இந்த அணைக்கு 26 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதேபோன்று, கள்ளக்குறிச்சி அடுத்த சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையின் மொத்த கொள்ளளவான 36 அடியில் (736 மில்லி கன அடி) தற்போது, 32 கன அடி தண்ணீர் உள்ளது. இதற்கு, 125 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

மேலும், கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 46 அடியில், தற்போது, 44 கன அடி தண்ணீர் உள்ளது. இதற்கு, 354.49 கன அடி தண்ணீர் வந்த வண்ணம் உள்ளது.

இந்த அணையின் பாதுகாப்பு கருதி ஆறு வழியாக 298.49 கன அடியும், வாய்க்கால் வழியாக 50 கன அடியும் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.மாவட்டத்தில் தொடர்ந்து பருவமழை பெய்தால், வெகுவாக ஏரிகளில் தண்ணீர் நிரம்பும் நிலை உள்ளது. மாவட்டத்தில் உள்ள ஏரிகளின் கரைகளை பலப்படுத்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**கால்நடை மருத்துவமனை திறப்பு**

கண்டமங்கலம்: கண்டமங்கலம் ஒன்றியம் வடவாம்பலத்தில் அரசு கால்நடைத்துறை மருத்துவமனை கட்டடத்தை முதல்வர் ஜெ., வீடியோ கான்பரன்ஸ் மூலம் திறந்து வைத்தார்.

விழாவையொட்டி முன்னாள் அமைச்சர் சண்முகம் எம்.எல்.ஏ., புதிய மருத்துவமனை கட்டட வளாகத்தில், பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார். அ.தி.மு.க., முன்னாள் ஒன்றிய செயலாளர்கள் கண்ணன், சுரேஷ்பாபு, ஒன்றிய துணை சேர்மன் சீத்தாராமன், ஊராட்சி தலைவர்கள் ராமலிங்கம், குமரேசன், முருகன், மலர்விழிநாகராஜன் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி செயலாளர் வைத்தி, கூட்டுறவு சங்க தலைவர் பாலக்கிருஷ்ணன், மேலவை பிரதிநிதி சங்கர், கூட்டுறவு சங்க துணை தலைவர் ஆதி, மாவட்ட எம்.ஜி.ஆர் மன்றம் தண்டபாணி, நகர மன்ற கவுன்சிலர்கள் ராமதாஸ், வரதன் மற்றும் முருகன், கலியமூர்த்தி, பழனிவேல் கலந்துக் கொண்டனர்.

**மரக்காணத்தில் 23 மி.மீ., மழை**

விழுப்புரம்: மரக்காணத்தில் நேற்று பகல் நேரத்தில், 23 மி.மீ., மழை பதிவானது.

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று காலை 8:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை, மொத்தம் 175.5 மி.மீ., மழை பதிவானது. செஞ்சியில் 11 மி.மீ., திருக்கோவிலூர் 10 மி.மீ., திண்டிவனம் 13 மி.மீ, விழுப்புரம் 22 மி.மீ., உளுந்தூர்பேட்டை 17 மி.மீ., வானூர் 22 மி.மீ., சங்கராபரம் ஒரு மி.மீ., கள்ளக்குறிச்சி 6.5 மி.மீ., மற்றும் மரக்காணத்தில் 23 மி.மீ., மழை பெய்துள்ளது.

**அணைகளில் நீர் மட்டம் கிடுகிடு உயர்வு: அதிகாரிகள் நேரடி கண்காணிப்பு**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதி அணைகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளதால், அதிகாரிகள் நேரடியாக கண்காணித்து வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்து வரும் மழையில் அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கல்வராயன்மலை அடிவாரத்திலுள்ள கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 46 அடியில் (561 மில்லியன் கன அடி) 44 அடிக்கு(489

மில்லியன் கன அடி ) நீர் மட்டம் உயர்ந்தது. அணையில் 44 அடிக்கு மட்டுமே, தண்ணீர் இருப்பு வைக்க முடியும்.

தொடர் நீர் வரத்து நீடிப்பதால் நேற்று மாலை 4:00 மணி முதல் வரத்து நீரான 600 கன அடியும், ஆற்று வழியாக வெளியேற்றப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஊர்காவல் படை ஐ.ஜி., பெரியய்யா, விழுப்புரம் எஸ்.பி., நரேந்திரன் நாயர் ஆகியோர், நேற்று மாலை கோமுகி அணை பாதுகாப்பு பணிகளை, நேரில் ஆய்வு செய்தனர்.

மணிமுக்தா அணை:

கள்ளக்குறிச்சி அடுத்த சூளாங்குறிச்சி மணிமுக்தா அணையின் மொத்த உயரம் 36 அடி(736 மில்லியன் கன அடி). கல்வராயன்மலையில் உருவாகும் மணி, முக்தா ஆகிய நதிகள் மற்றும் பாப்பாங்கால் ஓடை வழியாக அணைக்கு நீர் வரத்து உள்ளது.

தற்போது அணையில் நேற்று மாலை 5 மணியளவில் 32.20 அடி வரை (472 மில்லியன் கன அடி) நீர் மட்டம் உயர்ந்தது. மேலும் 34 அடிக்கு மேல் நீர் மட்டம், உயர்ந்தால் ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்படும் என்பதால் கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரு அணைகளுக்கும் தொடர்ந்து நீர் வரத்து உள்ளதால், அணையின் உதவி செயற்பொறியாளர்கள் பிரபு, கணேசன் மற்றும் ஊழியர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மழையால் பூஜ்யம் ஆனது காற்றாலை மின் உற்பத்தி

மேட்டூர்: பருவமழை காரணமாக, நேற்று முன்தினம், 66 மெகாவாட் ஆக இருந்த காற்றாலை மின் உற்பத்தி, நேற்று பூஜ்யம் ஆனது. தமிழகத்திலுள்ள தனியார் மற்றும் மின்வாரிய காற்றாலைகள் மூலம், 7,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். தென்மேற்கு பருவகாற்று சீசன் முடிந்ததால், கடந்த இரு மாதங்களாக காற்றாலைகளில் குறைவான மின்சாரமே உற்பத்தியாகிறது. எனினும், சில நாட்களுக்கு முன்பு வரை காற்று சுமாராக

வீசியதால், காற்றாலைகள் மூலம், 600 மெகாவாட் வரை மின்சாரம் கிடைத்தது. இந்நிலையில், தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. காற்றின் வேகம் குறைந்ததால், நேற்று முன்தினம், 66 மெகாவாட் ஆக இருந்த, காற்றாலை மின் உற்பத்தி நேற்று பூஜ்யம் ஆனது. எனினும், மழையால் தமிழகத்தில் மின்தேவை நேற்று, 8,750 மெகாவாட் ஆக சரிந்ததால், காற்றாலை மின்சாரம் கிடைக்காவிடினும், மின்தேவையை வாரியம் சமாளித்தது.

### ஏரிக்கு தண்ணீர் வருகை: விவசாயிகள் மகிழ்ச்சி

பனமரத்துப்பட்டி: பத்து ஆண்டுகளுக்கு பிறகு, பனமரத்துப்பட்டி ஏரிக்கு, தண்ணீர் வர துவங்கி உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரி, 2,400 ஏக்கர் பரப்பளவு கொண்டது. மாவட்டத்தின் பெரிய ஏரி என்று பெயர் பெற்ற, பனமரத்துப்பட்டி ஏரி, 2005ம் ஆண்டுக்கு பின் நீர்வரத்து இன்றி வறண்டு கிடக்கிறது. எனவே, மழை நீர் வழிதடங்களின் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் என்று, விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக, பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், கனமழை பெய்து வருவதால், ஏரிக்கு தண்ணீர் வர துவங்கி உள்ளது. வரட்டாறு, கூட்டாறு வழியாக ஏரியின் கிழக்கு பகுதிக்கு மழை நீர் வருகிறது. மணல் எடுக்க, வெட்டப்பட்ட மெகா பள்ளங்களில் மழை நீர் நிரம்பி வருகிறது. நரிக்கல் கரடு பகுதியை சுற்றி மழை நீர் தேங்கி உள்ளது. அதேபோல், ஜருகுமலை அடிவார பகுதியில் இருக்கும் குழிகளில் மழை நீர் நிரம்பி வருகிறது. ஏரிக்கு மழை நீர் தொடர்ந்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### தொடர்மழை எதிரொலி: வெறிச்சோடியது முள்ளுக்குறிச்சி வாரச்சந்தை

நாமகிரிப்பேட்டை: தொடர்மழை காரணமாக, முள்ளுக்குறிச்சியில் நேற்று நடந்த ஞாயிறு சந்தை வெறிச்சோடிக் காணப்பட்டது. நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை அடுத்த, முள்ளுக்குறிச்சி ஊராட்சி, கொல்லிமலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை முள்ளுக்குறிச்சியில் சந்தை நடக்கும். கொல்லிமலையின் வடக்கு பகுதியான நரியன்காடு, வடகாடு, பெரக்கரநாடு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மலைவாழ் மக்கள் தங்களது வேளாண் நிலங்களில் விளையும் வாழை, அன்னாசி, பலா, கொய்யா உள்ளிட்ட பழங்களை முள்ளுக்குறிச்சி சந்தையில் விற்றுவிட்டு தங்களது வீட்டிற்கு தேவையான காய்கறி மற்றும் மற்ற பொருட்களை வாங்கி செல்வர்.

அதுமட்டுமின்றி, முள்ளுக்குறிச்சியை ஒட்டியுள்ள பெரப்பன்சோலை, பெரியகோம்பை, மலையாளப்பட்டி, புதூர் பாளப்பட்டி உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்தவர்களும் சந்தைக்கு வருவதால், சந்தையில் தேர்திருவிழா போல் கும்பல் அதிகமிருக்கும். முக்கியமாக தற்போது, முள்ளுக்குறிச்சி வழியாக கொல்லிமலைக்கு மாற்றுப்பாதை போடப்பட்டிருப்பதால், அதிக மக்கள் சந்தைக்கு வந்து செல்கின்றனர். இந்நிலையில், நேற்று பெய்த தொடர்மழை காரணமாக, முள்ளுக்குறிச்சி சந்தை காலையில் இருந்தே வெறிச்சோடிக்காணப்பட்டது. மலைவாழ் மக்கள் தங்களது வயல்களில் இருந்து பழங்கள் ஏதும் விற்பனைக்கு கொண்டுவரவில்லை. மாலை, 4 மணியளவில் மழை ஓரளவுக்கு குறைந்ததால் மக்கள் நடமாட்டம் இருந்தது. முக்கியமாக மலைவாழ் மக்கள், சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்தவர்கள் சந்தைக்கு வராததால் காய்கறி வியாபாரம் மந்தமாக இருந்தது.

இதுகுறித்து, இப்பகுதியை சேர்ந்த முல்லை இளவரசு கூறியதாவது: காலையில் இருந்து மழை பெய்து வருவதால் காய்கறி கடைகள் வெறிச்சோடியிருந்தது. தக்காளி விலை கிலோ, ரூ.80க்கு விற்கிறது. அதேபோல், கத்திரி, கேரட், அவரைக்காய் விலை உயர்ந்துள்ளது. இதனால், சந்தைக்கு வந்தவர்களும் மிக குறைவாகவே காய்கறிகளை வாங்கி சென்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## கனமழை பெய்தும் சின்னாறு அணைக்கு நீர் வரத்து இல்லை: 2,000 ஏக்கர் பாசனம் கேள்விக்குறியால் கவலை

ஓசூர்: சூளகிரி பகுதியில் கடந்த, ஒரு வாரமாக கனமழை பெய்தும், சின்னாறு அணைக்கு தண்ணீர் வரத்தே இல்லாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அடுத்த சூளகிரி அருகே, 30 ஆண்டுக்கு முன் சின்னாறு அணை கட்டப்பட்டது. பேரிகை, அத்திமுகம், செட்டிப்பள்ளி, புலியரசி, பீளாளம், அன்னசந்திரம், தொட்டி, மாரண்டப்பள்ளி உட்பட பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழை நீரை அடிப்படையாக கொண்டு, இந்த அணை கட்டப்பட்டது. அதேபோல், சூளகிரி துரை ஏரியில் இருந்து வரும் உபரி நீரின் மூலமும் அணை நிரம்பி வந்தது.

விவசாயம் கடுமையாக பாதிப்பு: கடந்த பல ஆண்டுகளாக, சின்னாறு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்யாததாலும், துரை ஏரிக்கு தண்ணீர் வரத்து தடை பட்டதாலும், சின்னாறு அணைக்கு நீர்வரத்து பாதிக்கப்பட்டு, குட்டை போல் காட்சியளிக்கிறது. சின்னாறு அணை நிரம்பும் பட்சத்தில், சூளகிரி, யோகிபுரம், காமநாயக்கன்பேட்டை, மைதாண்டப்பள்ளி, கிருஷ்ணேப்பள்ளி, தீரனப்பள்ளி, சென்னப்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள, 2,000 ஏக்கர் பாசன வசதி பெறும். ஆனால், கடந்த, 15 ஆண்டுக்கும் மேலாக, சின்னாறு அணை நிரம்பாததால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சின்னாறு நீர்பிடிப்பு பகுதியில் கடந்த, ஒரு வாரமாக கனமழை பெய்து வந்த போதிலும், அணைக்கு, ஒரு சொட்டு தண்ணீர் கூட வரவில்லை.

மாவட்ட நிர்வாகம் அலட்சியம்: கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர், மருதாண்டப்பள்ளி வரை வருகிறது. மருதாண்டப்பள்ளியில் இருந்து, ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள துரை ஏரிக்கு, கெலவரப்பள்ளி தண்ணீர் திறந்து விடப்பட்டால், சின்னாறு அணை நிரம்பும் வாய்ப்பு உள்ளது. தென்பெண்ணை ஆற்றில் தற்போது வெள்ளம் கரைபுரண்டு ஓடும் நிலையில், துரை ஏரிக்கு தண்ணீர் திருப்பி விட மாவட்ட நிர்வாகம் அலட்சியம் காட்டி வருகிறது.

விவசாயிகளின் கனவு கானல் நீரானது: கடந்த சில மாதங்களுக்கு முன், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, துரை ஏரிக்கு கெலவரப்பள்ளி தண்ணீர் கொண்டு வரப்பட்டது. அதனால் சின்னாறு அணை நிரம்பும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், துரை ஏரி நிரம்பும் முன் தண்ணீர் நிறுத்தப்பட்டது. அதனால் விவசாயிகளின் கனவு கானல் நீரானது. சூளகிரி பகுதி விவசாயிகளின் முக்கிய முயற்சி துரை ஏரிக்கு தண்ணீர் கொண்டு வருவது தான். அப்படி துரை ஏரி நிரம்பினால், அதன் உபரி நீர் மூலம் சின்னாறு அணை நிரம்பும். 2,000 ஏக்கர் பாசன வசதி பெறும் என, விவசாயிகள் பல ஆண்டுகளாக எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு: 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், தொடர் மழை பெய்வதால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த, 9ம் தேதி முதல் கன மழை பெய்து வருகிறது. இதனால் பெரும்பாலான நீர் நிலைகள் நிரம்பி வருகிறது. நீர் வரத்து அதிகரிப்பால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை நிலவரப்படி, கே.ஆர்.பி., அணைக்கு வினாடிக்கு, 1,851 கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையின் பாதுகாப்பு கருதி, வினாடிக்கு, 2,107 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் மொத்த நீர்மட்டமான, 52 அடியில், தற்போது, 51.3 அடி தண்ணீர்

உள்ளது. நேற்று காலை முதல் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்வதால், இன்று (நவ.16) அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளதால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் என, கே.ஆர்.பி., அணை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ் தெரிவித்துள்ளார். இதனால், தென்பெண்ணை ஆற்றங்கரை ஓரம் உள்ள, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய, 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நேற்று காலை முதல், மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் தொடர் மழை பெய்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. ஞாயிறு விடுமுறை என்றாலும் பொதுமக்களால் மார்க்கெட் மற்றும் கடைகளுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஞாயிற்றுக்கிழமையிலும் பெரும்பாலான தனியார் பள்ளிகள் பத்து மற்றும் பிளஸ் 2 மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகளை நடத்தினர். இதனால் மாணவர்கள் மழையில் நனைந்தவாறு பள்ளிக்கு சென்றனர்.

## வெள்ள தடுப்பு பணி ஆய்வு கூட்டம்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மழையால் ஏற்பட்ட சேதப்பகுதிகள் மற்றும் தொடர் மழை காரணமாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து அனைத்து துறை ஆய்வு கூட்டம் நடந்தது. இதில், தமிழக வேளாண்மைத்துறை செயலாளர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வெள்ள நிவாரண பணிகளை கண்காணிக்கும் சிறப்பு அதிகாரி ராஜேஷ் லக்கானி பங்கேற்று பேசியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வெள்ள சேதத் தடுப்பு பணிகள் மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து அனைத்து அலுவலர்கள், விழிப்போடு பணியாற்ற வேண்டும். வெள்ள சேதத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றை உடனடியாக வழங்க வேண்டும். மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் தடுக்க, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏரி, குளங்களில் நீர் நிரம்பிய நிலையில், உபரி நீரை வெளியேறும் வகையில் மதகுகளை முறையாக பராமரிக்க வேண்டும். பொதுப்பணித்துறை அலுவலர்களுடன், ஊரக

வளர்ச்சித்துறை பொறியாளர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும். தாழ்வான பகுதிகளில் வசிக்க கூடிய மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து சென்று தங்க வைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கலெக்டர் ராஜேஸ், எஸ்.பி., திருநாவுக்கரசு உட்பட அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

### சத்தியில் சாரல் மழை

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் பகுதியில் கடந்த தீபாவளியன்று தொடர்ந்து பரவலாக மழை பெய்தது. அதையடுத்து இரண்டு நாட்கள் மழையின்றி வெயில் வீசியது. இதனால் மக்கள் அன்றாட பணியில் கவனம் செலுத்த தொடங்கினர். விவசாய பணிகளும் வேகமாக நடக்க தொடங்கியது. இந்நிலையில் புயல் காரணமாக, சத்தியமங்கலம் பகுதியில் நேற்று காலை எட்டு மணி முதல் இரவு வரை சாரல் மழை பெய்ய தொடங்கியது. லேசான காற்றுடன் பெய்த மழையால் மக்கள் வீடுகளில் முடங்கினர். இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

### பார்த்தீனியம் செடிகளை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை

மொடக்குறிச்சி: நன்கு வளரக்கூடிய விஷத்தன்மை கொண்ட பார்த்தீனியம் செடிகளை விவசாயிகள் எளிதாக கட்டுப்படுத்தலாம் என ஈரோடு வேளாண்மை இணை இயக்குனர் திருமூர்த்தி விவசாயிகளுக்கு யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் திருமூர்த்தி கூறியதாவது: பார்த்தீனியம் செடி எல்லா பருவக்காலங்களிலும், அனைத்து வகை மண்களிலும் வளரக்கூடிய ஒரு விஷத்தன்மை கொண்ட செடியாகும். ஒரு செடி 5000 முதல் 10000 வரை விதைகளை உற்பத்தி செய்யும் திறன்கொண்டது. காற்றின் மூலமாகவும் பரவும். ஆண்டு முழுவதும் பூக்கும் தன்மை கொண்டது. இந்த செடியில் பார்த்தினின் என்ற நச்சு பொருள் இருப்பதால் கால்நடைகளை பாதிப்பதோடு, மனிதனுக்கு ஆஸ்துமா மற்றும் தோல் வியாதிகளை உண்டாக்குகிறது. இதை விவசாயிகள் எளிதாக கட்டுப்படுத்தலாம். பூ பூக்கும் முன் இந்த களைச் செடியினை கையுறை அல்லது கருவியை உபயோகித்து,

சிறு செடியாக இருக்கும் போதே வேருடன் அகற்றி எறிய வேண்டும். பார்த்தீனியம் பரவியுள்ள வயல்களில் பயிர் சுழற்சி முறையில் சாமந்தியை பயிரிடலாம். பார்த்தீனியம் களைகளை கம்போஸ்ட் செய்தல் மூலம் விதைகளின் முளைப்பு திறனை, அழிக்கலாம். உயிரியல் மூலம் ஜைக்கோகிரம்மா பைகலரேடா இலை உண்ணும் வண்டுகளை விட்டும் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்தலாம். விதை முளைப்பதற்கு முன், இரசாயண முறையில், அட்ரசின் களைக்கொல்லி ஏக்கருக்கு ஒரு கிலோவை தெளிக்கலாம். மேலும் பூ பூக்கும் முன் ஒரு லிட்டர் தண்ணீரில் 200 கிராம் சாதாரண உப்பு, 2 மில்லி டீப்பால் கரைசலை கலந்து தெளித்தால் பார்த்தீனியம் செடி வராமல் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பசுந்தேயிலைக்குரிய கடந்த வார சராசரி விலை பட்டியல்

ஊட்டி: தேயிலை விவசாயிகள் தொழிற்சாலைகளுக்கு வழங்கும், பசுந்தேயிலைக்குரிய கடந்த வார சராசரி விலைப் பட்டியலை தேயிலை வாரியம் வெளியிட்டுள்ளது.

குன்னூர் தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு அறிக்கை: கடந்த வாரம், மாவட்ட வட்டார அளவில், தனியார் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் ஏலத்தில் விற்கப்பட்ட சி.டி.சி., ரக தேயிலை துாளின் சராசரி விலை நிலவரப்படி, பசுந்தேயிலைக்கு வழங்கப்பட வேண்டிய சராசரி விலை அறிவிக்கப்பட்டுள்ளது.

விலை பகிர்வு மற்றும் சராசரி உற்பத்தி அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ள இந்த விலை, மாவட்டத்தின் அனைத்து வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கும் பொருந்தும். எனவே, விவசாயிகள், இந்த சராசரி விலைக்கு குறையாமல் தங்கள் பசுந்தேயிலையை விற்க வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் உள்ள தேயிலை விவசாயிகள், தேயிலை வாரியத்தின், 12வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், மறு நடவு, புதிய தேயிலை தோட்டம் மற்றும் கவாத்து செய்தல் போன்ற பணிகளுக்கு தேயிலை வாரியத்தால் வழங்கப்படும் உயர்த்தப்பட்ட மானியத்தை பெற்று பயன் பெற வேண்டும். மேலும், சிறு தேயிலை விவசாயிகள் சுய உதவிக் குழு அமைத்து, அதன் மூலம், வளர்ச்சி சுழல் நிதி பெற்று, உரம் வாங்க, தேயிலை கொள்முதல் நிலையம்

அமைக்க, வாகனம் மற்றும் இலைப் பைக்கான மானியம் பெற்று, பயன் பெற வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு, தேயிலை வாரிய கோத்தகிரி, குந்தா மற்றும் கூடலூர் வட்டார அலுவலகங்கள், குன்னூர் மண்டல அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். சிறு விவசாயிகள் தரமான பசுந்தேயிலையை பறித்து அதிகபட்ச விலையை பெற்று, நீலகிரி தேயிலையின் தரத்தை உலகளவில் உயர்த்த வேண்டும்.இவ்வாறு, பால்ராசு தெரிவித்துள்ளார்.

## பிளாஸ்டிக் ரெய்டு ஜரூர்: விதிமீறியவர்களுக்கு விழிப்புணர்வு

ஊட்டி : நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த, விடுமுறை நாட்களில், பிளாஸ்டிக் ரெய்டு நடத்தப்பட்டு, அபராதம் விதிக்கப்படுகிறது.

நீலகிரியில், பிளாஸ்டிக் கேரி பை உட்பட 40 மைக்ரான் எடைக்கு குறைவாக உள்ள பிளாஸ்டிக் உபயோகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பிளாஸ்டிக் புழக்கம், பயன்பாடு முழு அள வில் கட்டுக்குள் வரவில்லை. இதனால், தொடர் ரெய்டு, அபராதம் விதிப்பது போன்ற நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் முடுக்கிவிட்டுள்ளது.

அதன்படி, குழந்தைகள் தின விழா விடுமுறை தினமான நேற்று முன்தினம், மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவில், நகராட்சி, பேரூராட்சி அலுவலர்களை உள்ளடக்கி, 10 குழுக்கள் அமைக்கப்பட்டு, ஊட்டி, குன்னூர், கூடலூர், நெல்லியாளம் நகராட்சிப் பகுதிகளில், அனைத்து பேரூராட்சிப் பகுதிகளில் பிளாஸ்டிக் ரெய்டு நடத்தப்பட்டது.

வெளியூரில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள், அவர்களது வாகனங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளால் எடுத்து வரப்பட்ட பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டன; அதற்கு மாற்றாக, சுற்றுச்சூழலுக்கு உகந்த துணிப்பைகள் வழங்கப்பட்டன. ஆய்வில், ஒன்பது கிலோ பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டு, அவற் றை பயன்படுத்திய குற்றத்திற்காக, 23 ஆயிரத்து 445 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது.

கலெக்டர் சங்கர் கூறுகையில், “பொது மக்கள், சுற்றுலா பயணிகள், பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தக் கூடாது என்ற நோக்கில் தான், இந்த ரெய்டு, அபராத நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நீலகிரியின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப்படும், பிளாஸ்டிக் தவிர்ப்பு பணிக்கு, சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

“வரும் நாட்களிலும், இத்தகைய நடவடிக்கை தொடரும் என்பதால், வெளியூரில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள், அபராத நடவடிக்கையில் இருந்து தப்பிக்க, பிளாஸ்டிக் கேரி பைகள் எடுத்து வருவதை தவிர்க்க வேண்டும்,” என்றார்.

## மண் சரிவை தடுக்க தடுப்புச்சுவர் அவசியம்

கோத்தகிரி: 'கோத்தகிரி பேரூராட்சி அலுவலகம் அருகே, மண்சரிவு ஏற்படுவதை தடுக்க தடுப்புச்சுவர் அமைக்கவேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோத்தகிரி பஸ் நிலையத்தில் இருந்து, பேரூராட்சி அலுவலகம் வரை, 5 ஆண்டுகளுக்கு முன், மண்திட்டு அகற்றப்பட்டு, சாலை விரிவுப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில், வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. சாலையில் இருந்து, 30 அடி உயரம் திட்டின்மேல், மரங்கள் மற்றும் பாறைகள் உள்ளன. இங்கு தடுப்புச்சுவர் அமைக்காததால், அடிக்கடி மண்சரிவு ஏற்படுகிறது. இதனால், அப்பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கும், பொதுமக்களுக்கும் பிரச்னைகள் ஏற்படுகின்றன.

இதுகுறித்து ராமன் என்பவர் கூறுகை யில், "இங்கு மழைக்காலங்களில் ஏற்படும் மண்சரிவால், கீழ்பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்கள், பழுதடைகின்றன,"என்றார். எனவே, இந்த இடத்தில், சாலை மட்டத்தில் இருந்து, 10 அடி உயரத்திற்கு தடுப்புச்சுவர் அமைக்கவேண்டும் என, மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## கொடைக்கானலில் பயிர்கள் சேதம்: அதிகாரிகள் ஆய்வு

கொடைக்கானல்: கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் 90 எக்டேரில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. இது குறித்து அரசு தோட்டக்கலைத்துறையினர்,வருவாய் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொடைக்கானலில் வில்பட்டி, பள்ளங்கி, மேல்மலை கிராமங்களான பூம்பாறை,மன்னவனுார், பூண்டி,கூக்கால் உட்பட பல இடங்களில் காரட், பட்டர் பீன்ஸ், முருங்கை பீன்ஸ் பயிரிட்டுள்ளனர். கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் நீர் பெருக்கெடுத்து நிலங்களை சேதப்படுத்தியுள்ளன.

விவசாயிகள் தோட்டக்கலைத்துறையினருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து வருவாய்த்துறையினரும், தோட்டக்கலைத்துறையினரும் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு சென்று ஆய்வு செய்து வருகின்றனர்.நேற்று முன்தினம் மன்னவனுார், பூண்டியில் கேரட், பட்டர் பீன்ஸ், முருங்கை பீன்ஸ் உட்பட சேதமடைந்த பயிர்களை கொடைக்கானல் ஆர்.டி.ஓ.சுரேஷ், தோட்டக்கலை துணை இயக்குனர் கிஷோர் குமார், வி.ஏ.ஓ. ஆறுமுகம், சரவணன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

தோட்டக்கலை துணை இயக்குனர் கிஷோர் குமார் கூறியதாவது: மன்னவனுார், பூண்டி கிராமத்திற்கு சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டுள்ளோம். மறு ஆய்வின்படி பயிர்கள் பாதித்துள்ள நிலங்களை ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**துவரை மகசூலை அதிகரிக்க மானியம்**

நத்தம்:நத்தம் பகுதியில் துவரை சாகுபடியில் மகசூலை அதிகரிக்கும் வகையில் டி. ஏ. பி., கரைசல் தெளிக்க மானியம் வழங்கப்படுகிறது.

சமுத்திராப்பட்டி, மூங்கில்பட்டி, களத்துப்பட்டி, செந்துறை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மானாவாரியாக துவரை சாகுபடி செய்துள்ளனர். தற்போது பூ உருவாகி காய் பிடிக்கும் தருவாயில் உள்ளது. அதிக காய்கள்

பிடிக்கவும், பருப்புகள் திரட்சியாக உருவாகவும் டி. ஏ. பி., கரைசல் உரத்தை ஏக்கருக்கு 4 கிலோ வீதம் 20 லிட்டர் தண்ணீரில் ஊரவைக்க வேண்டும்.

மறுநாள் காலையில் தண்ணீரை வடிகட்டி தெளிந்த நீரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலை நேரத்தில் தெளிக்க வேண்டுமென வேளாண்மை துறையினர் தெரிவித்தனர். இரண்டரை ஏக்கரில் தெளிப்பதற்கு ரூ.650 வீதம் பணி நிறைவு மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதே போல் உளுந்து, தட்டை பயிர், பாசிப்பயிர் உள்ளிட்ட பயறு வகை சாகுபடிக்கும் மானியம் வழங்கப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள் நத்தம் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அனுகலாம்.

## தேனியில் இயற்கை காளான் கிலோ ரூ.480 க்கு விற்பனை

தேனி:தேனியில் இயற்கை காளான் சீசன் துவங்கி உள்ளது. ஒரு கிலோ காளான் கிலோ 480 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.தேனியை சுற்றி உள்ள பூதிப்புரம் சன்னாசியப்பன் கோயில் கரடு, வீரப்ப அய்யனார் கோயில் மலையடிவார நகுதிகளில் இயற்கை காளான்கள் அதிகம் விளைகிறது.

மண்வெட்டி காளான், மூக்குத்தி காளான், முட்டை காளான், பால் காளான், கருமுத்து காளான் ஆகிய வகைகளைச் சேர்ந்த இந்த இயற்கை காளான்களை பெண்கள் பறித்து வந்து தேனி எடமால் தெருவில் விற்பனை செய்கின்றனர்.

முட்டைகாளான் கிலோ 480 க்கும், மற்ற காளான் வகைகள் 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.காளான் விற்பனை செய்யும் பூதிப்புரம் சின்னமணி, 38, கூறியதாவது: மின்னல் ஏற்படும் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும், அமாவாசை, பவுர்ணமி நாட்களிலும் காளான் அதிகம் உற்பத்தியாகும்.

தற்போது மின்னல் குறைவால் காளான்கள் குறைவாக உள்ளது. தினமும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து சென்று 3 மணி நேரம் அலைந்து தேடினாலும் 2 கிலோ காளான்களை கூட பறிக்க முடியவில்லை. அந்த அளவிற்கு விளைச்சல்

குறைவாக உள்ளது, பவுர்ணமி, அமாவாசை காலங்களில் அதிக விளைச்சல் கிடக்கும், என்றார்.

## நீர் வரத்து அதிகரிப்பால் அணைகளின் நீர் மட்டம் உயர்வு

தேனி:தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. மழையளவு விபரம்: கூடலூர் -5 மி.மீ., பெரியாறு -11.8 மி.மீ., தேக்கடி -16.4 மி.மீ., சோத்துப்பாறை -1 மி.மீ., மழை பதிவானது. மாவட்டத்தில் பல பகுதிகளில் தூரலும், சாரலுமாகவும், வெயில் இன்றி நேற்றைய சீதோஷ்ண நிலை இருந்தது.

அணைகளின் நீர் மட்டம்: பெரியாறு அணை நீர் மட்டம் -130.60 அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 1,600 கன அடி நீர் வரத்து உள்ளது. 511 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

வைகை அணையின் நீர்மட்டம் 54.59 (அணையின் உயரம்-71அடி) அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 809 கன அடி நீர் வரத்தும், 60கன அடிநீர் வெளியேற்றமும் உள்ளது.

மஞ்சளாறு அணை நீர் மட்டம் 56.60 அடியாகவும் (அணையின் உயரம் -57 அடி) உள்ளது. வினாடிக்கு 247 கனஅடி நீர் வரத்தும், 196 கனஅடி வெளியேற்றமும் உள்ளது. சோத்துப்பாறை அணையின் நீர் மட்டம் 126.28 அடியாக (அணையின் உயரம் 126.28 அடி) நிறைந்துள்ளது. வினாடிக்கு நீர் வரத்து 15 கனஅடி உள்ளது. அதே அளவு நீர் வெளியேற்றப்படுகிறது.

சண்முகாநதி அணை நீர் மட்டம் 35.10 அடியாகவும் (அணையின் உயரம் -51அடி) உள்ளது. நீர் வரத்து வினாடிக்கு 5 கன அடி உள்ளது. வெளியேற்றம் இல்லை

## ஹைவேவிஸ் அணைகள் நிரம்பின வைகை ஆற்றில் நீர் வரத்து துவக்கம்

தேனி:தேனி மாவட்டத்தின் சுற்றுலா பகுதியான ஹைவேவிஸ் மலையில் ஹைவேவிஸ், மணலாறு, வெள்ளியாறு, தூவானம், இரவங்கலார் ஆகிய 5 சிறிய அணைகள் உள்ளன. இப்பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக மழை

இல்லாததால், இந்த அணைகள் வறண்டு கிடந்தன. நடப்பு ஆண்டு தென்மேற்கு பருவமழை தொடர்ந்து சாரலாக பெய்தது.

கடந்த சிலநாட்களாக வடகிழக்கு பருவமழை ஹைவேவிஸ், மேகமலை பகுதிகளில் நன்கு பெய்து வருவதால், நீர் வரத்து அதிகரித்து 5 அணைகளும் நிரம்பி வழிகின்றன.

ஹைவேவிஸ் அணைகளில் நிரம்பி வழியும் நீரானது, சுருளி அருவியை வந்தடையும் வகையில் மலையை குடைந்து ஆங்கிலேயர் ஆட்சியில் சுரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சுரங்கப்பாதை வழியாக சுருளி அருவிக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மேகமலை மலைப்பகுதியில் பெய்து வரும் மழையால், வைகை ஆற்றிலும் நீர் வரத்துவங்கி உள்ளது. வைகை ஆற்றில் கண்டமனூர், வெங்கடாசலபுரத்தை கடந்து இரண்டு அடி உயரத்தில் தண்ணீர் வருகிறது. வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள நிலையிலேயே வைகை ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### இலை சுருட்டல் நோயால் மிளகாய் பயிர் பாதிப்பு

ஆர்.எஸ்.மங்கலம்:ஆர்.எஸ்.மங்கலம், பரமக்குடி, நயினார் கோவில் பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

அக்டோபரில் விதைப்பு செய்யப் பட்ட மிளகாய் செடிகள் தற்போது பூக்கும் பருவத்தில் உள்ளன. அவற்றை இலை சுருட்டல் நோய் தாக்கி உள்ளது. இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றியுள்ளது. மகசூல் பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

தோட்டக்கலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தொடர் மழையால் மிளகாய் செடிகளை இலை சுருட்டல் நோய் தாக்கியுள்ளது. வெயில் அடிக்க துவங்கியதும் நோய் தாக்குதல் குறையும். பூச்சி தாக்குதலினால் தான் இலை சுருட்டல் நோய் உருவாகிறது. இதை கட்டுப்படுத்த மருந்துகள் உள்ளன.

தேட்டக்கலை அலுவலகத்தை அணுகி மருந்துகளை வாங்கி கொள்ளலாம், என்றார்.

## ராமநாதபுரத்தில் தொடரும் கனமழை :கடலுக்கு செல்ல மீனவர்களுக்கு தடை

ராமேஸ்வரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று, நாளை விடுமுறை விடப் பட்டுள்ளது. மீனவர்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

வங்ககடலில் உருவாகிய காற்று அழுத்த தாழ்வு நிலையால் ராமேஸ்வரம், மண்டபம், பாம்பன், தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதிகளில் சூறாவளி காற்றுடன் தொடர்ந்து மழை பெய்கிறது. பாம்பன், தனுஷ்கோடியில் நேற்று கடல் கொந்தளிப்பாக காணப்பட்டது. நாள் முழுவதும் ராட்சத அலைகள் உருவாகியதால் மீனவர்கள் சிரமம் அடைந்தனர்.

அதேபோல் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து மழை பெய்ததால் மக்கள் வெளியில் நடமாட முடியாமல் வீடுக்குள் முடங்கினர். ராமேஸ்வரம் நகராட்சி அலுவலகம், சீதா தீர்த்தம் முன் தேசிய சாலையில் மழை நீர் 2 அடி உயரத்திற்கு குளம் போல் தேங்கியது. இதனால் சுற்றுலா பயணிகள் அவதிக்குள்ளாகினர். நேற்று மாலை தனுஷ்கோடியை சேர்ந்த 150 பேர் ராமேஸ்வரம் வேர்கோடு வரவேற்பு மையத்தில் தஞ்சம் அடைந்தனர்.

நேற்று அமைச்சர் சுந்தரராஜன், அரசு செயலாளர் விஜயகுமார், கலெக்டர் நந்தகுமார், ஐ.ஜி., அபய்குமார் சிங், மணிவண்ணன் எஸ்.பி., ராமேஸ்வரம், தங்கச்சிமடத்தில் அமைக்கப்பட்ட வரவேற்பு மையங்களை பார்வையிட்டனர். உணவு பொருள்கள், மருத்துவ வசதி, ஆபத்து கால உதவி வாகனம் ஆகியவற்றை தயாராக வைத்திருக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.

அதிகாரிகளுக்கு டோஸ்:ஆய்வின்போது ராமேஸ்வரத்தில் வரவேற்பு மையத்தில் உணவு பொருட்கள், போர்வை போன்ற வசதிகள் இல்லை.

இதனால் அரசு செயலர் விஜயகுமார், வருவாய் துறை, நகராட்சி அதிகாரிகளுக்கு "டோஸ்' விட்டார்.

நேற்று காலை 8 மணி வரை மழையளவு (மி.மீ.,): ராமேஸ் வரம் 38.2, வட்டாணம் 37, தொண்டி 24.6, திருவாடானை 23, தங்கச்சி மடம் 20.2, தீர்த்தாண்டதானம் 20, ஆர்.எஸ்.மங்கலம் 17, பாம்பன் 15.5, மண்டபம் 14.02, பள்ள மோர்க்குளம் 10, ராமேஸ்வரம் 9.8, பரமக்குடி 8.6, கமுதி 7, முதுகுளத்தூர் 6.6, வாலிநோக்கம் 5, கடலாடி 3.

பள்ளி, கல்லூரிக்கு விடுமுறை:கலெக்டர் நந்தகுமார் கூறியதாவது: மாவட்டம் முழுவதும் 37 வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டன. உணவு பொருள்கள், மருத்துவ வசதி தயாராக உள்ளன. மழை பாதிப்பு குறித்த புகார்களை "1077' என்ற இலவச எண்ணில் தெரிவிக்கலாம். மாவட்டத்தில் நவ., 16 (இன்று), 17 ல் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறையும், மீனவர்கள் மீன்பிடிக்க தடையும் விதிக்கப்பட்டு உள்ளது, என்றார்.

**ராமநாதபுரம் கழுகூரணியில் ஆறுமுக ருத்ராட்ச மரம் சுற்றுலா பயணிகள் வருகை**

ராமநாதபுரம்:ராமநாதபுரம் கழுகூரணியில் ஆறுமுக ருத்ராட்ச மரம் உள்ளது. இதனை ராமேஸ்வரம் வரும் சுற்றுலா பயணிகள் தரிசிக்கின்றனர்.

ருத்ராட்ச மரங்கள் பெரும்பாலும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் மலை காடுகளில் மட்டுமே காணப்படும். இத்தகைய ருத்ராட்ச மரம் வெப்பம் மிகுந்த ராமநாதபுரம் பகுதியில் வளர்ந்துள்ளது. இந்த மரம் கழுகூரணி சித்திவிநாயகர் செந்தில்வேலவர் கோயில் அருகே உள்ளது. இவை 6 முகம் கொண்ட ருத்ராட்ச மரம் என்கின்றனர்.

இந்த மரத்தை அப்பகுதி மக்கள் தெய்வமாக வழிப்படுவதால் ருத்ராட்ச விதையை யாரும் எடுப்பதில்லை. அவை மண்ணில் புதைந்து விடுகின்றன. இந்த மரம் அக்டோபரில் பூத்து காய்க்க துவங்குகிறது. சில பூக்கள் மட்டுமே காய்க்கின்றன. இந்த மரத்தை உள்ளூர் பகுதி மக்கள் மட்டுமின்றி, ராமேஸ்வரம் சுற்றுலா பயணிகளும் தரிசித்துவிட்டு செல்கின்றனர்.

கோயில் நிர்வாகி ஏ.கதிரேசன் கூறுகையில், "" எனது தாத்தா முத்துச்சாமி 30 ஆண்டுகளுக்கு முன் ருத்ராட்ச கன்றை நட்டார். தொடர்ந்து அதனை பாதுகாத்து வருகிறோம்," என்றார்.

காந்திகிராம பல்கலை உயிரியல் பேராசிரியர் ராமசுப்பு கூறுகையில், ""காடுபோன்று குளிர்ந்த சீதேஷன நிலையை உருவாக்கி ருத்ராட்ச மரத்தை வளர்த்திருப்பர். ஒருசில கோயில்களில் மட்டும் ருத்ராட்ச மரங்கள் உள்ளன. சாதாரணமாக வளர்க்க முடியாது," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**18 நாள்களில் 350 மி.மீட்டர் மழை**

தமிழகத்தில் கடந்த 18 நாள்களில் 350 மி.மீட்டர் அளவுக்கு மழை பெய்துள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை அக்டோபர் 28-இல் தொடங்கியது. அதைத் தொடர்ந்து, வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலையால், பலத்த மழை பெய்து வருகிறது.

நெய்வேலியில் அதிக மழை: குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் பலத்த மழை கொட்டியது. இதனால்,

அதிகபட்சமாக கடலூர் மாவட்டத்தில் உள்ள நெய்வேலியில் 480 மி.மீ., மழையும், காஞ்சிபுரத்தில் 340 மி.மீ. மழையும் பதிவானது.

அண்மையில் தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, சனிக்கிழமை தீவிரக் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாறியது. அதே இடத்தில் நீடிப்பதால், வட கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சராசரியைவிட 100 மி.மீ. குறைவுதான்: பருவ மழை தொடங்கிய 18 நாள்களில், தமிழகத்தில் இதுவரை சராசரியாக 350 மி.மீட்டர் அளவுக்கு மழை பெய்தது. இது, வழக்கமான சராசரியைவிட 100 மி.மீ. குறைவாகும்.

வட கிழக்குப் பருவமழை காலத்தில், தமிழகம் பொதுவாக பெறும் சராசரி மழையளவு 450 மி.மீ. ஆகும். 2004 முதல் 2011 வரை இயல்பாகவும், அதற்கு அதிகமாகவே மழை பெய்துள்ளது.

2012-இல் 16 சதவீதமும், 2013-இல் 33 சதவீதமும், 2014-இல் 2 சதவீதமும் குறைவாகவும் மழை பெய்துள்ளது. முந்தைய ஆண்டுகளில், தென் மாவட்டங்களில் அதிக மழை பெய்தாலும், சென்னை உள்பட வட மாவட்டங்களில் போதிய மழை பெய்யவில்லை என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு! சென்னை, அதன் புறநகர்ப் பகுதிகளுக்குக் குடிநீர் ஆதாரமாக விளங்கும் சோழவரம், பூண்டி, புழல், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகள் வறண்ட நிலை இருந்தன. வட கிழக்குப் பருவ மழை தொடங்கியப் பின்னர் தான், இந்த ஏரிகளுக்குத் தண்ணீர் வரத்து அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 அணைகளின் நீர்மட்டம் உயர்வு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால், சாத்தனூர் அணை உள்பட 4 அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை தொடக்கம், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள

காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஆகியவற்றால் திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர்மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஏரிகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

சாத்தனூர் அணை நீர்மட்டம் 105 அடி: மாவட்டத்தில் மிகவும் பழைமை வாய்ந்த சாத்தனூர் அணையின் நீர்மட்ட உயரம் 119 அடி. ஞாயிற்றுக்கிழமை (நவ.15) மாலை நிலவரப்படி அணையில் 105 அடி உயரத்தில் 4,520 மில்லியன் கன அடி தண்ணீர் தேங்கியிருந்தது. தென்பெண்ணை ஆறு வழியாக அணைக்கு விநாடிக்கு 3,472 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

குப்பநத்தம் அணை நீர்மட்டம் 53 அடி: செங்கம் அருகே உள்ள குப்பநத்தம் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 60 அடி. இதில், ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி, 52.81 அடி உயரத்துக்கு, 546.5 மில்லியன் கன அடி (மொத்த கொள்ளளவு 700 மில்லியன் கன அடி) தண்ணீர் தேங்கியுள்ளது. அணையின் நீர்வரத்து விநாடிக்கு 116.27 கன அடியாக உள்ளது.

செண்பகத்தோப்பு அணை நீர்மட்டம் 48 அடி: போளூர் வட்டத்தில் உள்ள செண்பகத்தோப்பு அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 62.32 அடி. இதில், ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி 47.89 அடி தண்ணீர் தேங்கியுள்ளது.

மொத்த கொள்ளளவு 287 மில்லியன் கன அடியில், 156.76 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. அணையின் நீர்வரத்து விநாடிக்கு 371.80 கன அடியாக உள்ளது.

மிருகண்டா அணை நீர்மட்டம் 21 அடி: மிருகண்டா அணை நீர்மட்ட உயரம் 22.37 அடியில், ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி 20.9 அடி உயரத்துக்கு தண்ணீர் தேங்கியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 90.63 கன அடி தண்ணீர் வருகிறது. இவ்வாறாக மாவட்டத்தில் உள்ள 4 அணைகளின் நீர்மட்டமும் தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மழை வெள்ளம்: கடலூர் மாவட்டத்தில் 4ஆவது நாளாக அமைச்சர்கள் ஆய்வு**

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தில் 4ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் தமிழக அமைச்சர்கள் குழுவினர் முகாமிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தினர்.

மாவட்டத்திலுள்ள செங்கல் ஓடை உடைப்பை மணல் மூட்டைகள் கொண்டு சீரமைக்கப்பட்டதை அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், எம்.சி.சம்பத் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முதல்வர் ஜெயலலிதா உத்தரவின் பேரில், தமிழக அமைச்சர்கள் குழு 4-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் ஆய்வு மேற்கொண்டது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வரும் நிவாரணம், சீரமைப்புப் பணிகளை அவர்கள் ஆய்வு செய்தனர்.

தமிழக நிதி, பொதுப் பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், வணிகவரி, பதிவுத் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் ஆகியோர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தினர்.

கடலூர் கேஎன்சி கல்லூரியில் தாற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களை பார்வையிட்டு, வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்த 128 பேருக்கு தலா ரூ.5 ஆயிரம் நிவாரண உதவித்தொகை, அரிசி, வேட்டி, சேலை, மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்கினர்.

தொடர்ந்து, கடலூர் திருவந்திபுரம் பகுதியில் கெடிலம் ஆற்றின் கரையில் 2 இடங்களில் ஏற்பட்ட உடைப்பை சரிசெய்யும் பணி, ஆராய்ச்சிக்குப்பம், பில்லாலி தொட்டி ஆகிய இடங்களில் தண்ணீர் சூழ்ந்த நெற் பயிர்கள், பாச்சாரப்பாளையம், மீனாட்சிப்பேட்டை ஆகிய பகுதிகளை அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

பின்னர் குறிஞ்சிப்பாடி கல்குளம், பூதம்பாடி, சிறுபாளையூர் உள்ளிட்ட கிராமங்களில் தாற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 30 ஆயிரம்

பேருக்கு உணவு தயாரிக்கப்படும் பணி, கல்குளம் பகுதியில் வேளாண் பயிர்கள் நீரில் மூழ்கக் காரணமான செங்கால் ஓடையில் ஏற்பட்ட உடைப்பை 300 மணல் மூட்டைகள் கொண்டு பொதுப் பணித் துறையினர் சீரமைத்த பணி ஆகியவற்றை பார்வையிட்டனர்.

அமைச்சர்களுடன் ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை முதன்மைச் செயலர் ககன்தீப்சிங் பேடி, மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார், சட்டப்பேரவை உறுப்பினர் சொரத்தூர் இரா.ராஜேந்திரன் ஆகியோர் உடன் சென்றனர்.

இதேபோன்று, அமைச்சர்கள் கே.ஏ.ஜெயபால், நத்தம் விசுவநாதன், வைத்திலிங்கம், ஆர்.பி.உதயகுமார் உள்ளிட்டோரும் மாவட்டத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளைப் பார்வையிட்டு மீட்புப் பணிகளை விரைவுபடுத்தினர்.

**உணவு முறையும் - சர்க்கரை நோயும்**

பன்னாட்டு சர்க்கரை நோய் கூட்டமைப்பு 2014, 2015, 2016 ஆகிய மூன்று ஆண்டுகளையும் உணவின் முக்கியத்துவத்தை பொதுமக்களும், சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது உறவினர்களும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் "ஆரோக்கியமான உணவு முறையும் சர்க்கரை நோயும்' என்ற தலைப்பை உலக நாடுகளை அனுசரிக்கச் செய்ய அறிவுறுத்தியுள்ளது.

ஆரம்ப காலங்களில், உடலில் இருந்து சர்க்கரை அதிகம் வெளியேறுவதால் சர்க்கரை சத்து அதிகம் உள்ள உணவு சாப்பிட்டால் நல்லது எனக் கருதப்பட்டது. அது பலன் அளிக்காததால் அம்முறை கைவிடப்பட்டது.

சர்க்கரை நோய் ஏன் வருகிறது என்று பார்ப்போம். உடலில் போதுமான இன்சுலின் சுரக்கவில்லையெனில் நாம் அருந்திய உணவில் இருந்து கிடைக்கும் குளுக்கோஸ் இன்சுலின் மூலம் பயன்படுத்தப்பட்டு உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்காது. அதிகமாக உள்ள குளுக்கோஸ் கிளைகோஜனாகவும், புரோட்டீன் மற்றும் கொழுப்புச் சத்தாகவும் மாறாது. ஆகவே, இரத்தத்தில் குளுக்கோஸின் (சர்க்கரையின்) அளவு கூடுதலாகும். இதுபோன்ற சூழ்நிலையில், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள உணவை மீண்டும் உண்டால் அதனால் அதிகமாகும் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த இயலாமல் உடல்

சிரமப்படும். ஆகவே, உணவு முறை மிக முக்கியமானது.

உண்ணும் உணவில் கார்போஹைட்ரேட் (மாவுச்சத்து), புரதச்சத்து மற்றும் கொழுப்புச்சத்து மிக முக்கியமான ஒன்றாகும். இவற்றின் மூலம்தான் நம் உடல் இயங்குகிறது. ஏற்கெனவே கூறியதுபோல் நாம் உண்ணும் உணவில் உள்ள மாவுச்சத்தையும் மற்ற சத்துகளையும் கையாள்வதற்கு உடலில் போதுமான இன்சுலின் இருக்கவேண்டும்.

ஏன் இன்சுலின் அளவு குறைகிறது?

சிறுவயதில் சர்க்கரை நோய் வந்தவர்களுக்கு இன்சுலினை சுரக்கும் பீட்டா செல்கள் பெரும்பாலும் செயலிழந்து விடுகின்றன. இதற்குப் பல காரணங்கள். இன்சுலின் சுரப்பு இவர்களிடம் மிகமிகக் குறைவாக இருக்கும் (அ) இல்லாமலேகூட இருக்கும். இந்த வகையான சர்க்கரை நோயாளர்கள் முதல் வகையைச் சார்ந்தவர்கள். இவர்கள் அவசியம் குறைந்தது இருவேளையாவது இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொண்டு போதுமான அளவிற்கு சாப்பிட வேண்டும். ஆனால், சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. இன்சுலின் ஊசியை எடுத்துக்கொண்டு குளிர்பானங்கள் அருந்தினாலோ (அ) இனிப்பு வகைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலோ சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் வராது.

ஆகவே, இவர்கள் நீரிழிவு மருத்துவர்(அ) உணவு பரிந்துரையாளர் கூறும் உணவுமுறைகளைக் கூர்ந்து கவனித்து பின்பற்றுவது நல்லது.

இரண்டாம் வகை சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இன்சுலின் சுரக்கிறது. ஆனால் போதுமானதாக இல்லை, மேலும் சுரந்த இன்சுலின் சரிவர வேலை செய்வதும் இல்லை. ஆகவே, ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகிறது. இவர்கள் சில உணவுவகைகளை சாப்பிடாமல் இருத்தல் (அ) தவிர்த்தல் நல்லது. அன்றாடம் அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரத்துக்கு உடற்பயிற்சி செய்வது நல்லது. ஆனால், நடைமுறையில் என்ன நடக்கிறது?

காலையில் எழுந்த உடன் சர்க்கரை போட்ட காபி, தேநீர், சிற்றுண்டிக்குப்பிறகு மீண்டும் சர்க்கரை போட்ட காபி, தேநீர், மதிய உணவில்

அளவுக்கு அதிகமான பச்சரிசி (அ) புழுங்கலரிசி சாதம், உருளைக் கிழங்கு (அ) மற்ற கிழங்குகள், மாலையில் உருளைக்கிழங்கு சேர்த்து போண்டா, பஜ்ஜி (அ) சிப்ஸ், இரவில் மீண்டும் சாதம் மற்றும் கிழங்கு வகைகள், வாழைப்பழம் போன்ற பழவகைகள் இடைப்பட்ட நேரங்களில் குளிர்பானங்கள் ஆக சர்க்கரைச் சத்து அதிகம் உள்ள இந்த உணவு வகைகளை அன்றாடம் உண்பதால், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடுதலாகிறது. அதைக் குறைப்பதற்கு இன்சுலினும் அதிகம் தேவைப்படுகிறது.

எனவே, சர்க்கரை இல்லாமல் காபி, தேநீர் அருந்தப் பழகுவது நல்லது. இனிப்பு தேவையெனில் சுக்ரோலோஸ் எனும் மாத்திரைகளை காபி, தேநீருடன் சேர்த்துக் கொள்ளலாம். பருப்பு வகைகள், சுண்டல்கள் தேவையான அளவு சாப்பிடலாம். மோர், எலுமிச்சை பழச்சாறு, தக்காளிப் பழச் சாறு உப்பிட்டோ (அ) சுக்ரோலோஸ் போட்டோ பருகலாம். இவற்றால் சர்க்கரையின் அளவு கூடாது.

மேலும், அரிசி உணவையே மூன்று வேளையும் உண்பதற்குப் பதிலாக, ஒரு வேளை தினை, சாமை, வரகு போன்ற சிறுதானிய உணவு வகைகளைப் பயன்படுத்தலாம். இவற்றில், நார்ச்சத்து கூடுதல், மாவுச்சத்து குறைவு. தற்போது,

ஃபிரைடு ரைஸ் கலாசாரம் பெருகிவிட்டது. மாவுச்சத்து மட்டுமல்ல, கொழுப்புச்சத்து மற்றும் உப்பு அதிகம் உள்ள உணவு வகைகளை அடிக்கடி அதிகம் உண்பதால் சர்க்கரை நோய் மட்டுமல்ல, உடல் எடை அதிகமாதல், கெட்ட கொலஸ்டிரால் அதிகமாதல், நல்ல கொலெஸ்டிரால் குறைதல், மிகு ரத்த அழுத்தம் போன்ற பல நோய்களுக்கு இளம் வயதிலேயே (அதாவது முப்பதிலிருந்து நாற்பது வயதிற்குள்) ஆளாகின்றனர். அதுமட்டுமல்லாது, இளம் வயதிலேயே மாரடைப்பு, சிறுநீரகச் செயலிழப்பு போன்ற பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே, எது உடலுக்கு ஆரோக்கியமான உணவு என்பதை யோசனை செய்து சாப்பிடுவது நல்லது.

இளம் வயது சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், உடல் எடை அதிகரிப்பு, ரத்தத்தில் அதிக கொலெஸ்டிரால் இவற்றால் வரும் பிரச்னைகள் இவற்றைத்

தவிர்க்க உணவுமுறை, உடற்பயிற்சி, யோகா, தியானம் ஆகியன முக்கியம். இவற்றை அனுசரிக்காமல் மருந்து, மாத்திரைகளையும், மருத்துவமனைகளையும் நம்பி இருந்தால்,உடல் நலம் கெடுவதுடன் பணமும் நேரமும் விரயமாகும். எவையெல்லாம் நல்ல உணவு, எவையெல்லாம் நல்ல உணவு அல்ல என்ற விழிப்புணர்வையும் மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் மேற்கூறிய நோய்களின் தாக்கம் மக்களிடம் குறையும்.

## ரூ.25,000 கோடி யூரியா மானியம்: உரத் துறை அமைச்சகம் கோரிக்கை

யூரியா மானியமாக கூடுதலாக ரூ.25,000 கோடிக்கு மேல் வழங்க வேண்டுமென்று மத்திய நிதியமைச்சகத்துக்கு உரத் துறை அமைச்சகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் உரங்களுக்கு மானியமாக அரசு ரூ.72,968.56 கோடியை ஒதுக்கீடு செய்தது. இதில் ரூ.38,200 கோடி உள்நாட்டு உர உற்பத்தியாளர்களுக்கு மானியமாக அறிவிக்கப்பட்டது.

எனினும், கடந்த ஆண்டுகளில் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளையும் சேர்ந்து உள்நாட்டு யூரியா உற்பத்தியாளர்களுக்கு உரத் துறை அமைச்சகம் ரூ.30,000 கோடிக்கு மேல் வழங்க வேண்டியுள்ளது. எனவே இத்தொகையை வழங்க ரூ.25,000 கோடிக்கு மேல் தேவைப்படுவதாகவும், அதனை வழங்குமாறும் நிதியமைச்சகத்திடம் உரத் துறை அமைச்சகம் கோரிக்கை விடுத்துள்ளது.

உள்நாட்டு யூரியா உற்பத்தியாளர்களின் செயல்திறனை மேம்படுத்துவதன் மூலம் மானியத்தைக் குறைக்கவும் அரசு பல்வேறு வழிகளில் முயற்சித்து வருகிறது.

விவசாயிகளுக்கு ஒரு டன் யூரியாவை ரூ.5,360-க்கு மத்திய அரசு வழங்கி வருகிறது. யூரியாவின் உற்பத்திச் செலவுக்கும், விற்பனை விலைக்கும் உள்ள வேறுபாட்டை மானியமாக உற்பத்தியாளர்களுக்கு அரசு வழங்கி வருகிறது.

இந்தியாவில் ஆண்டுக்கு 3 கோடி டன் யூரியா தேவைப்படுகிறது. ஆனால் 2.2 கோடி டன் யூரியா உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதல் தேவை,

இறக்குமதி மூலம் ஈடுசெய்யப்படுகிறது.

**வெள்ள மீட்புப் பணியில் கடலோரப் பாதுகாப்புப் படை வீரர்கள்!**



வெள்ள மீட்புப் பணியில், கடலோர பாதுகாப்புப் படை வீரர்கள் முதல் முறையாக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். கடந்த இரண்டு வாரங்களில், வெள்ளத்தில் சிக்கிய 25 பேரை இவர்கள் மீட்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக போதிய அளவு இல்லாத வட கிழக்கு பருவமழை, இந்தாண்டு தொடக்கம் முதல் நன்றாக பெய்து வருகிறது. இதனால், அணைகள், குளங்கள், ஏரிகள் உள்ளிட்ட நீர் நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

இந்த நிலையில், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்கள் கடந்த ஒரு வாரமாக வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இதனால், வெள்ளத்தில் சிக்கி பலரும் உயிரிழந்துள்ளனர். முதல்முறையாக மீட்புப் பணியில்..: உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கையை எடுத்துவருகிறது. வெள்ளத்தில் சிக்கியுள்ளோரை மீட்க, முதல்முறையாக தமிழக கடலோரப் பாதுகாப்புப் படை வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். நாட்டில் வேறுஎங்கும் இவர்கள் வெள்ள மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்படவில்லை என போலீஸô்ர் தெரிவித்தனர்.

மீட்புப் பணியில் 30 வீரர்களும், 500 மீனவர்களும்..: இந்தப் படையில் உள்ள முழு உடல் தகுதியுடன் இருந்த 30 வீரர்களுக்கு வெள்ளம், புயல், சூறாவளிக்

காற்று உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளில் இருந்து மீட்பது உள்ளிட்ட சிறப்புப் பயிற்சிகள் கடந்தாண்டு அளிக்கப்பட்டன. புணேயைச் சேர்ந்த ஒரு நீச்சல் பயிற்சி நிறுவனம், கொல்கத்தாவைச் சேர்ந்த இந்திய உயிர் பாதுகாப்பு இயக்கம் ஆகியன இந்தப் பயிற்சியை அளித்தன. "உயிர்காக்கும் கமாண்டோ வீரர்கள்' என பெயரிடப்பட்டுள்ள இந்த வீரர்களே இப்போது வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்பதற்கு முழு அளவில் பயன்படுத்தப்பட்டனர்.

இதுதவிர, இந்தப் படையின் ஒரு அங்கமாக கடலோர ஊர்க்காவல் படை வீரர்களாகச் சேர்க்கப்பட்ட 500 மீனவர்களுக்கும் இயற்கை பேரிடர் காலங்களில் செயல்படுவது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நீச்சலில் ஆழ்ந்த அனுபமுள்ள இவர்கள், 13 கடலோர மாவட்டங்களிலும் மீட்பு பணிக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். 30 வீரர்களும், 500 மீனவர்களும் வருவாய், காவல் துறைகளின் கட்டுப்பாட்டு அறைகளுடன் தொடர்பிலேயே மீட்புப் பணிக்காக காத்துள்ளனர். 25 பேரும், கால்நடைகளும். உடைமைகளும் மீட்பு: இந்தப் படையினர் இதுவரை வெள்ளத்தில் சிக்கிய 25 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். 60 கால்நடைகள் உயிருடனும், பல லட்சம் ரூபாய் மதிப்பிலான உடைமைகளையும் கூட இவர்களால் மீட்கப்பட்டுள்ளன. வெள்ள மீட்புப் பணிக்கு தீயணைப்பு, மீட்புப் பணிகள் துறையினரையும், மத்தியப் பேரிடர் மீட்புக் குழுவினர் இதுவரை ஈடுபட்டு வந்தனர். இப்போது கடலோரப் பாதுகாப்புப் படை வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவது சிறப்புடையதாக இருக்கிறது என்று அரசு அலுவலர்கள் தெரிவித்தனர்.

**"நவீன கருவிகளால் மீட்புப் பணி எளிதாகிறது'**

கடலோரங்களில் ரோந்து, தீவிரவாத ஊடுருவல் தடுப்பு, கண்காணிப்பு, கடத்தல் தடுப்பு உள்ளிட்ட பணிகளில் கடலோரப் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வந்தனர். இப்போதுதான் முதல் முறையாக வெள்ள மீட்புப் பணியில் ஈடுபடுவதாக ஏ.டி.ஜி.பி. சைலேந்திரபாபு கூறினார். கடலூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களில் மீட்புப் பணியில் ஈடுபட்டதில் தங்களுக்கு நல்ல அனுபவம் கிடைத்துள்ளது என்றும் அவர்

தெரிவித்தார். நவீன கருவிகள் இருப்பதால், மீட்புப் பணியில் எளிதில் ஈடுபட முடிகிறது என்று படை வீரர்கள் கூறுகின்றனர்.

**இரண்டு வாரங்களில் 322 மி.மீ. மழை..!**



வட கிழக்குப் பருவமழை தொடங்கி, தமிழகத்தில் இரண்டு வாரங்களில் இதுவரை சராசரியாக 322 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. இது வழக்கமான சராசரியைவிட 120 மி.மீ. குறைவாகும்.

தமிழகத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வட கிழக்கு பருவமழை காலம். இந்தக் காலத்தில் தமிழகம் பெறும் சராசரி மழை அளவு 440 மி.மீ.

2004 முதல் 2011 வரை இயல்பான அளவு அல்லது அதற்கு அதிகமான அளவு மழையை தமிழகம் பெற்றது. ஆனால் 2012-இல் 16 சதவீதம் குறைவாகவும், 2013-இல் 33 சதவீதம் குறைவாகவும் மழை அளவைப் பெற்றது. 2014-இல் 43 செ.மீ. மழை அளவை பெற்றது. இது சராசரி அளவை விட 2 சதவீதம் குறைவு.

மாநிலம் முழுவதும் சராசரியை நெருங்கும் அளவு மழை பெய்தாலும் வட மாவட்டங்களில், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் மழை அளவு குறைவாகவே இருந்தது. இதனால் சென்னைக்கு குடிநீர் ஏரிகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு சென்னை குடிநீர் ஏரிகள் கிட்டதட்ட வறண்டு விட்டன.

இயல்புக்கு அதிகமாகவே இருக்கும்! இந்த நிலையில், பருவமழை அக்டோபர் 28-இல் தொடங்கியது. பருவமழை தொடங்கி, சனிக்கிழமையுடன் 18 நாள்கள் ஆகின்றன. இதுவரை தமிழகம் முழுவதும் சராசரியாக 322 மி.மீ. மழை பெய்து

உள்ளது. தற்போது மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வு தமிழகத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. எனவே இந்த ஆண்டு பருவமழை இயல்புக்கு அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..

புழலுக்கு ஒரே நாளில் 36 கோடி கன அடி தண்ணீர் வந்தது: புழல் ஏரிக்கு கடந்த ஒரு வார காலமாக அதிக அளவு நீர் வந்து கொண்டிருக்கிறது; அதாவது வெள்ளிக்கிழமையன்று நீர் இருப்பு 73 கோடி கன அடியாக இருந்தது; தொடர்ந்து 36 கோடி கன அடி மழை நீர் வந்ததால் புழல் ஏரியின் மொத்த நீர் இருப்பு சனிக்கிழமை 109 கோடி கன அடியாக அதிகரித்துள்ளது.

4 ஏரிகளிலும் கூடுதல் நீர்: சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரங்களான புழல் ஏரி, பூண்டி ஏரி உள்ளிட்ட நான்கு ஏரிகளுக்கு சனிக்கிழமை மட்டும் கூடுதலாக 13 கோடி கன அடி நீர் வந்துள்ளது. இவற்றின் மொத்த நீர் இருப்பு 45 கோடி கன அடியை எட்டியுள்ளது. சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 8 கோடி கன அடியாகும். அதில், இப்போது 4 கோடி கன அடி தண்ணீர் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரி தொடர்ந்து நிரம்பி வருகிறது.

சென்னையில் தேங்கியுள்ள மழை நீரை வெளியேற்றும் பணிகளை 21 கழிவுநீரகற்று ஊர்திகள், 43அதி விரைவு உறிஞ்சும் இயந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி சென்னை குடிநீர் வாரியமானது சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்திவருகிறது.

தற்போது திருவொற்றியூர் நெடுஞ்சாலை, ராஜாஜி நகர், கார்கில் நகர், மணலி பாடசாலை தெரு 2,3 பிரதான சாலைகள், மாதவரம் ஸ்ரீராம் நகர், தணிகாசலம் நகர், சூலூர்பேட்டை, தண்டையார்பேட்டை பகுதி இளையமுதலி தெரு, ராயபுரம், திரு.வி.க.நகர் ஜமாலியா நெடுஞ்சாலை, புளியந்தோப்பு நெடுஞ்சாலை, செங்கல்சூளை சாலை, மேடவாக்கம் குளக்கரை சாலை, கொன்னூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், தேனாம்பேட்டை லட்சுமிபுரம் முதல் தெரு, கோடம்பாக்கம், வளசரவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

சென்னையில் 389 இடங்களில் தண்ணீர் தேங்கியிருந்தது. அதில் 265 இடங்களில் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. 131 இடங்களில் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகிறது. 350 டீசல் பம்பு செட்டுகள், 4 நீர் உறிஞ்சும் நவீன இயந்திரங்கள், சென்னை குடிநீர் வாரியத்தின் 43 நீர் உறிஞ்சும் நவீன இயந்திரங்கள், 21 கழிவுநீர் அகற்றும் டேங்கர் லாரிகள் இந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னையில் உள்ள 16 சுரங்கப் பாதைகளிலும் மழை நீர் தேக்கம் இல்லை. சாலைகளில் ஏற்பட்ட சிறு பள்ளங்கள் 198.5 சதுர மீட்டர் பரப்பளவுக்குச் சரிசெய்யப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோருக்கு உணவுப் பொட்டலங்கள்: மழையால் பாதிக்கப்பட்டோருக்கு 68 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் சனிக்கிழமை விநியோகிக்கப்பட்டன. இதுதவிர குழந்தைகளுக்கும், முதியோருக்கும் 8,500 ரொட்டி பொட்டலங்கள் வழங்கப்பட்டன. 72 மருத்துவ முகாம்களும், 34 நடமாடும் மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகின்றன. இதில், இதுவரை 13 ஆயிரம் பேர் பயன் அடைந்துள்ளனர்.

அமைச்சர்கள் ஆய்வு: இந்த நிலையில், அடையாறு கஸ்தூரி பாய் நகர், வேளச்சேரி டான்சி நகர், ஆலந்தூர் தில்லை கங்கா நகர் சுரங்கப்பாதை, பெருங்குடி மண்டலம் ராம்நகர் வடக்கு ஆகிய பகுதிகளில் நடைபெறும் மழைநீர் அப்புறப்படுத்தும் பணியை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி, சமூக நலத் துறை அமைச்சர் பா.வளர்மதி, கால்நடைத் துறை அமைச்சர் டி.கே.எம். சின்னையா, மேயர் சைதை சா.துரைசாமி ஆகியோர் சனிக்கிழமை ஆய்வு செய்தனர்.

**வடியாத வெள்ளம்...: விரக்தியில் மக்கள்..!**

சென்னை மாநகராட்சி சார்பில் 16,500 பணியாளர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும், பல இடங்களில் குடியிருப்புப் பகுதிகளுக்குள் புகுந்த தண்ணீர் இன்னும் முழுமையாக வெளியேற்றப்படவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

மாநகராட்சியின் கணக்குப்படி, வெள்ள நீர் தேங்கிய 398 இடங்களில் பல இடங்களில் தண்ணீர் முழுமையாக வெளியேற்றப்பட்டது. மற்ற இடங்களில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதற்காக 350 டீசல் மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

சுரங்கப்பாதைகளில் தேங்கிய வெள்ள நீர் மோட்டார்கள் மூலம் முழுமையாக வெளியேற்றப்பட்டது. ஆனால் குடியிருப்புப் பகுதிகளில் இன்னும் தண்ணீர் தேங்கி உள்ளது.

வெள்ளம் தேங்கிய பகுதிகள் ஏராளம்: பூந்தமல்லி எஸ்.பி. அவென்யூவில் 100-க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது. குமணஞ்சாவடி சாலையில் குளம்போல் தண்ணீர் தேங்கி உள்ளது. ஆதம்பாக்கம் பாரத் நகர், நிலமங்கைநகர் பகுதிகளில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது.

மீனம்பாக்கம் கொளத்து மேடு பகுதியில் குடிசை வீடுகள் தண்ணீரால் சூழப்பட்டுள்ளன. அம்பத்தூர் ஏரி நிரம்பி தண்ணீர் கரைபுரண்டு பக்கத்து ஊர்களில் புகுந்தன. அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

கொரட்டூர் ஏரியும் நிரம்பியதால் வெள்ளம் வெளியேற வழியில்லை. அதேபோல், ரெட்டேரி ஏரிக்கு தண்ணீர் செல்லும் பாதைகள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டதால் விநாயகபுரம், கள்ளிக் குப்பம், உடையார்தோட்டம் பகுதியில் உள்ள வீடுகளை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது.

திருவொற்றியூர் மாதவரம் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்து நிற்கிறது. பெரம்பூர், தாம்பரம், புளியந்தோப்பு, கொசப்பேட்டை, ஓட்டேரி பகுதியிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

வியாசர்பாடி ரயில்வே சுரங்கப்பாதையில் தேங்கிய தண்ணீர் ராட்சத மோட்டார்கள் மூலம் வெளியேற்றபட்டது. அங்கு அருகில் உள்ள கணேசபுரம் கால்பந்து மைதானம் முழுவதும் மழைநீர் தேங்கி குளம்போல் காட்சியளிக்கிறது.

**மீண்டும் பாதிக்காமல் இருக்க..?**

நீரை அகற்றும் பணி தீவிரம்: பல இடங்களில் தண்ணீரை வெளியேற்றும் பணிகளில் மாநகராட்சி ஊழியர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். சூப்பர்சக்கர் இயந்திரங்கள், தீயணைப்பு நிலைய இய்ந்திரங்கள் மூலம் தண்ணீரை அகற்றும் பணிகள் நடந்து வருகின்றன.

சென்னையில் சனிக்கிழமை வரை 665 மி.மீ. மழை பெய்துள்ளது. இது வழக்கமான அளவைவிட 43 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மேலும் ஒரு காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி சென்னையை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் 3 நாள்களுக்கு பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

"ஏற்கெனவே மழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் பலத்த மழை பெய்தால் நாங்கள் எல்லாவற்றையும் இழக்க நேரிடும். எனவே, அதிகாரிகள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வியாசர்பாடியைச் சேர்ந்த ரமேஷ் வேதனையுடன் கூறினார்.

**செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 16 அடியாக உயர்வு**

தொடர் மழை காரணமாக, செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் 16 அடியாக உயர்ந்துள்ளது.

சென்னையின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் ஏரிகளில், செம்பரம்பாக்கம் ஏரி முக்கிய பங்கு வகிக்கிறது. 24 அடி உயரமுடைய இந்த ஏரியின் கொள்ளளவு 3645 மில்லியன் கன அடி ஆகும்.

ஏரியின் பாதுகாப்பைக் கருதி, நீர் மட்டம் 21 அடியை எட்டியதும் உபரி நீர் திறந்து விடப்படுவது வழக்கம். இந்த நிலையில், பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சனிக்கிழமை காலை நிலவரப்படி, ஏரிக்கு விநாடிக்கு 4800 கன அடி நீர் வந்து கொண்டுள்ளது.

நீர் வரத்து அதிகரிப்பால் ஏரியின் நீர் மட்டம் 16 அடியாகவும், கொள்ளளவு 1634 மில்லியன் கன அடியாகவும் உயர்ந்துள்ளது. அடுத்த சில நாள்களில், ஏரியின் நீர் மட்டம் முழு கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திருத்தணியில் வேகமாக நிரம்பும் ஏரிகள்**

கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையால், திருத்தணியைச் சுற்றியுள்ள ஏரிகளுக்கு, நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

மழை காரணமாக, திருத்தணியை அடுத்துள்ள தெக்களூர் ஏரி, பாப்பிரெட்டிப்பள்ளி ஏரி, பள்ளிப்பட்டு பகுதியை அடுத்த அத்திமஞ்சேரிப்பேட்டை ஏரி உள்ளிட்ட ஏரிகள் நிரம்பின.

இதனால், அவற்றிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

திருத்தணியைச் சுற்றியுள்ள மேலும் சில ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர்.

குடியிருப்புப் பகுதிகளில் பாதிப்பு: இதனிடையே, திருத்தணி, பெரியார் நகரிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் மழைநீர் புகுந்தது. இதனால், அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

**பயிர்கடனை 100% வசூலித்த 98 கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாராட்டு**

பயிர்கடன், மத்திய கால கடனை 100 சதவீதம் வசூலித்த 98 கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் சனிக்கிழமை வழங்கப்பட்டது.

அனைத்திந்திய கூட்டுறவு வார விழா ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் சனிக்கிழமை தொடங்கியது.

இதையொட்டி, கூட்டுறவுக் கொடியை மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் என்.கிருஷ்ணராஜ் ஏற்றி வைத்து, 100 சதவீதம் பயிர்கடன், மத்திய கால கடனை வசூலித்த 98 கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளுக்குப் பாராட்டுச் சான்றிழை வழங்கினார்.

43 கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்கடனை 100 சதவீதமும், 46 கூட்டுறவுச் சங்கங்கள் பயிர்கடன், மத்திய கால கடனை 100 சதவீதமும், 9 கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கால கடனை 100 சதவீதமும் வசூலித்து சிறப்பிடம் பெற்றுள்ளன.

கூட்டுறவு வார தொடக்க விழாவுக்கு, ஈரோடு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் சு.ராம்தாஸ் தலைமை வகித்தார்.

ஆவின் தலைவர் பி.சி.ராமசாமி, கூட்டுறவு ஒன்றியத் தலைவர் வி.தெய்வநாயகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், சிந்தாமணி தலைவர் ஏ.ஆர்.ஜெகதீசன், கூட்டுறவு அச்சுக்கூடத் தலைவர் எஸ்.எஸ்.சித்தையன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நிர்வாக இயக்குநர் மா.சந்தானம் உள்பட பலர் பங்கேற்றனர்.

### குன்னூரில் இந்த ஆண்டு அதிக மழை

குன்னூரில் இந்த ஆண்டு மழை அதிகரித்திருப்பதாக உபாசியின் வேளாண்மை ஆராய்ச்சி இயக்குநர் உதயபானு தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதத்தில் பெய்யத் துவங்கிய வடகிழக்குப் பருவமழை குன்னூர் பகுதியில் தொடர்ந்து பெய்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாகவே குன்னூர் பகுதியில் பலத்த மழையும், மிதமான மழையுமாக மாறி மாறி பெய்து வருகிறது. இந்த ஆண்டைப் பொறுத்தவரை கடந்த 10 நாள்களாக வடகிழக்குப் பருவ மழை குன்னூர் பகுதியில் தீவிரமாகப் பெய்து வருகிறது.

இதுகுறித்து, உபாசி வேளாண்மை ஆராய்ச்சி மைய உதவி இயக்குநர் உதயபானு கூறியதாவது:

குன்னூர் பகுதியில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மழையின் அளவு அதிகரித்துள்ளது. கடந்த 2014-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 13 நாள்களில் மொத்தம் 127.6 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது. இந்த ஆண்டு 197 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

மேலும், கடந்த ஆண்டு ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரை 1724.09 மி.மீ., மழை பெய்துள்ளது. இந்த ஆண்டு 1733.7 மி.மீ., மழை பதிவாகி உள்ளது. இந்த மழை தேயிலை சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது. மழை வெயில் என சீதோசன நிலை மாறி வருவதால் தேயிலை மகசூல் அதிகரிக்கக் கூடும் என தெரிவித்தார்.

## தொடர் மழை: தேயிலைச் செடிகளுக்கு உரமிடும் பணி தீவிரம்

நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, தேயிலைச் செடிகளுக்கு உரமிடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் முக்கியத் தொழிலாளாக விளங்கி வருகிறது. சிறுதேயிலை விவசாயிகள் தங்களது தோட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள தேயிலைச் செடிகளுக்கு ஆண்டுதோறும் உரமிட்டு வருகின்றனர்.

தற்போது, பெரும்பாலான தேயிலை விவசாயிகள் இயற்கை உரத்தைப் பயன்படுத்துகின்றனர். மேலும், உபாசி வேளாண்மை அறிவியல் மையம் சார்பில், ஆண்டுக்கு 4 முறை மழை பெய்யும்போது உரமிட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சீதோசன நிலை மாற்றத்தால் விவசாயிகள் தேயிலைத் தோட்டங்களை பராமரிக்கத் துவங்கி உள்ளனர். அமோனியா பேஸ் உரம், யூரியா பேஸ் உரத்தையும் கலந்து பயன்படுத்தும் பட்சத்தில் தேயிலை மகசூல் அதிகரிக்கும் என்பதால் உபாசி வேளாண்மை மைய ஆலோசனையின் பேரில் உரமிடும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## திருச்சி மாவட்டத்தில் 48 குளங்கள் நிரம்பின

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, திருச்சி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 178 குளங்களில் 48 குளங்கள் முழுமையாக நிரம்பியுள்ளன.

மாநகர் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை காலை முதல் மழை தொடர்ந்து பெய்தது. மாலையில் சிறிது நேரம் நின்றிருந்த மழை மீண்டும் இரவில் பெய்தது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலையில் தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இந்த மழையின் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டது. கரூர் புறவழிச்சாலை, பொன்னகர், கண்டோன்மென்ட், பாலக்கரை, மத்திய பேருந்து நிலையம், சத்திரம் பேருந்து நிலையம் உள்ளிட்ட மாநகரின் பல்வேறு பகுதிகள், மண்ணச்சநல்லூர், லால்குடி, மணப்பாறை உள்ளிட்ட புறநகரின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டதுடன் பல இடங்களில் சாக்கடை நீரும் கலந்து சென்றதால் பொதுமக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகினர்.

### திருச்சி மாவட்டத்தில் 48 குளங்கள் நிரம்பின

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, திருச்சி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 178 குளங்களில் 48 குளங்கள் முழுமையாக நிரம்பியுள்ளன.

மாநகர் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை காலை முதல் மழை தொடர்ந்து பெய்தது. மாலையில் சிறிது நேரம் நின்றிருந்த மழை மீண்டும் இரவில் பெய்தது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலையில் தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இந்த மழையின் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டது. கரூர் புறவழிச்சாலை, பொன்னகர், கண்டோன்மென்ட், பாலக்கரை, மத்திய பேருந்து நிலையம், சத்திரம் பேருந்து நிலையம் உள்ளிட்ட மாநகரின் பல்வேறு பகுதிகள், மண்ணச்சநல்லூர், லால்குடி, மணப்பாறை உள்ளிட்ட புறநகரின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பெய்த மழையால்

சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டதுடன் பல இடங்களில் சாக்கடை நீரும் கலந்து சென்றதால் பொதுமக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகினர்.

### திருச்சி மாவட்டத்தில் 48 குளங்கள் நிரம்பின

வடகிழக்குப் பருவமழையின் காரணமாக, திருச்சி மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 178 குளங்களில் 48 குளங்கள் முழுமையாக நிரம்பியுள்ளன.

மாநகர் மற்றும் புறநகரின் பல்வேறு பகுதிகளில் சனிக்கிழமை காலை முதல் மழை தொடர்ந்து பெய்தது. மாலையில் சிறிது நேரம் நின்றிருந்த மழை மீண்டும் இரவில் பெய்தது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலையில் தொடங்கிய மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. இந்த மழையின் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மாநகரின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டது. கரூர் புறவழிச்சாலை, பொன்னகர், கண்டோன்மென்ட், பாலக்கரை, மத்திய பேருந்து நிலையம், சத்திரம் பேருந்து நிலையம் உள்ளிட்ட மாநகரின் பல்வேறு பகுதிகள், மண்ணச்சநல்லூர், லால்குடி, மணப்பாறை உள்ளிட்ட புறநகரின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் தேங்கிக் காணப்பட்டதுடன் பல இடங்களில் சாக்கடை நீரும் கலந்து சென்றதால் பொதுமக்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகினர்.

### பிளாஸ்டிக் தவிர்ப்பு விழிப்புணர்வு முகாம்

அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தேசிய பசுமைப்படை சார்பில் ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் பிளாஸ்டிக் விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமை மாவட்ட கல்வி அலுவலர் வி. ராதாகிருஷ்ணன் தொடக்கி வைத்தார். பள்ளி முதல்வர் தோமினிக் சாவியோ முன்னிலை வகித்தார்.

அரியலூர் கல்வி மாவட்ட தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் அல்லி இந்த முகாமில் பங்கேற்று, பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீமைகளை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார். இதைத்தொடர்ந்து மாணவர்கள் கோயிலைச்

சுற்றியுள்ள பிளாஸ்டிக் பொருள்கள், பைகள் உள்ளிட்டவற்றை அகற்றி கோயிலுக்கு வந்த பக்தர்களுக்கு துணிப்பைகளை வழங்கினர்.

மாவட்ட சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் அறிவழகன், பள்ளி ஆய்வாளர் பழனிசாமி, தமிழ்நாடு அறிவியல் இயக்கக மாநில செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், பொறுப்பாளர் ராஜேந்திரன், ஆனந்தம், ஆசிரியை இரா.இந்திரா, உடற்கல்வி பயிற்சியாளர்கள் ஜபருல்லா மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

**மீண்டும் தொடங்கியது மழை**

கரூர் மாவட்டத்தில் மீண்டும் மழை தொடங்கியுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த அக்.28-ம் தேதி வடகிழக்குப் பருவமழை தொடங்கியது.

இதையடுத்து அடுத்தடுத்து வங்கக்கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுநிலையால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தபடி கரூர் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை இரவு முதல் மழை பெய்து வருகிறது.

இதனால் ஏற்கெனவே மழை நீரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளன. கரூர் நகராட்சிக்குட்பட்ட கணபதிநகரில் ஏற்கெனவே பெய்த மழையில் ஓரளவு மழை நீர் வடிந்திருந்த நிலையில் மீண்டும் மழை தொடங்கியுள்ளதால் மீண்டும் குடியிருப்புகளை மழை நீர் சூழ்ந்துள்ளது.

இதேபோல எஸ்.வெள்ளாளப்பட்டி, கருப்பம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளை மீண்டும் மழை நீர் சூழ்ந்துள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

மழை தொடர்வதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்மழையால் அவ்வப்போது குளிர்க்காற்று வீசுகிறது. இதனால் மக்கள் வீட்டுக்குள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மழையால் நகரின் பல்வேறு

இடங்களில் சாலைகள் குண்டும், குழியுமாக மாறியுள்ளன. இதனால் மேடு, பள்ளம் தெரியாமல் வாகன ஓட்டிகள் அவதிப்படுகிறார்கள்.

கரூர் மாவட்டத்தில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): அரவக்குறிச்சி-2, க.பரமத்தி-2.60, குளித்தலை-3.20, மாயனூர்-2, கரூர்-3.30, அணைப்பாளையம்-9, தோகைமலை-7, பஞ்சப்பட்டி-6.40, பாலவிடுதி-6.10, கடவூர்-4.40, கிருஷ்ணராயபுரம்-3, மைலம்பட்டி-6.50 என மொத்தம் 55.50 மி.மீ.

## தொடர் மழையால் வரத்து குறைவு: கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை 2 மடங்கு உயர்வு



சென்னை,

தொடர் மழையால் வரத்து குறைந்துள்ளதால், கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை 2 மடங்கு உயர்ந்துள்ளது. தக்காளி ஒரு கிலோ ரூ.80–க்கு விற்பனையானது.

<u>பருவமழை தீவிரம்</u>

சென்னை மாநகர மக்களின் காய்கறி தேவைக்கு, தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா போன்ற அண்டை மாநிலங்களில் இருந்தும் தினமும் லாரிகள் மூலம் காய்கறிகள் கொண்டுவரப்படுவது வழக்கம்.

அந்த வகையில், கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும் 250 லாரிகளில் காய்கறிகள் கொண்டுவரப்படும். ஆனால், வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, வயல்வெளியில் விளைந்து கிடக்கும் காய்கறிகளை பறித்து விற்பனைக்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் வெள்ளநீரில் காய்கறிகள் மூழ்கி அழுகி வீணாகியுள்ளது.

<u>வரத்து குறைவு</u>

இதனால், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரும் காய்கறிகளின் அளவு குறைந்துள்ளது. 250 லாரிகள் வந்த இடத்தில் தற்போது 100 லாரிகள் தான் வருகிறது. இதனால், காய்கறிகளின் விலை 2 மடங்கு விலை உயர்ந்துள்ளது.

தொடர் மழையால், பெரும்பாலான வியாபாரிகளும், பொதுமக்களும் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வராததால் காய்கறிகள் விற்பனை மந்தமாகவே இருந்தது. தக்காளி ஒரு நாளைக்கு 70 லாரிகளில் வரும். ஆனால், தற்போது 30 லாரிகளில் தான் வரத்து உள்ளது. இதனால், கடந்த 4 நாட்களுக்கு முன்பு ரூ.30–க்கு விற்பனையான ஒரு கிலோ தக்காளி தற்போது ரூ.80 ஆக விலை உயர்ந்துள்ளது.

<u>காய்கறி விலை நிலவரம்</u>

மற்ற காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:– (அடைப்புகுறிக்குள் 4 நாட்களுக்கு முன்புள்ள விலை குறிப்பிடப்பட்டுள்ளது).

பீன்ஸ் – ரூ.60 (ரூ.30). கேரட் – ரூ.50 (ரூ.30). நூக்கல் – ரூ.40 (ரூ.20). சவ்சவ் – ரூ.30 (ரூ.15). பீட்ரூட் – ரூ.30 (ரூ.20). முட்டைக்கோஸ் – ரூ.15 (ரூ.10). பச்சை

மிளகாய் – ரூ.25 (ரூ.20). கத்தரிக்காய் – ரூ.40 (ரூ.20). முருங்கைக்காய் – ரூ.60 (ரூ.40). வெண்டைக்காய் – ரூ.30 (ரூ.20). பல்லாரி வெங்காயம் – ரூ.50 (ரூ.30). சாம்பார் வெங்காயம் – ரூ.50 (ரூ.40). காலிபிளவர் (ஒரு எண்ணிக்கை)– ரூ.30 (ரூ.20). புடலங்காய் – ரூ.25 (ரூ.20). உருளைக்கிழங்கு – ரூ.20 (ரூ.13).

வாழைகள் முறிவு; வாழைக்காய் விலை மலிவு

தமிழகத்தில் தென் மாவட்டங்களில் பயிரிடப்பட்டுள்ள வாழைகள், தொடர் மழையால் அதிக அளவில் முறிந்துவிழுந்துள்ளன. இதனால், வாழை தார்களும், வாழைப்பூவும் அதிகம் கிடைக்கின்றன. தற்போது, கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிக அளவில் வாழைக்காய், வாழைத்தண்டு, வாழைப்பூ ஆகியவை வருகின்றன. இதன் காரணமாக அதன் விலையும் குறைந்துள்ளன.

கடந்த 4 நாட்களுக்கு முன்பு வாழைக்காய் ஒன்று ரூ.8–க்கு விற்பனையானது. தற்போது ரூ.3 முதல் ரூ.5 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல், ரூ.50–க்கு விற்பனையான பெரிய வாழைத்தண்டு ரூ.30 ஆகவும், ரூ.20–க்கு விற்பனையான வாழைப்பூ ரூ.10 ஆகவும் விலை சரிந்துள்ளது.

## தொடர் மழையால் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் வாகனம் மோதி சேதம் அடைந்த செம்பரம்பாக்கம் ஏரிக்கரை சீரமைப்பு



பூந்தமல்லி,

தொடர் மழையால் செம்பரம்பாக்கம் ஏரியில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால் வாகனம் மோதி சேதம் அடைந்த தடுப்பு சுவருக்கு பதிலாக மண் மூட்டைகளை அடுக்கி வைத்து சீரமைக்கப்பட்டு உள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரி

சென்னை புறநகர் பகுதியில் பலத்த மழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளுள் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

ஏரியின் மொத்த கொள்ளளவு 3,645 மில்லியன் கன அடி. மழைக்கு முன்பு 276 மில்லியன் கன அடியும், தற்போது 1,634 மில்லியன் கன அடியாகவும் நீர் உள்ளது. மழைக்கு முன்பு 5.76 அடி உயரம் இருந்த நீர் மட்டம், தற்போது 16 அடியாக உயர்ந்து உள்ளது. 4,589 கன அடி நீர் தற்போது ஏரிக்கு வந்து கொண்டு இருக்கிறது.

செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து ஆதாரமாக விளங்கும் கிருஷ்ணா நதி நீர் கால்வாய், ஸ்ரீபெரும்புதூர் ஏரியில் இருந்து வரும் சவுத்ரி கால்வாய், நேமம் ஏரியில் இருந்து வரக்கூடிய பங்காரு கால்வாய் என அனைத்து நீர் வரத்து கால்வாய்களும் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டதால் மழைநீர் அனைத்தும் சீராக ஏரிக்கு வந்து கொண்டு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>தடுப்பு சுவர் சேதம்</u>

இந்த நிலையில் செம்பரம்பாக்கம் ஏரியின் கரையோரம் அமைக்கப்பட்டு உள்ள தடுப்பு சுவர் மீது அந்த வழியாக சென்ற ஏதோ ஒரு வாகனம் மோதியதில் ஏரி தடுப்பு சுவரின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

ஏரிக்கரை அரிக்காமல் இருக்கவும், வாகன ஓட்டிகள் தவறி விழாமல் இருக்கவும் தடுப்பு சுவர் இடிந்து விழுந்த பகுதியில் சுமார் 200–க்கும் மேற்பட்ட மண் மூட்டைகளை அடுக்கி வைக்கப்பட்டு கொம்புகளால் தற்காலிகமாக தடுப்புகள் போடப்பட்டு சீரமைக்கப்பட்டு உள்ளது.

<u>பொதுமக்கள் ஆர்வம்</u>

நீண்ட வருடத்துக்கு பிறகு செம்பரம்பாக்கம் ஏரியில் நீர் மட்டம் உயர்ந்து, கடல் போல் காட்சி அளிப்பதால் உள்ளூர் மற்றும் வெளியூர்களை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் தங்கள் குடும்பத்தோடு ஆர்வமுடன் வந்து ஏரியை பார்த்து விட்டு செல்கின்றனர்.

முன்எச்சரிக்கை நடவடிக்கையாக தண்ணீர் திறக்கப்படும் மதகுகள் உள்ள பகுதிகளில் மின் விளக்குகள் அமைக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு உள்ளனர். பொதுமக்கள் சிலர் ஏரிக்குள் இறங்கி தண்ணீரின் அழகை

ரசிக்கின்றனர். அவ்வாறு ரசிக்கும் போது தவறி தண்ணீருக்குள் விழாமல் இருக்க நசரத்பேட்டை போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு ஏரிக்குள் இறங்கும் பொதுமக்களை எச்சரிக்கை செய்து அங்கிருந்து வெளியேற்றி வருகின்றனர்.

## தொடர் மழையால் வரத்து குறைந்தது: கோவையில், தக்காளி விலை 'கிடுகிடு' உயர்வு



கோவை

தொடர் மழையால் கோவையில் தக்காளி விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகிறது.

தக்காளி வரத்து குறைந்ததுகோவை மார்க்கெட்டுக்கு கிணத்துக்கடவு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து தக்காளி கொண்டு வரப்படுகிறது. இதே போல கர்நாடக மாநிலத்தில் இருந்தும் கோவை மார்க்கெட்டுக்கு தக்காளி கொண்டு வரப்படுகிறது. ஆனால் கடந்த சில நாட்களாக தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் தொடர் மழை பெய்து வருவதால் கோவைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. கோவை மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு கிணத் துக்கடவு, நாச்சிபாளையம், ஓசூர், நாமக்கல் கர்நாடக மாநிலம் நாகமங்கலம், கொல்லேகால் ஆகிய பகுதிகளில் இருந்து தினமும் 10 ஆயிரம் பெட்டிகளில் தக்காளி வரும். ஆனால் தொடர் மழை காரணமாக தக்காளி செடிகள் அழுகி வருகின்றன. இதனால் தக்காளி மகசூல் குறைந்துள்ளது. தோட்டங்களில் தண்ணீர் தேங்கியிருப்பதால் தக்காளியை பறிக்க முடியாத நிலை உள்ளது.

இதனால் கோவைக்கு தற்போது ஒரு நாளைக்கு 2 ஆயிரம் பெட்டிகளில தான் தக்காளி வருகிறது. வரத்து குறைவால் தக்காளி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.ரூ.60-க்கு விற்கிறதுஇது குறித்து கோவை எம்.ஜி.ஆர். மொத்த காய்கறி மார்க்கெட் வியாபாரி ஒருவர் கூறியதாவது:-

கடந்த 5 நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ நாட்டு தக்காளி ரூ.15-க்கும், ஆப்பிள் தக்காளி ரூ.20-க்கும் விற்றது. ஆனால் தற்போது ஒரு கிலோ நாட்டு தக்காளி ரூ.50-க்கும், ஆப்பிள் தக்காளி ரூ.60-க்கும் விற் கப்படுகிறது. தொடர் மழை பெய்தால் தக்காளி விலை இன்னும் உயர வாய்ப்புள்ளது.

இது போல் புடலை, பாகற்காய், பச்சைமிளகாய், கத்தரி, பொறியல்தட்டை, வெண்டைக்காய் உள் ளிட்ட காய்கறிகளையும் தோட்டங்களில் பறிக்க முடியாத நிலை உள்ளது. இதனால் அவற்றின் விலையும் மேலும் உயர வாய்ப்புள்ளது. கோவையில் அதிக மழை பெய்ய வில்லை என்றாலும் காய்கறிகள் விளையும் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் காய்கறிகளின் வரத்து குறைந்து விலை அதிகரிக்கும். தொடர் மழை காரணமாக விவசாய நிலங்களில் மழை நீர் தேங்கியிருப்பதால் விவசாயிகள் மிகுந்த கவலைக்குள்ளாகி உள்ளனர். காய்கறிகளின் விலை உயர்ந்து வருவதால் பொதுமக்கள் காய்கறி வாங்குவது குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இதே போல் பெரியநாயக்கன் பாளையம் வாரச்சந்தையிலும் தக்காளி விலை உயர்ந்து காணப்படுகிறது.

**வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி தீவிரம் அடைந்து வருவதால் தமிழகத்தில் கனமழை எச்சரிக்கை; பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை**



சென்னை,

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்து உள்ளது.

<u>காற்றழுத்த தாழ்வு பகுதி</u>

இதன் காரணமாக மாநிலம் முழுவதும் பெரும்பாலான இடங்களில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அணைகள், ஏரிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் வங்க கடலில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் புதிதாக உருவான காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து தென்மேற்கு வங்க கடலில் தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலைகொண்டு உள்ளது.

<u>கொட்டித்தீர்த்த மழை</u>

இதனால் சென்னையிலும், காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர், தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய வட கடலோர மாவட்டங்களிலும், வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம் உள்ளிட்ட உள் மாவட்டங்களிலும் நேற்று முன்தினம் இரவும், நேற்றும் பலத்த மழை பெய்தது. அதிக பட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் ஆணைக்காரன் சத்திரத்தில் 18 செ.மீ. மழை கொட்டித்தீர்த்தது.

தொடர்ந்து பெய்து வரும் மழையின் காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன. நாகை மற்றும் தரங்கம்பாடியில் நேற்று கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. இதனால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை.

வெள்ளக்காடாக மாறிய சாலைகள்

சென்னையில் நேற்று அதிகாலையில் தொடங்கிய மழை விடாமல் தொடர்ந்து பெய்தது. இரவிலும் மழை நீடித்தது. ஏற்கனவே பல இடங்களில் தேங்கி இருந்த மழை நீர் வடிய தொடங்கிய நிலையில், நேற்று கனமழை பெய்ததால் நிலைமை மோசமானது. சாலைகள் வெள்ளக்காடாக மாறின. தாழ்வான குடியிருப்பு பகுதிகளை மழை நீர் சூழ்ந்தது. பல இடங்களில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது. இதனால் மக்கள் வெளியே வர முடியாமல் மிகவும் சிரமப்பட்டனர்.

நேற்று காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையிலான 9 மணி நேரத்தில் சென்னை மீனம்பாக்கத்தில் 14 செ.மீ. மழையும், நுங்கம்பாக்கத்தில் 9 செ.மீ. மழையும் பெய்தது.

புதுச்சேரியிலும் பலத்த மழை பெய்தது.

பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை

இந்த நிலையில், தமிழ்நாட்டில் இன்றும் (திங்கட்கிழமை), நாளையும் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என்றும், சென்னை நகரில் கனமழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

இதனால் சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இன்று பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டு உள்ளது.

மேலும் வேலூர், திருவண்ணாமலை, திருச்சி, கடலூர், விழுப்புரம், நாமக்கல், ராமநாதபுரம், திருவாரூர், நாகை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டு இருக்கிறது. இதில் சில மாவட்டங்களில் கல்லூரிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டு உள்ளது.

தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு

மழை நிலவரம் குறித்து வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

தென் மேற்கு வங்க கடலில் இலங்கையையொட்டி நிலை கொண்டுள்ள தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதி மேலும் வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசையில்

தமிழகத்தை நோக்கி நகர்ந்து அடுத்த 24 மணி நேரத்தில் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்பு உள்ளது.

<u>கனமழை எச்சரிக்கை</u>

இதன் காரணமாக திங்கட்கிழமை (இன்று), செவ்வாய்க்கிழமை ஆகிய இரு நாட்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும். சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை அல்லது மிக கனமழை பெய்யும். இதர மாவட்டங்களில் மிதமான மழை பெய்யும்.

சென்னையில் செவ்வாய்க்கிழமை (நாளை) வரை அவ்வப்போது மழை பெய்யும். சில இடங்களில் மிக கனமழை பெய்யும். இந்த நிலை மேலும் 2 நாட்களுக்கு நீடிக்கும்.

வட கடலோர மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் அதிகபட்சமாக மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதாலும், 2 நாட்கள் பலத்த மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாலும் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>மழை அளவு</u>

வழக்கமாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலத்தில் சராசரியாக 44 செ.மீ. மழை பெய்யும். கடந்த 2004–ம் ஆண்டு முதல் 2011–ம் ஆண்டு வரை சில ஆண்டுகளில் இயல்பான மழையும், சில ஆண்டுகளில் அதற்கு அதிகமான மழையும் பெய்து உள்ளது. ஆனால் 2012–ம் ஆண்டு வழக்கத்தை விட 16 சதவீதம் குறைவாகவும், 2013–ம் ஆண்டு 32 சதவீதம் குறைவாகவும், 2014–ம் ஆண்டு 2 சதவீதம் குறைவாகவும் மழை பெய்தது.

இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் இதுவரை 34.5 செ.மீ. மழை பெய்து உள்ளது. மேலும் 9.5 செ.மீ. மழை பெய்தால் சராசரிமழை அளவை எட்டிவிடுவோம். ஆனால் இந்த மழை பரவலாக பெய்யவேண்டும்.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

## அடுத்த 3 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை: மீட்பு பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி தயார் உயர் அதிகாரி தகவல்

சென்னை,

அடுத்த 3 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையில் எல்லா விதமான மீட்பு பணிகளையும் மேற்கொள்ள சென்னை மாநகராட்சி தயார் நிலையில் இருப்பதாக உயர் அதிகாரி தெரிவித்து உள்ளார்.

<u>தொடர் கனமழை</u>

தமிழகத்தில் மேலும் 3 நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்து உள்ளது. இதனால் என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை மேற்கொள்வது? என்பது குறித்து மாநகராட்சி தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இந்தநிலையில் தொடர் மழைக்கு எல்லா விதத்திலும் மீட்பு பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி தயார் நிலையில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இதுகுறித்து சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) கே.எஸ்.கந்தசாமி ‘தினத்தந்தி’ நிருபரிடம் கூறியதாவது:–

தொடர் மழை காரணமாக சென்னைக்கு கடுமையான சவால் காத்திருக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை அனைத்தும் தயார் நிலையில் உள்ளது. நீர்தேக்க பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற 2 முதல் 50 குதிரைத்திறன் கொண்ட 170 பம்புசெட்டுகள் தயார் நிலையில் உள்ளன. மழைநீரை வடியவைக்க 57 ஜே.சி.பி. எந்திரங்கள், நீரை உறிஞ்சும் 75 ‘சூப்பர் சக்கர்’ எந்திரங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் 71 எந்திரங்கள் சென்னை குடிநீர் வாரியத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

<u>பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணவுகள்</u>

சென்னையில் திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, அண்ணாநகர், தேனாம்பேட்டை உள்ளிட்ட இடங்களில் மக்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த பகுதிகளை சேர்ந்த 1,090 பொதுமக்கள் அருகில் உள்ள பள்ளிகள் மற்றும் சமுதாயக்கூடங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அண்ணாநகர், ராயபுரம் மண்டலங்கள் உள்பட பாதிக்கப்பட்ட மண்டலங்களில் பாதிக்கப்பட்ட இடங்களில் இதுவரை 90 ஆயிரம் உணவு பொட்டலங்கள்

வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து உணவு பொட்டலங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 120 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடங்கி நடந்து வருகிறது. தற்போது வரை இந்த முகாம்கள் மூலம் 19 ஆயிரத்து 200 பேர் பயனடைந்து உள்ளனர்.

<u>சாய்ந்த மரங்கள் அகற்றம்</u>

சென்னை நகரில் மாநகராட்சிக்கு உட்பட்ட 16 சுரங்கப்பாதைகள், நெடுஞ்சாலைத்துறைக்கு உட்பட்ட 6 சுரங்கப்பாதைகள் பயன்பாட்டில் உள்ளன. இதில் மாநகராட்சிக்குட்பட்ட கணேசபுரம் சுரங்கப்பாதையில் மழைநீர் சூழ்ந்திருப்பதால் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறைக்குட்பட்ட 4 சுரங்கப்பாதைகளிலும் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

நகரின் 490 இடங்களில் மழைநீர் தேங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதில் 186 இடங்களில் மழைநீர் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. இன்று (நேற்று) மட்டும் சென்னையில் மழைக்கு சாய்ந்த 7 மரங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

<u>சென்னை மாநகராட்சி தயார்</u>

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாநகராட்சி சார்பில் 3 மிதவை படகுகளும், தீயணைப்பு துறை சார்பில் 6 படகுகளும் தயார் நிலையில் உள்ளன. 45 பேர் கொண்ட ஒரு குழுவும், 35 பேர் கொண்ட மற்றொரு குழுவும் தேசிய பேரிடர் மேலாண்மை மீட்புக்குழு சார்பில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 6 படகுகளும் தயார் நிலையில் உள்ளன. மிதவை பலூன்கள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் தயார்நிலையில் உள்ளன. இந்த குழுக்கள் பேசின்பிரிட்ஜ் மற்றும் அடையாறு உள்ளிட்ட பகுதிகளில் முன்னெச்சரிக்கையாக நிறுத்தப்பட்டு உள்ளனர்.

சென்னை மாநகராட்சியை பொறுத்தமட்டில் மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். செயற்பொறியாளர் தலைமையில் 30 பேர் கொண்ட குழுக்களாக பணியாளர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர். 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு நிலையம் உள்ளது. ‘1913’, ‘9445190228’, 044–25387235 உள்ளிட்ட எண்களில் தொடர்புகொண்டு புகார்களை

தெரிவிக்கலாம். எனவே இந்த மழைக்காலத்தில் எல்லா விதமான மீட்பு பணிகளையும் மேற்கொள்ள அனைத்து விதத்திலும் சென்னை மாநகராட்சி தயார் நிலையிலேயே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மழையினால் உயிரிழந்த 4 பேர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

மழையினால் உயிரிழந்த 4 பேர் குடும்பங்களுக்கு தலா ரூ.4 லட்சம் நிதி உதவி வழங்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>மழையின் காரணமாக 4 பேர் சாவு</u>

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையின் காரணமாக 13.11.2015 அன்று காஞ்சீபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், காலூர் கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மகன் முரளி;

13.11.2015 அன்று காஞ்சீபுரம் மாவட்டம், கோனேரி குப்பம் கிராமத்தை சேர்ந்த குமரவேல் என்பவரின் மகன் சரத்குமார்;

14.11.2015 அன்று காஞ்சீபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், அயிமிச்சேரி கிராமத்தை சேர்ந்த சுரேஷ் என்பவரின் மனைவி பிரேமா;

ஆகியோர் வெள்ளப் பெருக்கின் காரணமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

14.11.2015 அன்று வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், ஒடுக்கத்தூர் கிராமத்தை சேர்ந்த ஆறுமுகம் என்பவரின் மனைவி சாந்தி மழையின்

காரணமாக சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தலா ரூ.4 லட்சம் நிதி உதவி

தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையின் காரணமாக உயிரிழந்த இந்த 4 பேர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும் சென்னை, தலைமைச் செயலகம், பொதுத் துறையில் மின்தூக்கி இயக்குபவராகப் பணி புரிந்து வந்த சு.ராஜு உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 12.11.2015 அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன். உடல்நலக் குறைவால் காலமான மின்தூக்கி இயக்குபவர் ராஜுவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான மின்தூக்கி இயக்குபவர் ராஜுவின் குடும்பத்திற்கு முதல்–அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

## மழை சேத பகுதிகளை ரங்கசாமி பார்வையிட்டார் நிவாரண பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு



காலாப்பட்டு

மழை சேத பகுதிகளை முதல்–அமைச்சர் ரங்கசாமி பார்வையிட்டார். நிவாரண பணிகளை விரைவாக மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ரங்கசாமி பார்த்தார்

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக புதுச்சேரியில் கடந்த 3நாட்களாக அடைமழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைவெள்ளம் தேங்கியுள்ளது.

மேலும் ஏற்கனவே உருவான காற்றழுத்த தாழ்வுமண்டலம் கரையை கடந்தபோது வீசிய சூறைக்காற்று மற்றும் மழையினால் வாழை உள்ளிட்ட விவசாய பயிர்கள் சேதமடைந்தன. இந்த சேத பகுதிகளை முதல்–அமைச்சர் ரங்கசாமி நேற்று பார்வையிட்டார்.

காலாப்பட்டு, கனகசெட்டிகுளம், பிள்ளைச்சாவடி, சின்னகாலாப்பட்டு பகுதிகளில் அவர் சேத பகுதிகளை பார்வையிட்டார். மேலும் கனகசெட்டிகுளத்தில் காற்றினால் வாழைகள் சேதமடைந்திருப்பதையும் பார்த்தார். அவருடன் காலாப்பட்டு தொகுதி எம்.எல்.ஏ. கல்யாணசுந்தரமும் சென்றிருந்தார்.

அதிகாரிகளுக்கு உத்தரவு

மேலும் நகரப்பகுதியில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளுக்கு காரில் சென்ற முதல்–அமைச்சர் ரங்கசாமி பார்வையிட்டார். செல்போன் மூலம் அதிகாரிகளை தொடர்புகொண்ட அவர் உடனடியாக தண்ணீரை வடிய வைக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்குமாறும் அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

## புதுச்சேரியில் தொடரும் மழை; 11 ஏரிகள் நிரம்பின

புதுச்சேரியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் 11 ஏரிகள் நிரம்பியுள்ளன.

மழை

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக புதுவையில்

கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. பெரிய மழையாக பெய்யாமல் லேசான சாரல் மழை போன்று பெய்கிறது. எப்போதாவது சில நேரம் மழை சற்று ஓய்வெடுக்கிறது. இந்த மழை காரணமாக புதுச்சேரியில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. எந்த நேரமும் தூறிக்கொண்டே இருப்பதால் பள்ளி, கல்லூரி, அலுவலகம் செல்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக கூலி வேலைக்கு செல்வோர் எந்த வேலையும் கிடைக்காமல் தற்போது திண்டாடி வருகின்றனர். பகலில் சூரியனின் முகத்தையே பார்க்க முடியாத சூழல் நிலவுகிறது. வானில் கருமேகங்கள் உலா வந்தபடி உள்ளது. இதன் காரணமாக காலை வேளைகளிலும் குளிர்ந்த காற்று வீசுகிறது. கடந்த 24மணிநேரத்தில் புதுச்சேரியில் 3செ.மீ. மழை பெய்துள்ளது. மழையால் புதுச்சேரி அஜிஸ்நகர், பாவாணன் நகர், லாம்பட் சரவணன் நகர், இந்திராகாந்தி விளையாட்டு மைதானம் உள்பட பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்றன. இதனால் அந்த பகுதியில் வகிக்கும் மக்கள் பெரும் சிரமம் அடைந்துள்ளனர்.

மீன்பிடிக்க செல்லவில்லை

தொடர்மழையின் காரணமாக புதுச்சேரி-கடலூர் சாலையில் வெங்கடசுப்பா ரெட்டியார் சிலையில் இருந்து மரப்பாலம் வரையிலும், உப்பளம் அம்பேத்கர் சாலை உள்பட நகரின் பல்வேறு இடங்களில் உள்ள சாலைகளில் குண்டு, குழிகள் ஏற்பட்டுள்ளன. அதை சீர்செய்யக்கூட வழியில்லாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடல் அலைகளின் சீற்றமும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மீனவர்கள் யாரும் மீன்பிடிக்க செல்லவில்லை மீனவர்களின் படகுகள் புதுச்சேரி தேங்காய்திட்டு மீன்பிடித் துறைமுகம் மற்றும் உப்பளம் பழைய துறைமுகத்தில் நிறுத்தி

வைக்கப்பட்டுள்ளன. இந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக மேலும் சில நாட்கள் மழை நீடிக்கும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. எனவே மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவேண்டாம் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

11 ஏரிகள் நிரம்பின

தொடர்மழை காரணமாக புதுவை பகுதியில் கிருமாம்பாக்கம் பெரிய ஏரி, சின்ன ஏரி, வாதனூர் ஏரி, கைக்கிளப்பட்டு ஏரி உள்பட 11 ஏரிகள் நிரம்பியுள்ளன. மிகப்பெரிய ஏரிகளான ஊசுட்டேரி, பாகூர் ஏரிகளில் ஓரளவு தண்ணீர் உள்ளது. இதுவரை புதுச்சேரியில் மழை காரணமாக 16வீடுகளும் சேதமடைந்துள்ளன.

கடலூர் சாலையில் வனத்துறை அலுவலகம் முன்பு குடிநீர் குழாய் பதிப்பதற்காக கடந்த சில நாட்களுக்கு முன்பு பள்ளம் தோண்டி மூடப்பட்டது. தற்போது பெய்த மழையால் அதில் ஏற்பட்ட பள்ளத்தில் அந்த வழியாக சென்ற லாரியின் சக்கரம் சிக்கிக்கொண்டது. பின்னர் அந்த லாரி மீட்கப்பட்டது.

## ஜெயங்கொண்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

ஜெயங்கொண்டம்

ஜெயங்கொண்டம் பகுதியில் மழையால் பெய்த பாதிக்கப்பட்ட வயல்களை அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பன்னீர்செல்வம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஜெயங்கொண்டம் பகுதிகளில் நெற்பயிர் 2,092 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 673 எக்டர் நேரடியாக விதைப்பு செய்யப்பட்ட பயிராகும். மீதமுள்ள 1419 எக்டர் நடவு செய்யப்பட்ட நெற்பயிராகும். சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவ மழையினால் பயிர்சேதம் மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதா என ஆய்வு மேற்கொண்டதில் குலோத்துங்க நல்லூர் வடவாறு பாசனப்பகுதி காட்டகரம் (தெற்கு) ஆகிய பகுதிகளில் மழையினால் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்று இயக்குனர் கூறினார். மேலும் வயலில் பூச்சி நோய் தாக்குதலை தவிர்ப்பதற்கு வேப்பஎண்ணெய் மருந்து 1 ஏக்கருக்கு 400 மி.லி மற்றும் சூடோமோனாஸ்

புளூரசன்ஸ்1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் தெளிக்கும் படி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார். இந்த ஆய்வின்போது ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோவன், தா.பழூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் மணிகண்டன், கவிதா மற்றும் பலர் உடனிருந்தனர்.

## வேளாண் பொருட்களின் விலை விவரம்



அரியலூர்,

அரியலூர் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளைபொருட்களின் விலை விவரம் வருமாறு:– மக்காச்சோளம் (100 கிலோ)– ரூ.1,359, கம்பு (100 கிலோ)– ரூ.1,479. இத்தகவலை வேளாண் விற்பனைக்கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார்.

ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளை பொருட்களின் விலை விவரம் வருமாறு:– மணிலா (80 கிலோ) ரூ.5,169, எள் (80 கிலோ) ரூ.4,309.

## வீராணம் ஏரிக்கு மழைநீர் வரத்து அதிகரிப்பு வெள்ளியங்கால் ஓடையில் இருந்து தண்ணீர் திறப்பு



காட்டுமன்னார்கோவில்

வீராணம் ஏரிக்கு மழைநீர் வரத்து அதிகரித்துள்ளதால் வெள்ளியங்கால் ஓடையில் இருந்து மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் 30–க்கு மேற்பட்ட கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

வீராணம் ஏரி

காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் உள்ள மிகப்பெரிய வீராணம் ஏரியின் மொத்த கொள்ளளவு 47 அடியாகும். கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையால் வீராணம் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஏரியை பாதுகாக்கும் பொருட்டு ஏரியில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி நீரை பொதுப்பணித்துறையினர் திறந்து விட்டனர். இதனால் வெள்ளியங்கால் ஓடையை ஒட்டியுள்ள 30–க்கு மேற்பட்ட கிராமங்கள் மற்றும் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 2 நாட்களாக பெய்த மழையால் வீராணம் ஏரிக்கு மழைநீர் வரத்து மேலும் அதிகரித்துள்ளது. இதனால் ஏரியில் இருந்து லால்பேட்டை வெள்ளியங்கால் ஓடை வழியாக வினாடிக்கு 500 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதேபோல் மண வாய்க்கால் பகுதிகளான கஞ்சக்கொல்லை, முட்டம், திருமூலஸ்தானம், மற்றும் பல்வேறு பகுதிகளில் பெய்த மழைநீரும் வெள்ளியங்கால் ஓடை வழியாக செல்கிறது. இவை வீரநத்தம் வெள்ளியங்கால் ஓடையில் சேருவதால் 30–க்கு மேற்பட்ட கிராம மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

10 ஆயிரம் கன அடி

இந்த தண்ணீர் அனைத்தும் குமராட்சி கோட்டாவு மதகு வழியாக வினாடிக்கு 10 ஆயிரம் கன அடி தண்ணீர் வீதம் பழைய கொள்ளிடம் ஆற்றின் வழியாக

கடலுக்கு செல்கிறது. இதனால் கீழக்கரை, நந்திமங்கலம், அத்திப்பட்டு, முள்ளங்குடி உள்பட பல்வேறு கிராம மக்கள் வெள்ள அபாயத்தில் உள்ளனர்.

## கடலூரில் மழையால் பாதிக்கப்பட்ட 128 பேருக்கு நிவாரண உதவி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வழங்கினார்

கடலூர்

கடலூரில் மழையால் சேதம் அடைந்த 128 வீடுகளின் உரிமையாளர்களுக்கு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நிவாரண உதவிகளை வழங்கினார்.

சீரமைப்பு பணிகள்

கடலூர் மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்பேரில் நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உள்பட 6 அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழுவினர் கடந்த 4 நாட்களாக கடலூர் மாவட்டத்தில் முகாமிட்டு நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை துரிதப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு சீரமைப்பு பணிகளை முடுக்கிவிட்டார்.

128 பேருக்கு நிவாரணம்

முன்னதாக காலையில் கடலூர் நகராட்சிக்குட்பட்ட புருஷோத்தமன் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அருகில் உள்ள தனியார் மகளிர் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பார்வையிட்டு, மழையால் சேதம் அடைந்த வீடுகளின் உரிமையாளர்கள் 128 பேருக்கு தலா ரூ.5 ஆயிரம் நிவாரண உதவித்தொகை, அரிசி, வேட்டி–சேலை மற்றும் மண்எண்ணெய் ஆகியவற்றை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து கடலூர் திருவந்திபுரம் பகுதியில் உள்ள கெடிலம் ஆற்றின் கரையில் 2 இடங்களில் ஏற்பட்ட உடைப்பை சரிசெய்யும் பணியை அமைச்சர் பன்னீர்செல்வம் பார்வையிட்டார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு

ஆராய்ச்சிக்குப்பம், பில்லாலி தொட்டி ஆகிய இடங்களில் விவசாய நிலங்களை தண்ணீர் சூழ்ந்ததால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்ட அவர் தண்ணீரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

செங்கல் ஓடை சீரமைக்கும் பணி

இதன் பின்னர் பாச்சாரப்பாளையம், மீனாட்சி பேட்டை ஆகிய பகுதிகளில் வீடுகளுக்குள் தேங்கி நிற்கும் தண்ணீரை பார்வையிட்ட அமைச்சர் பன்னீர்செல்வம் தண்ணீரை அப்புறப்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும் குறிஞ்சிப்பாடி கல்குணம், பூதம்பாடி, சிறுபாளையூர் உள்ளிட்ட கிராமங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 30 ஆயிரம் பேருக்கு குறிஞ்சிப்பாடி தனியார் பள்ளியில் உணவு தயாரிக்கும் பணியை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பார்வையிட்டார். தொடர்ந்து கல்குணம் பகுதியில் வேளாண் பயிர்கள் தண்ணீரில் மூழ்க காரணமாக செங்கால் ஓடையில் ஏற்பட்ட உடைப்பை 300 மணல் மூட்டைகள் கொண்டு சீரமைக்கும் பணியையும் அவர் பார்வையிட்டார்.

இதில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை முதன்மை செயலாளர் ககன்தீப்சிங்பேடி, கலெக்டர் சுரேஷ்குமார், எம்.எல்.ஏ.க்கள் சொரத்தூர் ராஜேந்திரன், எம்.பி.எஸ்.சிவசுப்பிரமணியன், நகரசபை தலைவர் குமரன், துணை தலைவர் சேவல்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மல்லிகா வைத்தியலிங்கம், ஒன்றிய குழு தலைவர் மணிமேகலை பழனிச்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தொடர்ந்து பெய்து வரும் மழையால் கடலூர் மாவட்டத்தில் 1,700 ஏரி, குளங்கள் நிரம்பின



கடலூர்

கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மாவட்டம் முழுவதும் 1,700 ஏரி, குளங்கள் நிரம்பின. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாசன ஏரிகளின் நீர் மட்டம் குறைக்கப்பட்டுள்ளது.

பருவமழை

வடகிழக்கு பருவமழை கடந்த 28–ந் தேதி தொடங்கியது. இதையடுத்து வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் வளிமண்டலத்தின் மேலடுக்கில் உருவான சுழற்சி காரணமாக தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

இந்த நிலையில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி கடந்த 9–ந்தேதி புதுச்சேரி அருகே கரையை கடந்தது. அப்போது சூறாவளி காற்றுடன் இடைவிடாமல் பெய்த அடை மழையினால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குடியிருப்பு மற்றும் விளைநிலங்களுக்குள் தண்ணீர் புகுந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியது. மேலும் ஆறு, ஏரி, குளம் மற்றும் அணைகளுக்கும் நீர்வரத்து தொடங்கியது.

ஏரி,குளங்கள் நிரம்பின

கடலூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய பாசன ஏரிகளான வீராணம், வாலாஜா, பெருமாள் ஆகிய ஏரிகள் நிரம்பி வழிந்தன. இது தவிர பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 228 சிறிய ஏரிகளில் 166 ஏரிகள் முழுமையான நிரம்பின. மேலும் 26 ஏரிகளில் 75 சதவீதமும், 20 ஏரிகளில் 50 சதவீதமும், இதற்கு குறைவாக 16 ஏரிகளிலும் தண்ணீர் உள்ளன.

அதேபோல ஊராட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் மாவட்டம் முழுவதும் உள்ள 1,532 குளங்கள், 1,828 குட்டைகளும் நிரம்பின. இதனால் இனிமேல்

கன மழை பெய்யும் பட்சத்தில் ஏரி, குளங்களில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

நீர் மட்டம் குறைந்தது

இந்த நிலையில் பாசன ஏரிகளின் நீர் மட்டம் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்று முன்தினம் 44.20 அடியாக இருந்த வீராணம் ஏரியின் நீர் மட்டம் நேற்று 43.8 அடியாக குறைந்துள்ளது. ஏரிக்கு நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து வினாடிக்கு 35 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஏரியில் இருந்து வினாடிக்கு 76 கன அடி நீர் சென்னை குடிநீருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 960 கன அடி தண்ணீர் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு வழியாக வெளியேற்றப்படுகிறது.

அதேபோல நேற்று முன்தினம் 4.3 அடியாக இருந்த வாலாஜா ஏரியின் நீர் மட்டம் நேற்று 3.4 அடியாக குறைந்துள்ளது. ஏரிக்கு நீர்பிடிப்பு பகுதிகளில் இருந்து வினாடிக்கு 1,318 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. அதே அளவு தண்ணீர் ஏரியில் இருந்து வெளியேற்றப்படுகிறது.

பெருமாள் ஏரி

நேற்று முன்தினம் 6.3 அடியாக இருந்த பெருமாள் ஏரியின் நீர் மட்டம் 5.9 அடியாக குறைந்துள்ளது. ஏரிக்கு நீர் பிடிப்பு பகுதிகளில் இருந்து வினாடிக்கு 1,380 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஏரியில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரத்து 750 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அதாவது ஏரிக்கு வருகின்ற நீர் வரத்தை விட இரு மடங்கு தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

வெலிங்டன் ஏரியை(மொத்த கொள்ளளவு 27.4 அடி) பொறுத்தவரை நீர் மட்டம் 12.20 அடியில் இருந்து 12.80 அடியாக உயர்ந்துள்ளது.

இது குறித்து பொதுப்பணித்துறை(நீர்வள ஆதாரம்) உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

முன்னெச்சரிக்கை

கடலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழையால் 3 பாசன ஏரிகள் நிரம்பி விட்டன. ஏரியில் இருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீர் மற்றும் அளவுக்கு அதிகமாக பெய்த கனமழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அருகில் உள்ள குடிசைகள் மற்றும் விளை நிலங்களுக்குள் புகுந்து பெரும் சேதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதால் மேலும் 5 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் திடீரென ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துவிட்டால் ஏரியில் இருந்து அதிகப்படியான தண்ணீரை திறக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்படி திறந்தால் அருகில் உள்ள குடியிருப்புகள், விளைநிலங்கள் பாதிக்கப்படும். இதை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாசன ஏரிகளின் நீர் மட்டத்தை சற்று குறைத்து வைக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

## காட்டுமன்னார்கோவில் பகுதியில் மழையால் 200 ஏக்கர் வெற்றிலை, 350 ஏக்கர் வாழைமரங்கள் சேதம் நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை



காட்டுமன்னார்கோவில்

காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெய்த மழையால் 200 ஏக்கர் வெற்றிலை, 350 ஏக்கர் வாழைமரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

### மழையால் பாதிப்பு

காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை, கொல்லிமலை, கீழ்பாதி, மேல்பாதி, மானியம் ஆடூர், நத்தமலை, ராயநல்லூர், திருச்சின்னபுரம், கந்தகுமரன், நெடுஞ்சேரி புத்தூர், ஆயங்குடி ஆகிய கிராமங்களில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்துள்ளனர். இதற்கு ஊடு பயிராக வாழையும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சில விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கடலூர் மாவட்டம் முழுவதும் பருவமழை பெய்து வருகிறது. சமீபத்தில் பெய்த கனமழையால் மாவட்டம்

முழுவதும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. குடியிருப்புகளை மட்டுமின்றி, விவசாய நிலங்களுக்குள்ளும் மழைநீர் புகுந்தது.

சேதம்

இந்த மழையின்போது பலத்த சூறைக்காற்று வீசியது. இதனால் வெற்றிலை சாகுபடிக்காக போடப்பட்டிருந்த பந்தல்கள் முறிந்து விழுந்தன. இதேபோல் வாழைமரங்களும் சாய்ந்தன. இந்த மழையால் காட்டுமன்னார் கோவில் பகுதியில் மட்டும் 200 ஏக்கர் வெற்றிலை பயிரும், அதற்கு ஊடு பயிராக போடப்பட்டிருந்த 200 ஏக்கர் வாழையும், உருத்திரசோலை, ஏள்ளேரி, லால்பேட்டை, ரம்ஜான்கைக்கால், மாகொலக்கொடி, ஆயங்குடி உள்பட பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த 150 ஏக்கர் வாழை மரங்களும் முறிந்து சேதமானது.

கணக்கெடுக்கும் பணி

இதில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து காட்டுமன்னார்கோவில் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் நேரில் சென்று, மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை பார்வையிட்டு கணக்கெடுத்து வருகின்றனர். இந்த கணக்கெடுக்கும் பணிகளை விரைந்து முடித்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். அதற்கு அதிகாரிகள் விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக கூறினர்.

**வேளாண் பொறியியல் துறை சார்பில் பயனாளிகளுக்கு, ரூ.80½ லட்சம் மதிப்பில் எந்திரங்கள்- கருவிகள் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்**



வேளாண் பொறியியல் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு ரூ.80½ லட்சம் மதிப்பில் வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகளை அமைச்சர் பூனாட்சி

வழங்கினார்.

வேளாண் எந்திரங்கள்- கருவிகள்

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள எஸ்.ஜி.எஸ்.ஒய். கூட்டரங்கில் வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வாடகை மையம் அமைக்கும் திட்டத்தின்கீழ் மானிய விலையில் வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கும் விழா மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. அரசு தலைமை கொறடா மனோகரன், எம்.பி.க்கள் ரத்தினவேல், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விழாவில் அமைச்சர் பூனாட்சி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு ரூ.80 லட்சத்து 62 ஆயிரம் மதிப்பிலான வேளாண் எந்திரங்கள், கருவிகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

வாடகை மையம் அமைக்கும் திட்டம்

வேளாண்மைக்கு தேவையான வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்படுவதால் பண்ணை எந்திரங்களின் பயன்பாடு அதிகரிப்பதோடு, நவீன வேளாண் எந்திரங்கள் விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன்மூலம், விவசாய கூலி தொழிலாளர்களின் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், விவசாய உற்பத்தியும் அதிகரித்து வருமானமும் அதிகரிக்கிறது. வேளாண் எந்திரங்கள் மற்றும் வேளாண் கருவிகள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறு, குறு மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு 50 சதவீதம், இதர பிரிவு விவசாயிகளுக்கு 40 சதவீதம் அல்லது அரசு நிர்ணயித்துள்ள தொகை இவற்றில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகளை சிறு மற்றும் குறு விவசாயிகள் வாங்கி தங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையில், நியாயமான வாடகையில் இதர விவசாயிகளும் பயன்படுத்தும் வகையில் வேளாண் எந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைக்கும் திட்டம் என்ற புதிய திட்டம் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு வாடகை மையம் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25 லட்சத்தில், அதிகபட்சமாக 40 சதவீத தொகை அல்லது ரூ.10 லட்சம் வரை

மானியமாக வழங்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார். விழாவில் மாநகராட்சி மேயர் ஜெயா, எம்.எல்.ஏ.க்கள் பரஞ்ஜோதி, சிவபதி, இந்திராகாந்தி, வளர்மதி மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**வெள்ளத்தில் மிதக்கிறது சென்னை: இன்னும் 3 நாள் பேய்மழை ஓயாது**

15 மாவட்டங்களில் பள்ளிகள் விடுமுறை

சென்னை: கடந்த சில நாளாக பெய்து வரும் கனமழை காரணமாக தமிழகத்தின் பல மாவட்டங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாயின. மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியுள்ளது. ஒரு மணி நேர மழைக்கே தாங்காத சென்னை பகுதிகள் எல்லாம் வெள்ளக்காடாய் காட்சி அளிக்கின்றன. 15 மாவட்டங்களில் இன்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக தேர்வுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை கடந்த 28ம் தேதி தொடங்கியது. அன்று முதல் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. கடந்த 4 நாட்களாக சென்னை உள்பட தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் மழை கொட்டி வருகிறது. சென்னையில் பல பகுதிகளில் வெள்ளம், கழிவுநீர் கலந்து பாய்ந்து வருவதால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். சில இடங்களில் இடுப்பளவு தண்ணீர் வந்து விட்டதால், வீட்டை விட்டு வெளியேறி சென்று விட்டனர். தண்ணீர் தேங்கியுள்ள பகுதியில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

120 பேர் பலி: சென்னையை பொறுத்தவரை மழைக்கு இது வரை 12 பேர் பலியாகியுள்ளனர். தமிழகத்தை பொறுத்தவரை பலி எண்ணிக்கை 120 ஐ தாண்டியுள்ளது. தமிழகத்தில் மழை பெய்த இடங்களில் நிவாரணப் பணிகளை

அரசு ஒழுங்காக செய்யவில்லை என்ற அதிருப்தி பொதுமக்களிடையே நிலவி வருகிறது. பலத்த மழை காரணமாக தமிழகம் முழுவதும் ஏரி, குளங்கள் உள்பட அனைத்து நீர் நிலைகளும் நிரம்பி வழிகின்றன. மழையால் நேற்று சென்னையில் இயக்கப்பட்ட மின்சார ரயில்கள் அனைத்தும் மிக குறைந்த வேகத்தில் இயக்கப்பட்டது. கடலூரில் மீண்டும்: கடந்த வாரம் பெய்த மழையால் கடும் பாதிப்புக்குள்ளான கடலூர் மாவட்டத்தில் நேற்று முதல் மீண்டும் கனமழை கொட்டி வருகிறது. ஏற்கனவே ஏற்பட்ட வெள்ளத்தின் பாதிப்புகள் இன்னமும் குறையாத நிலையில் மீண்டும் மழை பெய்து வருவதால் கடலூர் மக்கள் அச்சத்தில் உள்ளனர் வெள்ள அபாயம் காரணமாக 300 கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது. வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் சேலம், கிருஷ்ணகிரி, நாமக்கல், தர்மபுரி, குமரி மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் ஆகிய 6 தென் மாவட்டங்களில் சாரல் மழையே பெய்து வருகிறது. நெல்லையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும் மழை பெய்யவில்லை.

3 நாள் பேய்மழை: வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது: தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேலும் தீவிரம் அடைந்து தீவிர காற்றழுத்த பகுதியாக மாறியுள்ளது. இது இலங்கை மற்றும் மன்னார் வளைகுடா பகுதி அருகே நிலை கொண்டுள்ளது. மேலும் வட மேற்கு திசையில் நகரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிகழ்வால் வட தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்யும். தமிழகத்தின் உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யும். சென்னையில் விட்டுவிட்டு மழை பெய்யும், நகரின் சில இடங்களில் கனமழை பெய்யும். கடலில் காற்றின் வேகம் மணிக்கு 60 கிமீ வேகத்தில் இருக்கும். இதனால் கடல் சீற்றம் ஏற்படும். 34 செமீ கிடைத்தது: வடகிழக்கு பருவமழை காலமான அக்டோபர் 1ம் தேதி முதல்

டிசம்பர் வரையான காலத்துக்கு 44 செமீ மழை பெய்வது வழக்கம். ஆனால், கடந்த ஒரு வார மழைக்கே இதுவரை 34 செமீ மழை பெய்துள்ளது.

வட கிழக்கு பருவமழை காலங்களில் புயலைவிட காற்றழுத்த தாழ்வுநிலைகள் உருவாகும் போதுதான் மழை அதிக அளவில் பெய்யும். கடந்த 2004ம் ஆண்டு முதல் 2011ம் ஆண்டுவரை உள்ள காலகட்டத்தில் இயல்பு நிலைக்கு அதிகமாகவே மழை பெய்துள்ளது. கடந்த ஆண்டில் 2 சதவீதம் மழை குறைந்துள்ளது. வங்கக் கடலில் காற்றழுத்தம் உருவாகும் போது அது தமிழகம் நோக்கி வருவதால் தமிழகத்தில் அதிக மழை பெய்கிறது. அந்த நிகழ்வுதான் தற்போது ஏற்பட்டுள்ளது. இது தொடர்ந்து நீடித்தால் இயல்பு நிலைக்கு அதிகமாகவே மழை பெய்யும். மழை அளவு; நேற்று ஆனைக்காரன் சத்திரம் பகுதியில் 180 மிமீ மழை பெய்துள்ளது. சீர்காழி 170 மிமீ, மயிலாடுதுறை 110 மிமீ, பரங்கிப்பேட்டை 100 மிமீ, சிதம்பரம், தரங்கம்பாடி 90 மிமீ, பண்ருட்டி 80 மிமீ, கடலூர், காரைக்கால், நெய்வேலி 70 மிமீ, காட்டுமன்னார் கோயில், புதுச்சேரி 60 மிமீ, ஜெயங்கொண்டம், சேத்தியாதோப்பு, வேதாரண்யம், விருத்தாசலம் 50 மிமீ, ஆடுதுறை, ராமேஸ்வரம், ・முஷ்ணம் 40 மிமீ, நன்னிலம், கும்பகோணம், தரமணி, மயிலம் 30 மிமீ மழை பெய்துள்ளது. சென்னையை பொறுத் தவரை நேற்று காலை 11.30 மணிவரை நுங்கம்பாக்கத்தில் 30 மிமீ, சென்னை விமான நிலையத்தில் 80 மிமீ மழை பெய்துள்ளது. இதைத் தொடர்ந்து நேற்று பகல் முழுவதும் சென்னையில் 80 மிமீ வரை பெய்துள்ளது. இவ்வாறு ரமணன் கூறினார். பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை

பலத்த மழை காரணமாக சென்னை, காஞ்சிப்புரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், நாமக்கல், திருச்சி, ராமநாதபுரம் ஆகிய 9 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கும், கரூர், அரியலூர், பெரம்பலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் பள்ளிகளுக்கும் விடுமுறை என தமிழகம் முழுவதும் 15 மாவட்டங்களுக்கு விடுமுறை அறிவித்து அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் உத்தரவிட்டுள்ளனர். மேலும், பல்கலைக்கழகங்கள் இன்று நடைபெற இருந்த தேர்வையும் தள்ளி

வைத்துள்ளன.அரசு ஊழியர்கள் விடுப்புக்கு தடை அரசு ஊழியர்கள் இன்று முதல் மூன்று நாளுக்கு விடுப்பு எடுக்காமல் கட்டாயம் பணிக்கு வர வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. மழை, வெள்ளம் அதிகரிப்பதால் பணிகளில் இடையூறு ஏற்படக்கூடாது என்பதால் விடுப்புக்கு தடை போடப்பட்டுள்ளது. கால்வைத்த இடமெல்லாம் வெள்ளம் சென்னையை பொறுத்தவரை கடந்த வெள்ளிக்கிழமை வரை பலத்த மழை பெய்தது. சனிக்கிழமை மட்டும் மழை சற்று ஓய்திருந்தது. இந்த நிலையில் மீண்டும் நேற்று விடிய காலை 3 மணி முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. ஒரு சில நேரங்களில் கனமழையும் கொட்டி வருகிறது. கீழ்ப்பாக்கம், புரசைவாக்கம், பெரம்பூர், பாரிமுனை, அண்ணாநகர், சூளைமேடு, கிண்டி, சைதாப்பேட்டை, மாம்பலம், வடபழனி, போரூர், தாம்பரம், ராயப்பேட்டை, மயிலாப்பூர், எழும்பூரில் மழை கொட்டி தீர்த்தது. சாலைகளில் எங்கும் வெள்ளம் தான்; சில இடங்களில் படகு விடும் அளவுக்கு நிலைமை முற்றி வருகிறது. வீடுகளில் கழிவுநீருடன் வெள்ளம் பரவி வருகிறது. மெரினா கடற்கரை பகுதியிலும் கடல் நீரில் சாக்கடை கழிவுநீர் வெகுவா கலந்து செல்கிறது.

**தொடர் மழையால் காய்கறி விலை கடும் உயர்வு துவரம் பருப்புக்கு போட்டியாக தக்காளி கிலோ 130க்கு பறந்தது**




சென்னை: தொடர் மழை எதிரொலியால் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சமீபத்தில் கடும் விலை ஏற்றத்தை கண்ட துவரம் பருப்புக்கு போட்டியாக தக்காளியின் விலை கிலோ 130 வரை விற்கப்படுகிறது. தமிழகத்தில் கடந்த மாதம் துவரம் பருப்பு விலை வரலாறு காணாத வகையில்

250 வரை உயர்ந்தது. தற்போது தமிழகம் முழுவதும் மழை தொடர்ந்து பெய்து வருவதால் பயிர் செடிகள் அழுகி வருகின்றன. மேலும், வெளிமாநிலங்களில் இருந்து வரத்தும் குறைந்துள்ளது. இதனால், காய்கறி விலை உயர தொடங்கியுள்ளது. சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து லாரிகளில் காய்கறிகள் வருகின்றன. தினசரி 300 லாரிகளில் காய்கறி வந்து கொண்டிருந்தது. கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையால் வரத்து குறைந்து வெறும் 150 லாரிகளில் மட்டுமே காய்கறிகள் வருகின்றன. அது மட்டுமல்லாமல் சென்னை மற்றும் புறநகர் பகுதியில் பெய்து வரும் மழையால் சில்லரை வியாபாரிகள் மார்க்கெட்டுக்கு வருவது அடியோடு குறைந்துள்ளது. கடந்த 2 நாட்களில் காய்கறிகள் பெருமளவில் குப்பையில் கொட்டும் நிலை ஏற்பட்டது. வரத்து குறைவு, காய்கறிகள் அழுகி வருவது போன்ற காரணங்களால் காய்கறி விலை தற்போது கடுமையாக உயர தொடங்கியுள்ளது.

இதுகுறித்து, கோயம்பேடு மொத்த வியாபாரிகள் கூறியதாவது: கோயம்பேடு மொத்த மார்க்கெட்டுக்கு தக்காளி முன் 70 லாரிகளில் வந்தது. இது நேற்று முன்தினம் 40 லாரிகளாக குறைந்தது. நேற்று 30 லாரிகள் மட்டுமே தக்காளி வந்தன. அதனால், கிலோ 80க்கு விற்ற தக்காளி 20 உயர்ந்து 100க்கு விற்கப்படுகிறது. காலி பிளவர் 25லிருந்து 30, சேனைக்கிழக்கு 25லிருந்து 30, வெண்டைக்காய் 20 லிருந்து 30 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இதேபோல முருங்கைக்காய் 60, பீன்ஸ் 60, கத்தரிக்காய் 40, அவரைக்காய் 60, சுரைக்காய் 30, சவ்சவ் 20, பீட்ருட் 20, பச்சை மிளகாய் 40, உருளைக்கிழக்கு 18, சின்ன வெங்காயம் 50, பெரிய வெங்காயம் 50க்கு விற்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர். மொத்த மார்க்கெட்டை காட்டிலும் சில்லரை கடைகளில் காய்கறிகள் கிலோவுக்கு 20 முதல் முதல் 30 வரை அதிகமாக விற்கப்படுகிறது. தக்காளி ஒரு சில கடைகளில் கிலோ 130 வரை விற்கப்படுகிறது. ஒரு சில கடைகளில் 120 வரை விற்பனை செய்கின்றனர். ஏற்கனவே, அத்தியாவசிய

பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளதால் சாதாரண, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 357 காசாக உயர்வு**



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 357 காசாக உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழுகூட்டத்தில் முட்டை விலையில் மேலும் 3 காசு உயர்த்தப்பட்டது. இதையடுத்து ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 357 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருவதால் நாமக்கல்லிலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி 59, கறிக்கோழி 61 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மண்டலங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விபரம் (காசுகளில்):

**மழையால் விலை கிடுகிடு மல்லிகை பூ கிலோ 1000**



கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மல்லிகை, சாமந்தி பூ பயிரிடப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் இருந்து தினசரி 25 ஆயிரம் கிலோவிற்கும் அதிகமாக, பெங்களூர் மலர் சந்தைக்கு விற்பனைக்கு மல்லிகை பூ செல்லும். அதிகாலையில் கிருஷ்ணகிரியில் இருந்து பூக்கள் பறிக்கப்பட்டு விற்பனைக்கு செல்கிறது.

ஆண்டுதோறும் டிசம்பர் முதல் பிப்ரவரி வரை மழை மற்றும் பனி காரணமாக உற்பத்தி பாதிக்கும். தற்போது நவம்பரில் அதிகளவு மழை பெய்ததால், மல்லிகை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மல்லிகை பூவின் விலை உச்சத்தை அடைந்துள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ மல்லிகை பூ 100 முதல் 120 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தீபாவளிக்கு பிறகு, மல்லிகை பூவின் விலை கிடுகிடுவென உயர துவங்கியது. ஒரு கிலோ மல்லிகை பூ 800 முதல் 1000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தொடர் மழையால் காய்கறி விலை கடும் உயர்வு: தக்காளி கிலோ ரூ.80-க்கு விற்பனை



கோப்பு படம்

சென்னையில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சில்லறை விற்பனையில் தக்காளி கிலோ ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மற்றும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. ஆந்திரம், கர்நாடக மாநிலங்களிலும் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரும் காய்கறிகளின் அளவு குறைந்துள்ளது. காய்கறி வரத்து குறைவால் தக்காளி, வெங்காயம், வெண்டைக்காய், முள்ளங்கி, பீன்ஸ் போன்றவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தக்காளி சில்லறை விற்பனையில் கிலோ ரூ.80-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்தரராஜனிடம் கேட்டபோது அவர் கூறியதாவது: எல்லா இடங்களிலும் பலத்த மழை பெய்து வருவதால், காய்கறி உற்பத்தி குறைந்துள்ளது. அதனால் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரும் காய்கறிகளின் அளவும் குறைந்துள்ளது. பலத்த மழை காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டுக்கு காய்கறி வாங்க வரும் பொதுமக்களின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது.

வரத்து காய்கறிகள் விற்பனை ஆகாததால் பீன்ஸ், தக்காளி, பச்சை மிளகாய், அவரை, முள்ளங்கி, பூசணி உள்ளிட்ட காய்கறிகள் அழுகின. அதனால் அவற்றை வியாபாரிகள் குப்பையில் கொட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக 30 டன் அளவுக்கு அழுகிய காய்கறிகள் குப்பையில் கொட்டப்பட்டுள்ளன. இதனால் வியாபாரிகளுக்கு ரூ.60 லட்சம் அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் காய்கறி வரத்து குறைவால் அவற்றின் விலை கடந்த சில நாட்களாக கடுமையாக உயர்ந்துள்ளது. தக்காளி மொத்த விற்பனையில் ரூ.55-க்கும், சில்லறை விற்பனையில் ரூ.80-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் பல காய்கறிகளின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது என்றார் அவர்.

பலத்த மழையால் கோயம்பேடு மார்க்கெட் பகுதியில் மழைநீர் தேங்கி இருப்பதும், பொதுமக்கள் வராததற்கு காரணம் என்று வியாபாரிகள் கூறுகின்றனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால், மார்க்கெட் நிர்வாகம் சார்பில் தொடர்ச்சியாக ராட்சத பம்பு செட்டுகள் மூலம் மழை நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

## உப்பு படிந்த விவசாய நில பாதிப்பில் தமிழகம் 6-வது இடம்_: கூடுதல் நீர் பாசனம், வேதி உரத்தால் 3.67 லட்சம் ஹெக்டேர் பாதிப்பு_



இந்தியாவில் முறையற்ற நீர்ப் பாசனம், வேதி உரங்களின் பயன்பாட்டால் விவசாய நிலங்கள் பாதிப்பில் தமிழகம் 6-வது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் 329 மில்லியன் ஹெக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன. இவற்றில் 175 மில்லி யன் ஹெக்டேர் நிலங்கள் விவசா யம் செய்ய முடியாமல் பாழடைந் துள்ளன. 67.27 மில்லியன் ஹெக் டேர் நிலங்களில் உப்பின் அளவு அதிகரித்துள்ளதால், இந் நிலங்களில் விவசாய உற்பத்தி பெரிதும்

பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய அளவில் உப்பு பாதிப் படைந்த விவசாய நிலங்கள் பாதிப் பில் தமிழகம் 6-வது இடத்தில் உள்ளது.

முதல் 5 இடங்களில் குஜராத், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தமிழகத்தில் 3.54 லட்சம் ஹெக் டேர் விவசாய நிலங்கள் உப்பினால் பாதிக்கப்பட்ட உள்பகுதி நிலங்கள். 0.13 லட்சம் ஹெக்டேர் கடலோர விவசாய நிலங்கள். மொத்தம் 3.67 லட்சம் ஹெக்டேர் நிலங்கள் உப்பு படிந்து விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட நீர்வடிப் பகுதி வேளாண்மை பொறியாளர் பிரிட்டோராஜ் 'தி இந்து'விடம் கூறியதாவது:

நிலங்களில் உப்பு படிவதற்கு ஐந்து காரணங்கள் உள்ளன. முறையற்ற கூடுதல் நீர் பாசனம், நீர் வெளியேற முடியாத சதுப்பு நிலங்கள், ஆற்றுப்படுகை நிலங் கள், அதிக அளவு வேதி உரங்கள் (குளோரைடு, சல்பேட் உள்ளடக் கியவை) பயன்படுத்துவதால், தண்ணீர் வடிகால் வசதி இல்லாத நிலங்கள் உள்ளிட்ட காரணங்களால் விவசாய நிலங்களில் உப்பு படிகின்றன. தமிழகத்தில் கடலூர், நீலகிரி, பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சி, விருது நகர் மற்றும் ராமநாதபுரம் மாவட் டங்களில் அதிகளவிலும், காஞ்சி புரம், புதுக்கோட்டை, சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓர ளவும் விவசாய நிலங்களில் உப்பு படிந்து வருகின்றன. இந்த நிலங் களில் உப்பு படிதல் காரணமாக சாகுபடி செய்த பயிர், மரங்களு டைய வேர் வளர்ச்சி பாதிப்பு, குறைவான இலைகள் வளர்தல், இலைகளில் அதிகப்படியான மஞ்சள் படிவது, இலைகள் எளிதில் உதிர்ந்து கீழே விழுவது, மெதுவான வளர்ச்சி உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்படுகின்றன.

**வேர் அழுகும் பயிர்கள்**

இந்த நிலங்களில் இருந்து வெளியேறும் தண்ணீரை மீண்டும், மீண்டும் பயன்படுத்துவதால் உப்பு நிரந்தரமாக இந்த நிலத்தில் மேல் அடுக்காக படிந்துவிடுகிறது. இதனால், மண்ணின் காற்றோட்டம், நுண்ணுயிர் பெருக்கம், நீர் உள்ளே செல்லும் அளவும் குறைந்து நிலத்தில் சாகுபடி செய்யும் பயிர்களின் வேர் அழுகுகிறது. இந்த நிலங்களை சீர் செய்ய, இந்த வடகிழக்குப் பருவ மழை மிகவும் உகந்த காலம்.

பொதுவாக நெல், வாழை போன்ற பயிர்களை விவசாயிகள் மீண்டும், மீண்டும் பயிரிடும் களிமண் நிலங்களில் அதிகமான நீரையும், வேதி உரங்களையும் பயன்படுத்துவதால் இந்நிலங்களில் உப்பு பாதிப்பு அதிகமாகிறது.

இந்த நிலங்களில் உப்பு படிந்த மேல் மண்ணை வழித்தெடுத்து அப்புறப்படுத்துதல், விதைப்பதற்கு உரிய காலத்துக்கு சற்றுமுன் விதைத்து, நல்ல நீர் கொண்டு விவசாயம் செய்தல், வரப்பு அமைத்து (பார் அமைத்தல்) செடிகளை மாற்றும்போது, வரப்பின் சாய்வின் நடுவில் செடிகளை நடவு செய்வதால் உப்பு பாதிப்பில் இருந்து இந்த விவசாய நிலங்களை காக்கலாம் என்றார்._

**உப்பை எவ்வாறு வெளியேற்றலாம்?**

உப்பு படிந்த நிலங்களில் 2 அடி வரை ஆழத்தில் உப்பு தங்கி இருக்கும். உப்பு படிவங்களை உடைக்க உளி கலப்பையைக் கொண்டு ஆழமாக உழுது, நிலம் காற்றோட்டம் புகும் வகையிலும், நுண்ணுயிர்கள் உள்ளே செல்வதற்கு ஏதுவாகவும் நிலத்தை மாற்றலாம். மேலும், இந்த நிலங்களில் விதைப்பதற்கு 6 வாரங்களுக்கு முன், ஒரு ஹெக்டேருக்கு 1.2 முதல் 2 டன் அளவில் ஜிப்சத்தை தினமும் கொட்டி நிலத்தை முறையாக உழுது பயன்படுத்தலாம். மழைநீர் உப்பு கலப்படம் இல்லாத நல்ல நீர். அதனால், உப்பு பாதித்த நிலங்களில் பாத்திகள் அமைத்து, விழும் மழை நீரை அந்த நிலத்திலேயே சேமித்து மழைநீர் நிலத்தில் உட்புகும் வகையில் அமைக்கலாம். மழைநீர் உட்புகாமல் தேங்கி இருந்தால், அந்த நிலங்களின் சாய்வின் மூலையில் உள்ள வரப்பை உடைப்பதால் தேங்கியுள்ள மழைநீர் விரைவாக வெளியேறி, மேல்புறம் உள்ள உப்பை கரைத்து அதன் தாழ்வான பகுதியில் அமைந்திருக்கும் ஓடைகளின் வழியே வெளியேறி, நிலங்களில் உப்பின் அளவை பெருமளவு குறைக்க உதவும். இம்முறை நீரினால் அலசுதல் என்றழைக்கப்படுகிறது.

கொட்டும் தொடர் மழையால்_ சோழவரம் ஏரிக்கரை பலவீனமடைந்தது: பலப்படுத்தும் பணிகள் தீவிரம்



சென்னைக்கு குடிநீர் தரும் சோழவரம் ஏரியின் கரை பலவீனமானதால் அதை பலப்படுத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கனமழை காரணமாக சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதில் 881 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரிக்கு வினாடிக்கு 787 கனஅடி நீர்வரத்து உள்ளது. இதனால் சோழவரம் ஏரியில் நேற்றைய நிலவரப்படி 443 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது. இந்த ஏரியில் கூடுதலாக 200 மில்லியன் கனஅடி நீரை சேமிக்கும் வகையில் சில ஆண்டுகளுக்கு முன்பு, ரூ.50 லட்சம் செலவில் உபரி நீர் வெளியேறும் கலங்கல் பரப்பை அதிகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அப்போது கரைகளும் பலப்படுத்தப்பட்டன. ஆனால் கடந்த ஆண்டு மழையின்போது ஏரியின் ஒரு புறத்தில் உள்ள கரையில் விரிசல் ஏற்பட்டது. இதை பொதுப்பணித்துறை அதிகாரிகள் சரி செய்தனர்.

இந்நிலையில், தற்போது பெய்து வரும் மழையால் அதே இடத்திலேயே சுமார் 400 மீட்டர் நீளத்துக்கு கரையில் மீண்டும் விரிசல் ஏற்பட்டது. களிமண்ணால் ஆன கரை மழைக்கு உள்வாங்கியதால் இந்த விரிசல் ஏற்பட்டது. இதை துரித நடவடிக்கைகள் மூலம் பொதுப்பணித் துறை அதிகாரிகள் சரி செய்துவிட்டனர்.

அதே நேரத்தில், மழையின் காரணமாக, விரிசல் ஏற்பட்ட கரைப்பகுதி பலவீனமாக உள்ளதால், அதனை சரி செய்யும் பணியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, பொதுப் பணித்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, 'தொடர் மழையின் காரணமாக கரைப்பகுதி, பலவீனமாக இருக்கிறது. இதனால்,

மீண்டும் விரிசல் ஏற்பட வாய்ப்புள்ளதால் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளோம்' என்றார்.

**நீர்மட்டம் உயர்வு**

திருவள்ளூர் மாவட்டத்தில் பெய்து வரும் மழையினால் பூண்டி, சோழவரம், புழல், செம்பரம் பாக்கம் ஏரிகளுக்கு நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 6,531 கனஅடி மழை நீர் வந்துக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக ஏரிகளின் நீர் இருப்பு 5,088 மில்லியன் கனஅடியாக உயர்ந்துள்ளது. இதன் சதவீதம் 46.02 ஆகும்.

பூண்டி ஏரியிலிருந்து வினா டிக்கு 17 கனஅடி, புழல் ஏரியிலி ருந்து வினாடிக்கு 50 கனஅடி, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வினாடிக்கு 64 கனஅடி நீர் சென்னையின் குடிநீர் தேவைக்காக வெளியேற்றப்பட்டு வருகிறது.

## ஸ்ரீரங்கம் வண்ணத்துப்பூச்சி பூங்கா_: தமிழகம் முழுவதும் ரூ.33 கோடியில் 222 வனத்துறை கட்டிடங்கள் திறப்பு - காணொளி காட்சி மூலம் முதல்வர் தொடங்கிவைத்தார்

ஸ்ரீரங்கத்தில் அமைக்கப்பட்ட வண்ணத்துப்பூச்சி பூங்கா, நட் சத்திர வனம் மற்றும் வனத்துறை தொடர்பான 222 கட்டிடங்கள் ஆகியவற்றை முதல்வர் ஜெய லலிதா திறந்து வைத்தார். இவற் றின் மொத்த திட்ட மதிப்பு ரூ.40 கோடியே 93 லட்சத்து 21 ஆயிரம்.

இது தொடர்பாக, தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருச்சி, ஸ்ரீரங்கம் பகுதியில் மேல் அணைக்கட்டு காப்புக் காட்டில் ரூ.8 கோடியே 5 லட்சத்து 89 ஆயிரம் மதிப்பில் வண்ணத் துப்பூச்சி மற்றும் நட்சத்திர வனம் அமைக்கப்பட்டுள்ளது. இதை முதல்வர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

மேலும், காஞ்சிபுரம், நன்மங்கலத்தில் ரூ.7 கோடி மதிப்பில் தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கம் மற்றும் பசுமையாக்கல் திட்ட மேலாண் அலுவலக கட்டிடம், திருச்சியில் தலைமை வனப்பாதுகாவலர், விழுப்புரம் மற்றும் வேலூரில் வனப்பாதுகாவலர் அலுவலகங் கள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 5 மாவட்ட வன அலுவலர், 2 உதவி வனப்பாதுகாவலர், 16 வனச்சரகர், 22 வனவர், 49 ஒருங்கிணைந்த வனக்காப்பாளர், வனக்காவலர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

**கண்காணிப்பு கோபுரங்கள்**

இவை தவிர, 7 மாவட்ட வன அலுவலகங்கள், 13 வன விரிவாக்க அலுவலகங்கள், 5 வன பாதுகாப்புப்படை, 17 வனச்சரகர் அலுவலகங்கள், 4 வன ஓய்வு விடுதிகள், வைகை அணை வனவியல் பயிற்சி கல்லூரியில் களப்பணியாளர் விடுதி, 4 கருத்து விளக்கக் கூடங்கள் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நெல்லை, ஈரோடு, கன்னியா குமரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் 20 வேட்டை தடுப்பு முகாம்கள், பள்ளிக்கரணை சதுப்பு நிலம் உள்ளிட்ட 5 இடங்களில் பறவைகள் கண்காணிப்பு கோபுரங்கள், 8 மாவட்டங்களில் 22 தீத்தடுப்பு கண்காணிப்பு கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், கடலூர், நாகை, கோவையில் 5 வாகன நிறுத்துமிடங்கள், திண்டுக்கல், காஞ்சிபுரத்தில் 2 மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள், பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் 2 வனச்சோதனை சாவடிகள், குமரி மாவட்டம்- காளிகேசத்தில் சோலா காடுகள் விழிப்புணர்வு மையம், வேலூரில் 5 வனப்பொருள் சேமிப்பு மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

நெல்லை, கன்னியாகுமரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 8 குரங்குகள் மறுவாழ்வு மையங்கள், வேலூர் மற்றும் திருவண்ணாமலையில் 3 இடங்களில் மலையேற்ற பாதை கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறாக ரூ.32 கோடியே 88 லட்சத்து 32 ஆயிரம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் இருந்த 222 கட்டிடங்களையும் நேற்று முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார். திறக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் பூங்காவின் மொத்த மதிப்பு ரூ.40 கோடியே 93 லட்சத்து 21 ஆயிரமாகும்.

**அமைச்சர்கள் பங்கேற்பு**

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எம்.எஸ்.எம்.ஆனந்தன், தோப்பு என்.டி.வெங்கடாசலம், தலைமை செயலர் கு.ஞானதேசிகன், வனத்துறை செயலர் ஹன்ஸ் ராஜ் வர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## எருமையின் விலை ரூ.7 கோடி_: உணவுக்காக தினமும் ரூ.5,000 செலவு

ஹைதராபாத்தில் யாதவர்கள் நடத்தும் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள ஒரு எருமையின் விலை ரூ.7 கோடி. இதற்கு உணவுக்காக மட்டும் தினமும் ரூ.5,000 செலவிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஹரியாணா மாநிலம் குருஷேத்திரத்தை சேர்ந்த கர்ம்வீர் சிங் என்பவருக்கு சொந்தமான உயர் ரக இனத்தைச் சேர்ந்த எருமையின் பெயர் ‘யுவராஜ்’. 2007-ம் ஆண்டு பிறந்த இது 1,600 கிலோ எடையும் 6.5 அடி உயரமும், 14 அடி நீளமும் கொண்டது. இதற்கு தினமும் 15 கிலோ ஆப்பிள், பிஸ்தா, முந்திரி, திராட்சை, பால், கேரட், வெல்லம்உட்பட மாட்டு தீவனமும் உணவாக வழங்கப்படுகிறது. இதற்காக தினமும் ரூ. 5 ஆயிரம் வரை செலவிடப்படுகிறது. இதன் உயிரணு (விந்து) வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு பெரும் கிராக்கி உள்ளது. இதுவரை ஹரியாணா, பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்களில் பல எருது போட்டிகளில் பங்கேற்றுள்ள யுவராஜ், பரிசுகளையும், விருதுகளையும் வென்றுள்ளது. இப்போது ஹைதராபாத்தில் யாதவ சமூகத்தினர் நடத்தும் ‘சதர்’ விழாவில் இந்த எருது பங்கேற்றுள்ளது. இதன் விலை ரூ.7 கோடி என்று கூறப்படுகிறது. இந்தத் தொகையைக் கொடுத்து எருமையை வாங்க சிலர் முன் வந்துள்ளனர். எனினும் கர்ம்வீர் சிங் மறுத்துள்ளார்.

இந்த எருதை குருஷேத்திரத்தில் இருந்து ஹைதராபாத்துக்கு கொண்டு வருவதற்கு ரூ. 5 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போது காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள யுவராஜுக்கு மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

## காஞ்சியில் தொடரும் மழை பாதிப்பு: 8 ஏரிகளில் உடைப்பு, 16 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் மூழ்கின



காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊத்துக்காடு, நத்தபேட்டை, அல்லாபாத், வையாவூர், களியனூர், புத்தகரம், தென்னேரி, நீஞ்சல் மடுவு ஆகிய 8 ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் 20 கிராமங்கள் மற்றும் 16 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

வடகிழக்கு பருவமழை தீவிர மடைந்து கடந்த இரண்டு நாட்கள் கனமழை கொட்டி தீர்த்தது. காஞ்சிபுரம் பகுதியில் மட்டும் நேற்று முன்தினம் 342 மிமீ மழை பெய்தது. இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது. காஞ்சி நகரத்துக்குள் ஓடும் மஞ்சள்நீர் கால்வாயில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நத்தபேட்டை, அல்லா பாத், வையாவூர் ஏரிகள் நிரம்பி வெளியேறியதால் கரைகள் பலவீன மடைந்து உடைப்பு ஏற்பட்டது.

இதனால் களியனூர், புத்தகரம், தென்னேரி, ஊத்துக்காடு ஆகிய ஏரிகளுக்கு ஒரேநேரத்தில் 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் சென்றது. இதனால், நேற்று ஒரேநாள் இரவில் அந்த ஏரிகள் நிரம்பி உபரி நீர் பாய்ந்ததில் அதன் கரைகளும் உடைப்பு ஏற்பட்டது.

இதில், ஊத்துக்காடு ஏரியில் 30 அடி ஆழம் கொண்ட கரை யைத் தாண்டி வெள்ளம் பெருக் கெடுத்ததால் 40 அடி அகலம் மற்றும் 20 அடி உயரம் கொண்ட கரையில் சுமார் 300 அடி நீளத்துக்கு உடைந்தது. இதனால், அந்த ஏரியிலிருந்து 12 ஆயிரம் கன அடி நீர் வெளியேறியதால், அப்பகுதியிலிருந்த சுமார் 18 கிராமங்களைச் சூழ்ந்து வெள்ளநீர் கரைபுரண்டு ஓடியது.

மேலும், வாலாஜாபாத்-வண்ட லூர் 100 அடி சாலையில் 5 அடி உயரத்துக்கு வெள்ளம் சென்ற தால், அச்சாலையில் போக்கு வரத்து நிறுத்தப்பட்டது. இதனால், மக்கள் பெரும் அவதிக்குள்ளா கினர். ஏரியிலிருந்து வெளியேறும் தண்ணீர், தென்னேரியிலிருந்து செங்கல்பட்டு நீஞ்சல் மடுவுக்குச் செல்லும் கால்வாயில் பாய்ந்து, பாலாறு மற்றும் களத்தூரான் கால்வாயில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதில் நீஞ்சல் மடுவு ஏரியிலும் உடைப்பு ஏற்பட்டது. இதனால், செங்கல்பட்டு அருகே திம்மாவரம், மகாலட்சுமி நகர் குடியிருப்புகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. அப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியேற முடி யாமல் தவிக்கின்றனர். இவர் களை, செங்கல்பட்டு தீயணைப்புத் துறையினர் படகில் சென்று பத்திர மாக மீட்டனர்.

இந்த வெள்ளப்பெருக்கால் ஆத்தூர், பாலூர், வில்லியம் பாக்கம், கொளத்தூர், கிதிரிப் பேட்டை பகுதிகளில் பயிரிடப்பட்டி ருந்த 16 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் நீரில் மூழ்கின. இது குறித்து 'தி இந்து' சார்பில் ஆட்சி யரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து உடைப்பைச் சரி செய்ய அதிகாரி களுக்கு அவர் உத்தரவிட்டார்.

இதுகுறித்து ஊத்துக்காடு விவசாயிகள் கூறும்போது, 'உடைப்பு ஏற்பட்டுள்ள ஊத்துக் காடு ஏரிகரை, நீர்வள நிலவளத் திட்டத்தில் ரூ.57 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டது. பணிகளை அதிகாரிகள் முறையாகச் செய்ய வில்லை. கரையைச் சீரமைப்பதாகக் கூறி, அதற்குப் பலமாக இருந்த மரங்களை வேரோடு அகற்றினர். மரங்களை அகற்றிய பகுதியில் சிறிதளவு கூட மண் கொட்டப்பட்டதால் கரை பலவீனமடைந்தது. அதனா லேயே கரை உடைந்தது. கரை உடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டதும், அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தோம். அதிகாரி களோ கரையில் உடைப்பு ஏற் படாது என அலட்சியமாகப் பதில் அளித்தனர். ஆனால் சுமார் 8 மணிநேரத்தில் கரை உடைந்தது.

ஏரியிலிருந்து அனைத்து நீரும் வெளியேறி வருகிறது. தகவல் அளித்தும் அதிகாரிகள் இங்கு வரவில்லை. தற்போது 'தி இந்து'வின் முயற்சியால் மாவட்ட

ஆட்சியர் ஏரியைப் பார்வையிட்டுக் கரையைப் பலப்படுத்தப் பொதுப் பணித்துறைக்கு உத்தர விட்டுள்ளார்' என்றனர்.

இதனிடையே ஸ்ரீபெரும்புதூர் பெரிய ஏரி, முள்ளிபாக்கம் ஏரியி லும் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி கூறியதாவது:

மாவட்டத்தில் ஒரேநாளில் 35 செ.மீ., மழைபெய்ததால், பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியில் அதிகளவு மழைபெய்ததால் ஏரிகள் நிரம்பி உபரிநீர் வெளியேறி வருகிறது. இதனால், மேற்கூறிய பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதிகாரிகள் சம்பவ இடங்களுக்கு நேரில் சென்று சீரமைப்பு பணி களை மேற்கொண்டுள்ளனர். ஊத்துக்காடு ஏரி உடைப்பை 6 ஆயிரம் மணல் மூட்டைகளைக் கொண்டு பலப்படுத்துமாறு பொதுப்பணித்துறைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னத்தி ஏர் 9: எல்லாம் இயற்கை பார்த்துக் கொள்ளும்



இயற்கைவழி வேளாண் வரலாற்றில் திருநெல்வேலி மாவட்டம் புளியங்குடிக்கு முதன்மையான பங்கு உண்டு. 'புளியங்குடி இரட்டையர்கள்' என்று அழைக்கப்படும் கோமதிநாயகம், அந்தோணிசாமி ஆகிய இருவரும் இயற்கைவழி வேளாண்மையில் மூத்தவர்கள், முன்னோடிகள்.

**சாதனை விளைச்சல்**

இயற்கைவழி வேளாண்மை என்பது சிறிய பண்ணைகளில்தான் வெற்றிகரமாக சாத்தியப்படும் என்ற உண்மை ஒருபுறம் இருந்தாலும், பெரிய அளவு நிலப்பரப்பிலும் இயற்கைவழி வேளாண்மையை வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்று மெய்ப்பித்தவர் அந்தோணிசாமி.

நெல், எலுமிச்சை, கரும்பு, காய்கறி என்று பல்வேறு பயிர்களிலும் ரசாயன உரத்தைப் பயன்படுத்தாமலேயே சாதனை விளைச்சல்களை இவர் பெற்றுள்ளார். பொதுவாக வேதி உப்பு உரங்களைப் பயன்படுத்தி விளைச்சல் எடுக்கும் உழவர்களைக் காட்டிலும், இவர் சற்றுக் கூடுதலாக விளைச்சல் எடுப்பதுதான் நாம் கவனிக்க வேண்டியது.

**பசுந்தாள் உரம்**

நெல்லில் எவ்வித வெளி இடுபொருள் செலவுமின்றி, விளைச்சல் வீழ்ச்சியின்றி ஆண்டுதோறும் தொடர்ச்சியாக மகசூல் எடுத்துவருகிறார். நாட்டு ரக விதைகளைப் பயன்படுத்துகிறார். இவரது அடிப்படையான நுட்பம் பசுந்தாள் உரங்களைத் தொடர்ந்து மண்ணில் சேர்ப்பதுதான். மண்ணை வளப்படுத்தும் உத்தியான பசுந்தாள் உரச்செடிகளை முதலில் விதைத்து மடக்கி உழுகிறார்.

அத்துடன் 'தொழியை' நன்றாக ஊற விடுகிறார். நல்ல 'தொழி' மணம் வரும்வரை காத்திருக்கிறார். இதுதான் அடிப்படை என்பது, இவருடைய அனுபவப் பாடம். இதனால் ஏராளமாக நுண்ணுயிர்ப் பெருக்கம் ஏற்படுகிறது. நன்மை செய்யும் குச்சிலங்கள் (பாக்டீரியாக்கள்) பெருகுவதால் காற்றில் உள்ள தழைச்சத்து மண்ணுக்குள் சேர்க்கப்படுகிறது.

**காய்ச்சல், பாய்ச்சல்**

அதன் பிறகு நடவு செய்கிறார். நட்ட பதினைந்தாம் நாள் ஒரு லிட்டர் மாட்டுச் சிறுநீருடன் பத்து மடங்கு நீர் சேர்த்துத் தெளிப்பு கொடுக்கிறார். களைகளைக் கட்டுப்படுத்த நடவு வயலில் ஆறு நாட்களுக்கு நீரை நிறுத்துகிறார். அதன் பின்னர் காய்ச்சலும் பாய்ச்சலுமாகவே நீர் கொடுக்கிறார், தொடர்ந்து நீர் கட்டுவது இல்லை.

நட்டு இருபத்தைந்தாம் நாள் ஒரு லிட்டர் மீன்பாகுக் கரைசலுடன், 100 லிட்டர் நீர் சேர்த்துத் தெளிக்கிறார். ஒரு ஏக்கருக்கு இது போதுமானதாக உள்ளது. நட்ட ஐம்பதாவது நாள் ஒரு லிட்டர் மூலிகை பூச்சிவிரட்டியுடன் 10 லிட்டர் நீர்

சேர்த்துத் தெளிக்கிறார். அதன் பின்னர் ஏழு நாள் கழித்து ஆவூட்டம் 250 மில்லியுடன், 10 லிட்டர் நீர் சேர்த்துத் தெளிக்கிறார்.

தொடர்ச்சியாகக் காய்ச்சலும் பாய்ச்சலுமாக நீர் பாய்ச்சிவருகிறார். பயிர் சோர்வாக இருந்தால் மீண்டும் ஒரு முறை மீன்பாகு தெளிக்கிறார். கதிர் நாவாய்ப் பூச்சி, பூஞ்சாளத் தாக்குதல் ஏதும் இருப்பதாகத் தெரிந்தால், நன்கு விளைந்த - ஒடித்தால் மஞ்சள் நிறச் சாறு வரும் தன்மையாக உள்ள சோற்றுக் கற்றாழை மடல் ஒரு கிலோ எடுத்துக்கொண்டு, அத்துடன் அரைக் கிலோ சிறு பற்கள் கொண்ட வெள்ளை பூண்டு, 1 கிலோ நயம் துளசி இலை ஆகியவற்றைச் சேர்த்து நன்கு ஆட்டி எடுத்துக்கொள்கிறார். இந்தக் கரைசல் 1 கிலோவுடன் 10 லிட்டர் நீரைச் சேர்த்துத் தெளித்துவிடுகிறார். இது நல்ல பூச்சிவிரட்டி, பூஞ்சாளக் கொல்லியாக வேலை செய்கிறது.

**செலவில்லா விவசாயம்**

‘எனது வயலில் இயற்கை வழி வேளாண்மையைக் கைக்கொண்ட பின்னர் ஒரு சதுர மீட்டரில் 4 வகையான தட்டான்கள் பறந்துகொண்டிருக்கின்றன. இன்னும் குழவிகள் போன்ற பூச்சிக் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் இருக்கின்றனர். இப்போது சொல்லுங்கள் வேதி வேளாண்மையைவிட எனக்கு என்ன கூடுதலாகச் செலவு ஆகிவிட்டது' என்று நெஞ்சை உயர்த்திப் பெருமிதமாகத் தனது பட்டறிவைப் பகிர்ந்துகொள்கிறார்.

இதையெல்லாம் சொல்லிவிட்டு, மற்றொரு இன்ப அதிர்ச்சியையும் கொடுக்கிறார். ‘இந்த வேலைகளெல்லாம் முதல் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குத்தான், பின்னர் எதுவுமே செய்ய வேண்டியதில்லை. இயற்கை தானாகவே தன்னைச் சரிசெய்துகொள்ளும். நான் இப்போது எதுவும் கொடுப்பதில்லை. வண்டிக்கு டீசலும் மோட்டாருக்கு மின்சாரமும் மட்டுமே நான் வெளியிலிருந்து வாங்குகிறேன்' என்று அதிரடியாகச் சொல்கிறார் அந்தோணிசாமி.

*(அடுத்த வாரம்: நீரும் உரமும் இல்லாத கரும்பு சாகுபடி)*

*கட்டுரையாளர், சூழலியல் எழுத்தாளர் மற்றும் இயற்கை வேளாண் வல்லுநர் தொடர்புக்கு: adisilmail@gmail.com*

*அந்தோணிசாமி தொடர்புக்கு: 9942979141*

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## சென்னை அடையாறு உள்ளிட்ட பகுதி மக்களுக்கு எச்சரிக்கை: செம்பரம்பாக்கம் ஏரி இன்னும் 2 மணி நேரங்களில் திறக்கப்படலாம்



சென்னை, நவ.16-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த ஒருவாரமாக பெய்துவரும் பெருமழையின் விளைவாக முக்கியமான ஏரிகள் நிரம்பி வழிகின்றன.

நேற்றிலிருந்து இன்று காலைவரை விடிய விடிய பெய்த பெருமழையால் சிறிய ஏரிகள், குளங்களும் நிரம்பின. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களாக திகழும் பூண்டி, சோழவரம், செம்பரம்பாக்கம் மற்றும் ரெட் ஹில்ஸ் ஏரிகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகின்றது.

குறிப்பாக, இன்று காலையில் இருந்து சென்னை செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்துகொண்டிருக்கும் நீரின் வரத்து வினாடிக்கு பத்தாயிரம் கனடியாக உள்ளது. வழக்கமாக, செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 21 அடியை எட்டியதும், ஏரியின் கரைச்சுவர் உடைவதை தடுக்கும் வகையில் மதகுகளின் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படும்.

ஆனால், சென்னையின் பல பகுதிகளில் ஏற்கனவே வெள்ளநீர் பெருக்கெடுத்து

ஓடுவதால் இன்றுமட்டும் நீர்மட்டம் 22 அடியை எட்டியதும் உபரி நீரை வெளியேற்ற அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போதைய நீர்வரத்தை கணக்கிட்டுப் பார்த்தால் இன்னும் 2 மணிநேரத்தில் அதாவது நண்பகல் 12 மணியளவில் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து மதகு திறந்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சென்னை அடையாறு, கிண்டி, கோட்டூர்புரம், காந்தி நகர், பெசன்ட் நகர், ஆலந்தூர், வேளச்சேரி, தரமணி, பெருங்குடி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் சென்று தங்கிக் கொள்ளும்படி இந்த செய்தியின் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## வேலூர் மாவட்டத்தில் தொடர் மழையால் 1000 வீடுகள் சேதம்: 89 ஏரிகள் நிரம்பின



வேலூர், நவ.16–

வேலூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இடைவிடாத தொடர் மழை காரணமாக நீர்நிலைகள் நிரம்பி வருகின்றன. சில இடங்களில் ஏரிகளின் கரைகளில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சீரமைக்கும் பணியில் பொதுப்பணித்துறையினர் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்மழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் வீடுகளும் இடிந்து வருகின்றன. கடந்த 9–ந்தேதி 50 வீடுகளும், 10–ந்தேதி 132 வீடுகளும் சேதம் அடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் 11–ந்தேதி 156 வீடுகளும், 12–ந்தேதி 131 வீடுகளும், 13–ந்தேதி 357 வீடுகளும் சேதம் அடைந்துள்ளன. 14– ந்தேதி 187 வீடுகள் சேதம் அடைந்துள்ளது.

நேற்று அதிகாலையும் மழை தொடர்ந்த நிலையில் நேற்று மட்டும் 64 வீடுகள் சேதம் அடைந்துள்ளன. இதன் மூலம் மாவட்டத்தில் இதுவரை 1,077 வீடுகள் சேதம் அடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், 17 கால்நடைகள் பலியாகி உள்ளது. நேற்றும் தொடர்ந்து மழை பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்மழையால் ஏரிகளும் நிரம்பி வருகின்றன. 12–ந்தேதி நிலவரப்படி 14 ஏரிகளும், 13–ந்தேதி நிலவரப்படி 65 ஏரிகளும் முழுமையாக நிரம்பின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தொடர்ந்து மழை பெய்து வருவதால் மற்ற ஏரிகளுக்கும் தற்போது தண்ணீர் வரத்து உள்ளது.

நேற்று பெய்த தொடர் மழையால் வேலூரை அடுத்த அலமேலுமங்காபுரம் ஏரி முழுவதுமாக நிரம்பி தண்ணீர் மறுகால் பாய்ந்தது. இதை அறிந்த வேலூர் மாநகராட்சி மேயர் கார்த்தியாயினி, மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ஆகியோர் கொட்டும் மழையில் அலமேலுமங்காபுரம் ஏரியை நேரில் சென்று பார்வையிட்டனர். பின்னர் ஏரி நிரம்பி மறுகால் பாயும் இடத்தில் கற்பூரம் ஏத்தி, தேங்காய் உடைத்து பூஜை செய்தனர். அதை தொடர்ந்து மலர் தூவி தண்ணீர் மறுகால் பாய்வதை வரவேற்றனர்.

நேற்றைய நிலவரப்படி மாவட்டம் முழுவதும் 89 ஏரிகள் முழுமையாக நிரம்பி உள்ளது. மேலும் 63 ஏரிகளில் 75 சதவீதமும், 93 ஏரிகளில் 50 சதவீதமும், 210 ஏரிகளில் 25 சதவீதமும் தண்ணீர் நிரம்பி உள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மற்ற ஏரிகளில் தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. அதனால் இன்னும் பல ஏரிகள் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் 3 அணைகள் உள்ளன. இதில் ஆண்டியப்பனூர் அணை கடந்த 11–ந்தேதி நிரம்பியது. இந்த அணையில் தற்போது 67.43 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. நீர் வெளியேற்றம் 67.43 கன அடியாக உள்ளது.

இதேபோல் முக்கிய அணைகளில் ஒன்றான மோர்தானா அணைக்கு 16.976 கன அடி நீர் வரத்தும், ராஜா தோப்பு அணைக்கு 2.08 கன அடி நீர்வரத்தும் உள்ளது. நீர்வரத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் நேற்று பெய்த மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:–

வேலூர் – 136, ஆம்பூர் – 74.2, ஆலங்காயம் – 104.8, காவேரிப்பாக்கம் – 141.6, வாலாஜா – 62.1, திருப்பத்தூர் – 40.1, ஆற்காடு – 144.3, குடியாத்தம் – 82.4, மேல் ஆலத்தூர் – 89

**விடிய, விடிய சாரல் மழை: நீலகிரி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை**



ஊட்டி, நவ. 16–

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் 28–ந்தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. தொடர்ந்து விட்டுவிட்டு சாரல் மழையும், அவ்வப்போது கனமழையும் பெய்து வருகிறது.

தொடர் மழை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் கடுங்குளிர் நிலவுகிறது. நேற்று மாலை பெய்ய தொடங்கிய சாரல் மழை விடிய, விடிய நீடித்தது. இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை விடப்படுவதாக கலெக்டர் சங்கர் அறிவித்துள்ளார்.

மழை காரணமாக மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ள தோட்டங்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இதனால் கேரட், முட்டைகோஸ், பீட்ரூட், காலிபிளவர், முள்ளங்கி ஆகியவை தண்ணீரில் மூழ்கி அழுகி வருகின்றன.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் மந்தாடா, கேத்தி, அச்சனக்கல், லவ்டேல் சந்திப்பு மற்றும் குன்னூர் பகுதியில் கன்னி மாரியம்மன் கோவில் தெரு, காந்திபுரம், பாரத் பாகர், மரப்பாலம், நஞ்சப்பசத்திரம் பகுதிகள் நிலச்சரிவு அபாயம் உள்ள

இடங்களாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த பகுதிகளை பேரிடர் மீட்பு படையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

ஊட்டி – கூடலூர் சாலை, ஊட்டி – கோத்தகிரி சாலையில் சாய்ந்து விழும் ராட்சத மரங்கள் மற்றும் மண்சரிவுகளை தீயணைப்பு படையினர் உடனுக்குடன் அகற்றி வருகிறார்கள். இதனால் போக்குவரத்தில் எந்த பாதிப்பும் இல்லை.

## சென்னை அடையாறு உள்ளிட்ட பகுதி மக்களுக்கு எச்சரிக்கை: செம்பரம்பாக்கம் ஏரி இன்னும் 2 மணி நேரங்களில் திறக்கப்படலாம்



சென்னை, நவ.16-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கடந்த ஒருவாரமாக பெய்துவரும் பெருமழையின் விளைவாக முக்கியமான ஏரிகள் நிரம்பி வழிகின்றன.

நேற்றிலிருந்து இன்று காலைவரை விடிய விடிய பெய்த பெருமழையால் சிறிய ஏரிகள், குளங்களும் நிரம்பின. சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களாக திகழும் பூண்டி, சோழவரம், செம்பரம்பாக்கம் மற்றும் ரெட் ஹில்ஸ் ஏரிகளில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகின்றது.

குறிப்பாக, இன்று காலையில் இருந்து சென்னை செம்பரம்பாக்கம் ஏரிக்கு வந்துகொண்டிருக்கும் நீரின் வரத்து வினாடிக்கு பத்தாயிரம் கனடியாக உள்ளது. வழக்கமாக, செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 21 அடியை எட்டியதும், ஏரியின் கரைச்சுவர் உடைவதை தடுக்கும் வகையில் மதகுகளின் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படும்.

ஆனால், சென்னையின் பல பகுதிகளில் ஏற்கனவே வெள்ளநீர் பெருக்கெடுத்து ஓடுவதால் இன்றுமட்டும் நீர்மட்டம் 22 அடியை எட்டியதும் உபரி நீரை வெளியேற்ற அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போதைய நீர்வரத்தை கணக்கிட்டுப் பார்த்தால் இன்னும் 2 மணிநேரத்தில் அதாவது நண்பகல் 12 மணியளவில் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து மதகு திறந்து விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, சென்னை அடையாறு, கிண்டி, கோட்டூர்புரம், காந்தி நகர், பெசன்ட் நகர், ஆலந்தூர், வேளச்சேரி, தரமணி, பெருங்குடி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் சென்று தங்கிக் கொள்ளும்படி இந்த செய்தியின் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## வடகிழக்கு பருவமழை தீவிரம்: கண்மாய்—நீர் தேக்கங்களில் கலெக்டர் ராஜாராமன் ஆய்வு



விருதுநகர், நவ. 15–

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருவதையொட்டி விருதுநகர் மாவட்டம் திருத்தங்கல் பெரியகுளம் கண்மாய், உறிஞ்சிகுளத்திற்கு செல்லும் கால்வாய், ஈஞ்சார் செங்குளம் கண்மாய் மற்றும் கிருஷ்ணபேரி கண்மாய் ஆகிய நீர்த்தேக்கங்களுக்குச் சென்று உறுதி தன்மை குறித்து கலெக்டர் ராஜாராமன் ஆய்வு மேற்கொண்டார்.

அதன்பின் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முழுவீச்சில் முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள முதல் அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளதைத்யொட்டி வருவாய், வளர்ச்சி, காவல், தீயணைப்பு, மின்சாரம், பொதுப்பணி உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்களைக் கொண்டு பல்வேறு மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு 24 மணிநேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, பொதுப் பணித்துறை அலுவலர்கள் நீர்நிலைகளை கண்காணித்து சேதம் இருப்பின் உடனடியாக சரி செய்து அவ்வப்போது கலெக்டர் அலுவலகத்துக்கு அறிக்கை அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பகுதியிலும் மழையின் அளவு குறித்து உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலர்களுக்கு விடுமுறை மறுக்கப்பட்டு பணியில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் ஒவ்வொரு வட்டத்திலும், வட்டார வளர்ச்சி அலுவலகங்களிலும் மணல் மூடைகளை தயார் நிலையில் வைக்க

பொதுப்பணித்துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மழை காரணமாக ஏற்படும் மின்தடையை சரி செய்து தடையில்லா மின்சாரம் வழங்க பகுதி வாரியாக மின்துறை பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வட்டம் மற்றும் வட்டார வளர்ச்சி சேத விவரங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் தனியாக வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் வாரியாக தனி வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நிலையிலான அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தங்கள் பகுதிகளில் மழை காரணமாக ஏற்படும் சேத விவரங்களை உடனுக்குடன் தெரிவிக்கும் பொருட்டு கலெக்டர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறை, கட்டணமில்லா தொலைபேசி 1077 எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

மழைக் காலங்களில் பரவும் காய்ச்சல்களை தடுக்கும் வகையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் போதுமான மருந்துகளுடன் மருத்துவர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். வடகிழக்கு பருவமழை தொடர்பாக பொதுமக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை பாதுகாப்பு பணியில் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் உள்ளது. மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் - அதிகாரிகள் எச்சரிக்கை



வங்க கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது வலுப்பெற்று காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறியது.

இதனால் தமிழகத்தில் கடலோர பகுதி மற்றும் அனேக இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் எச்சரித்துள்ளது. கடலிலும் சூறைக்காற்று வீசும் என்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதையடுத்து குமரி மாவட்டத்தில் மீனவர்கள் இன்று முதல் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று மீன்வளத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

கடலில் 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும். மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. எனவே இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறி உள்ளனர்.

இந்த அறிக்கை ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள 42 மீனவ கிராமங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஊர் தலைவர்கள், பங்கு தந்தைகள், மீனவ சங்க பிரதிநிதிகள், விசைப்படகு, நாட்டுப்படகு சங்க பிரதிநிதிகள் உள்பட பலருக்கும் இந்த அறிக்கையை அதிகாரிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

புயல் சின்னம் தீவிரம் அடைந்து வருவதையடுத்து கடலில் மீன்பிடித்து கொண்டிருக்கும் மீனவர்களும் கரைக்கு திரும்பி வருகிறார்கள். இதனால் கட்டு மரங்கள், விசைப்படகுகள் கடற்கரை ஓரத்தில் நங்கூரம் பாய்த்து நிறுத்தப்பட்டிருந்தது.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகளில் இருந்து உபரிநீர் திறக்கப்பட்டு உள்ளதால் தேங்காய்பட்டணம் துறைமுகத்தில் உள்ள மீனவர்கள் தங்களது படகுகளையும் வள்ளங்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு சென்றனர்.

## கேரளாவில் 18–ந்தேதி வரை கனமழை எச்சரிக்கை: பாலக்காட்டில் 62 வீடுகள் இடிந்தன

திருவனந்தபுரம், நவ. 15–

கேரள மாநிலம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக இந்த மழை கனமழையாக நீடிக்கிறது. இதனால் கேரளாவில் வடக்கு மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கிறது.

தலைநகரான திருவனந்தபுரத்திலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தம்பானூர், சிறையின்கீழ், கரமனை போன்ற பகுதிகளில் சாலைகளே தெரியாத அளவுக்கு மழைநீர் வெள்ளம்போல ஓடுகிறது. மேலும் கரமனை ஆற்றிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

கோட்டையம், மலப்புரம், ஆலுவா, ஆற்றின்கல், பாலக்காடு, போன்ற பகுதிகளில் ஆதிவாசிகள் கிராமங்கள் அதிகளவில் உள்ளது. இந்த பகுதியில் உள்ள ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் ஆதிவாசிகள் தங்கள் கிராமங்களை விட்டு வெளியே வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மக்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாலக்காட்டில் கனமழையால் 62 வீடுகள் இடிந்துவிட்டன. ஆனால் அதிர்ஷ்டவசமாக உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது. தொடர்ந்து அந்த பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. கோட்டையம், மலப்புரம் பகுதிகளில் ரெயில் தண்டவாளங்கள் மழை நீரில் மூழ்கி உள்ளதால் அந்த பகுதியில் ரெயில் சேவை பாதிக்கப்பட்டு உள்ளது.

தொடர்ந்து 18–ந்தேதி வரை கனமழை பெய்யும் என்று வானிலை மையம் எச்சரித்து உள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் வெள்ள தடுப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. கேரளாவின் கடலோர பகுதிகளிலும் பலத்த மழை பெய்வதால் கடல் கடும் சீற்றத்துடன் காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.

விகடன்

**வடகிழக்குப் பருவமழை தீவிரமடையும்: வானிலை ஆய்வு மையம் தகவல்!**

**சென்னை:** நாளை(ஞாயிறு)முதல் தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடையும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.அதனால் மீனவர்கள் கடலுக்குள் செல்லவேண்டாம் என்றும் எச்சரித்துள்ளது.




"வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறியது. இது மேலும் வலுவடைந்து அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும்.

இதனால் வடகிழக்கு பருவமழை நாளை(ஞாயிறு) முதல் மேலும் தீவிரமடையும். வட கடலோர மாவட்டங்களில் மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும். எனவே, மீனவர்கள் நாளை முதல் கடலுக்குச் செல்ல வேண்டாம்" என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

**டீ குடிப்பது புற்றுநோயைத் தடுக்கும்: அமெரிக்க ஆராய்ச்சியாளர் தகவல்!**

**கொல்கத்தா:** கருப்பு மற்றும் கிரீன் டீ குடிப்பது புற்றுநோயைத் தடுக்கும் என்று இந்திய தேயிலை சங்க கருத்தரங்கில் அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஹசன் முக்தார் தெரிவித்துள்ளார்.இந்திய தேயிலை சங்கம் சார்பில் கொல்கத்தாவில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு கூறுகையில்,

" டீ உலகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு அற்புதமான உற்சாக பானம். டீயில் பல மருத்துவ பயன்கள் இருக்கின்றன. புற்றுநோய் வராமல் தடுக்கும் பல எதிர்ப்பு சக்திகள் டீயில் இருக்கின்றன. நீரழிவு மற்றும் இதய சம்பந்தப்பட்ட நோய்களையும் வராமல் தடுக்கும் ஆன்டி-

ஆக்ஸிடென்டுகள் டீயில் அதிகம் உள்ளன. வழக்கமாக டீ குடிக்கும் பழக்கமுள்ளவர்களிடம் நடத்திய ஆராய்ச்சியில் அவர்களுக்கு மற்றவர்களை விட கேன்சர் வரும் அபாயம் குறைவாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.



கேன்சரை ஊக்குவிக்கும் செல்கள் உற்பத்தியாவதை டீ தடுக்கிறது. இதனால், தோல், கல்லீரல், புராஸ்டேட், நுரையீரல் மற்றும் மார்பகங்களில் கேன்சர் உருவாவது தடுக்கப்படுகிறது. மேற்கத்திய நாடுகளை விட அதிக அளவில் டீ அருந்தும் பழக்கம் ஜப்பான், சீனா நாடுகளில் உண்டு. மருத்துவப் பயன்கள் அதிகம் கொண்ட ஒரே உற்சாக பானம் டீ மட்டுமே என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். நிறுவனங்கள் பிரம்மாண்ட அளவில் விளம்பரம் செய்து டீயின் மருத்துவ பயன்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.